
மைத்திரி
ஆட்சி... ...
நிலையான நாடு



அதிமேதகு சனாதிபதி அவர்களின் செய்தி

2015 சனவரி 08 ஆம் திகதி இலங்கை மக்களினால் எமக்கு அளிக்கப்பட்ட ஏகோபித்த ஆதரவானது வரலாற்றுமிக்கதானதுடன் அது மக்கள் என்னுடன் ஏற்படுத்திக் கொண்ட நிபந்தனைகளின் கீழ் அளித்த ஏகோபித்த ஆதரவும் ஆகும். அது நிலமானிய முறையில் மூழ்கிப்போயிருந்த அரசாங்கத்தை நவீன சனநாயக முறையை நோக்கி திசை திருப்பு வதற்காக அளித்த ஆதரவுமானது. நான் அந்தப் பொறுப்பை சரியாக நிறைவேற்றுகின்றேனா என்பது பற்றி மக்கள் உச்சக்கட்டக் கவனத்தோடு இருக்கின்றார்கள் என்பது அவர்களின் பதில்களின் மூலம் உறுதியாவதுடன் உச்சக்கட்டப் பொறுப்புணர்ச்சியோடும் ஒழுக்கத்தோடும் அதனைச் செயலாட்சி செய்வதற்காக அது எனக்கு ஊக்குவிப்பாகவே அமைகிறதென்பதும் குறிப்பிடத்தக்கது.

நாங்கள் அவ் ஆதரவுக்காக உச்சகட்ட நியாயத்தை நிறைவேற்ற வேண்டியிருப்பதாலேயே சனாதிபதி செயலகத்தினால் நிறைவேற்றப்படும் பணிப்பொறுப்பை முறைசார் திட்டமொன்றின் கீழ் கோவைப்படுத்தி இலக்கிடப்பட்ட கால எல்லை மற்றும் விடய எல்லைகளுக்குட்பட்டு செயலாட்சி செய்கின்றோம்.

இந்தச் செயலாற்றுகை அறிக்கையானது, கடந்த ஆண்டில் சனாதிபதி செயலகத்தினால் செயலாட்சி செய்வதற்குத் திட்டமிடப்பட்டதும் ஆண்டின் இறுதியில் எய்து கொள்ளப்பட்ட துமான பணிகள் பற்றிய அண்ணளவான குறிப்பாகும். இதனை இந்நாட்டு மக்களுக்காகத் திறந்து அவர்களின் பதில்களின் மூலம் மீள்போசணை அடைய எதிர்பார்க்கின்றோம்.

எமது அரசு, நாட்டில் கட்டியெழுப்ப உடன்பட்டுக் கொண்ட சனநாயக ரீதியிலான நிறுவனக் கட்டமைப்பின் மையமாவது சனாதிபதி செயலகமாகும். இவ்வலுவலகத்தில் சேவையாற்றும் பெரிய, சிறிய அனைத்து பதவிகளிலுமுள்ள ஊழியர்களிடம் அதற்காக ஒப்படைக்கப்படும் கடமையும் மிகப் பெரிதானது. இருந்து வந்த முறையில் காணப்பட்ட எல்லாக் குறைபாடுகளையும் தவிர்த்துக்கொண்டு உற்பத்திப் பெருக்கம் மிக்க பயனுறுதியான சேவையை நிறைவேற்றுவதற்கு எமக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பை நினைவூட்டவும் இச் செயலாற்றுகை அறிக்கை உதவியாக இருக்கும்.

அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.



சனாதிபதியின் செயலாளர் அவர்களின் செய்தி

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் காண்பிக்கப்படுகின்ற ''மக்களின் இறைமையை'' பாதுகாக்கும் மாபெரும் பொறுப்பில் பங்காளிகளாக இலங்கையின் மீயுயர் சட்டத்தால் அளிக்கப்படுகின்ற விசேட சட்ட ஏற்பாடுகளின் கீழ் நியமனங்களைப் பெற்றுள்ள சனாதிபதி அலுவலகத்தின் ஆளணியினர் உண்மையாகவே பாக்கியசாலிகள் ஆவர். பொதுவான அலுவலக முறைமைக்கு அப்பாற்பட்ட மக்களது அபிலாசைகளின் மீதே இலக்கிடப்பட்ட மிக முக்கியமான அத்துடன் கைவிட முடியாத சேவைக் கட்டுப்பாடும் அதன்மூலம் உருவாகிய பாரிய பொறுப்புக்களும் எம்மைச் சார்ந்துள்ளது.

தெளிவானதும் தூய்மையானதும் அர்த்தமுள்ளதுமான சனநாயக முறையின் ஒரே வழியான மக்கள் போராட்டத்தின் பயனாக அனைத்து இலங்கை மக்களும் தற்போதைய சனாதிபதி அவர்களுக்கு தமது முழுநிலை உரித்தினை அளித்து வழங்கிய ஏகோபித்த ஆதரவில் உள்ளடங்கிய பல்வேறு மக்கள் அபிலாசைகளை யதார்த்தமாக்கும் சவால்மிக்க எனினும் காலத்தின் பணிப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்குரிய கூட்டு நிர்வாக ரீதியான பொறுப்புக்கு சனாதிபதியின் பணித்தொகுதியினராகிய நாம் கட்டுப்பாடுடையவர்கள் ஆவோம்.

சனாதிபதி செயலகத்தின் அனைத்து ஆளணியும் அது முழுவதையும் தவறாது நிறை வேற்றுவதற்காக அவ்வாறே தம்மை அர்ப்பணிக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நம் அனைவரும் ஒவ்வொரு பிரிவுகளாகத் தொகுதியமைத்துக் கொண்டு இவ்வாறு கோவைப்படுத்திச் சமர்ப்பிப்பதாவது, அவ்வனைத்துக் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக புதிய முகாமைத்துவத் திறமுறைகளைச் சிறந்த மட்டத்தில் பிரயோகிப்பதன் மூலம் சனாதிபதி செயலகம் அடைந்துள்ள முன்னேற்றமாகும். சனாதிபதியின் செயலாளர் என்ற வகையில் 2016ஆம் ஆண்டில் அடையப்பட்டவை குறித்து அதற்காக உதவிக்கரமளித்த செயலகத்தின் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோன்று எமது இலக்குகள் முடிவடையவில்லை என்பதையும் நினைவூட்டி வருங்காலத்திலும் சுதந்திர, சுயாதீன, அத்துடன் சுபீட்சம்மிக்க இலங்கையை உருவாக்கும் பயணத்தின் எமக்குரிய பணியைக் குறையாது நிறைவேற்றுவதற்காகச் சனாதிபதி செயலகத்தின் ஆளணியினர் ஆகிய நாம் அனைவரும் திடசங்கற்பம் பூண்டு உறுதியளிக்கின்றோம்.

ஒஸ்டின் பர்ணாந்து
சனாதிபதியின் செயலாளர்.

பொருளடக்கம்

		பக்க இல.
01.	அறிமுகம்	01
02.	செயலாளர் பணியகம்	03
03.	பிரத்தியேகச் செயலாளர் பிரிவு	11
04.	பதவியினர் பிரதானிப் பிரிவு	12
05.	அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட நடவடிக்கைப் பிரிவு	17
06.	உள்ளக நிர்வாகப் பிரிவு	21
07.	மனிதவள அபிவிருத்திப் பிரிவு	26
08.	நிறுவனக் கூட்டிணைப்புப் பிரிவு	29
09.	கொள்கைக் கூட்டிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு	35
10.	நிதி முகாமைத்துவப் பிரிவு	39
11.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	41
12.	சனாதிபதி நிதியப் பிரிவு	42
13.	அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு	45
14.	பொதுமக்கள் தொடர்புப் பிரிவு	116
15.	ஊடகப் பிரிவு	118
16.	நல்லிணக்கப் பிரிவு	123
17.	தகவல் தொழில்நுட்பப் பிரிவு	124
18.	போக்குவரத்துப் பிரிவு	129
19.	சட்டத்துறைப் பிரிவு	133
20.	மருத்துவச் சேவைகள் பிரிவு	136
21.	தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணியகம்	138
22.	சனாதிபதி விசாரணை ஆணைக்குழு	152

அறிமுகம்...

நவீன சனநாயகத்தின் ஆரம்ப நாடாகக் கருதப்படும் கிறீசியின் அதான்ஸ் நகரத்தில் அமைந்துள்ள அதீனா தேவகன்னிகைக்காக நிறுவப்பட்ட பாத்தினன் தேவாலயத்தின் கட்டிடக்கலை உருவிற்கமைய நிர்மாணிக்கப்பட்ட தற்கால சனாதிபதி செயலகமானது இலங்கையில் சனநாயகம் பற்றிய வரலாற்றின் பல திசைகளுக்கு மையப்படுத்தப்பட்ட மாளிகையாகும். பல்வேறு சட்டத்திருத்தங்களின் கீழ் பல பெயர் களினால் அழைக்கப்பட்ட இந்நிறுவனத்தை ஆங்கில ஆட்சியிலிருந்து எமக்கு உரித்தான அரும்பெரும் கலாச்சாரக் கொடையாகவும் கருதலாம்.

தற்காலத்தில் நாட்டின் அரச தலைவரின் அனைத்துப் பொறுப்புக்கள் மற்றும் பணிப்பொறுப்புக்களைச் செயலாட்சி செய்யும், ஒருங்கிணைப்பு மற்றும் முகாமை செய்யும் அரச நிறுவனமாவது சனாதிபதி செயலகமாகும். நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களைப் போன்று சனாதிபதி செயலகமும் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்புடையதாகும் என்பதுடன் சகல வகை பொறுப்புகள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு வகைகூறும் பொறுப்பையும் கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசியல் கட்டமைப்பினுள் நல்லாட்சியை நிலைநாட்டும் முகமாக நியமிக்கப்பட்ட தற்கால சனாதிபதியின் கீழ் மேற்கூறிய பொறுப்பானது மிகவும் பாரதூரமாக அமைவது போன்று அரசாங்கத் தகவல்கள் பொதுமக்களின் உரிமையாக்கப்பட்டுள்ள தற்காலத்தில் சனாதிபதி செயலகத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பான தகவல்களும் வெளிப்படையான தகவல்களாக மாறியுள்ளன.

இலங்கையின் சிவில் சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தராகவும் அரச சேவையின் தலைவராகவும் பதவிவழி மூலம் நியமிக்கப்படும் சனாதிபதியின் செயலாளரின் கீழ் சனாதிபதி செயலகத்தினால் திட்டமிடப்பட்டு செயலாட்சி செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த ஆண்டில் எய்திய முன்னேற்றம் இச் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடங்கியுள்ளது.

சனாதிபதி அலுவலகம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது.

- செயலாளர் பணியகம்
- பிரத்தியேகச் செயலாளர் பிரிவு
- பதவியினர் பிரதானிப் பிரிவு
- அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட நடவடிக்கைப் பிரிவு
- உள்ளக நிர்வாகப் பிரிவு
- மனிதவள அபிவிருத்திப் பிரிவு
- நிறுவனக் கூட்டிணைப்புப் பிரிவு
- கொள்கைக் கூட்டிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- சனாதிபதி நிதியப் பிரிவு
- அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு
- பொதுமக்கள் தொடர்புப் பிரிவு
- ஊடகப் பிரிவு
- நல்லிணக்கப் பிரிவு
- போக்குவரத்துப் பிரிவு
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு
- சட்டத்துறைப் பிரிவு
- மருத்துவச் சேவைகள் பிரிவு
- தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணியகம்
- சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

செயலாளர் பணியகம்

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் சார்பில் சனாதிபதியின் செயலாளர் அவர்களினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளை மிக இலகுபடுத்தலும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் இப் பிரிவால் செய்யப்படுகின்றது. அதற்கமைய இப்பிரிவின்மூலம் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் பின்வருமாறு

பிரதான செயற்பாடுகள்/நோக்கங்கள்

- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கைக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்
- வெளிநாட்டு அரச தலைவர்கள் வருகைதரும்போது அதிமேதகு சனாதிபதி அவர்களின்/ சனாதிபதியின் செயலாளர் அவர்களின் ஆலோசனைகளுக்கமைவாக விழாக்களை ஏற்பாடு செய்தலும் கூட்டிணைப்புப் பணிகளைப் புரிதலும்
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் மேற்கொள்ளப்படும் கடிதங்கள் தொடர்பான பணிகள்
- சனாதிபதியின் செயலாளர் பணியகத்தினால் கூட்டப்படும் கூட்டங்களுக்காக அழைப்பிதழ்களைத் தயாரித்தல், கூட்டங்களை நடாத்துவதற்கான வசதிகளை விசாரித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தல், கூட்டக் குறிப்புகளைப் பேணல், தொடராய்வு என்பவற்றுடன் சகல ஏற்பாட்டுப் பணிகளுக்கும் வசதியளித்தல்
- அமைச்சுச் செயலாளர்களின் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் / சனாதிபதியின் செயலாளர் அவர்களின் ஆலோசனைகளுக்கமைய சுற்றறிக்கைகளை வெளியிடுதல்
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் நியமனங்கள் தொடர்பான பணிகள்
- சர்வகட்சி மாநாடு மற்றும் சர்வமதங்களின் மாநாட்டுக்குரிய ஏற்பாட்டுப் பணிகளும் ஒருங்கிணைப்பும்
- அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் சொத்துக்கள், பொறுப்புகள், பிரகடனங்களை சமர்ப்பிக்கவேண்டிய நபர்களிடமிருந்து குறித்த சொத்துக்கள், பொறுப்புக்கள், பிரகடனங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பணிகள்
- சனாதிபதி சுற்றாடல் முன்னோடி தங்கப்பதக்கம் பெறுநர்களின் நேர்முகப் பரீட்சைகளில் நடுவர் சபை தலைவர் பதவியில் செயலாற்றுதல்
- அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் சனாதிபதியின் செயலாளரிடம் முன்வைக்கப்படும் பலவித முறைப்பாடுகள், கோரிக்கைகள் முதலியன தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களின்/சனாதிபதியின் செயலாளரின் ஆலோசனைகளின்படி செயலாற்றுதல்
- சனாதிபதி செயலகம் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்குச் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் தொடர்பான பணிகள்
- அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் சனாதிபதி செயலகத்தினால் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் அதிவிசேட செயற்பாடுகள் தொடர்பாக மாதாந்த அறிக்கையொன்றைத் தயாரித்தல்

- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கமைய சகல அமைச்சுக்களினதும் உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

- சனாதிபதி அலுவலகத்தின் அனைத்துச் சுற்றறிக்கைகள்/உள்ளகக் கடிதங்கள், அரசாங்க நிர்வாக முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகள்/நிதிச் சுற்றறிக்கைகள் மற்றும் வேறு அதிவிசேட சுற்றறிக்கைகள்/கடிதங்கள் தொடர்பான சேவைகளை இற்றைப்படுத்திப் பேணுதல்

2016 ஆம் ஆண்டில் அடைந்து கொண்டவை

- **பாகிஸ்தான் பிரதமர் திரு. நவாப் ஷெரீப் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



2016 சனவரி மாதம் 04 ஆந் திகதி தொடக்கம் 06 ஆந் திகதி வரை இலங்கைக்கு மூன்று நாட்களுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட பாக்கிஸ்தான் பிரதமர் அவர்கள் சனவரி மாதம் 05 ஆந் திகதி இலங்கைக்கு வருகை தந்ததை முன்னிட்டு நடாத்தப்பட்ட உத்தியோகபூர்வ வரவேற்பு விழாவின் கூட்டிணைப்புப் பணிகளும் ஏற்பாட்டுப் பணிகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர் சார்பில் நடாத்தப்பட்ட இரவு விருந்துபசாரத்திற்காக அழைப்பிதழ்களைத் தயாரித்தல் மற்றும் அதிதிகளின் பங்குபற்றலை உறுதிப்படுத்திக் கொள்ளல் போன்ற பணிகளும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- **நியூசிலாந்து பிரதமர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்திற்காக இலங்கைக்கு வருகை தந்த நியூசிலாந்து பிரதமர் அவர்கள் சனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்தமையை முன்னிட்டு 2016 பெப்ரவரி மாதம் 24

ஆந் திகதி இடம்பெற்ற விழாவின் வரவேற்பு பணிகள் இரு கட்சி சார்பான கலந்துரையாடல்கள், உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுதல்கள் மற்றும் நியூசிலாந்து பிரதமர் அவர்கள் சார்பில் இடம்பெற்ற விசேட இரவு விருந்துபசாரத்தின் கூட்டிணைப்பு பணிகள் செயலாளர் பணியகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- ***ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், பான் கீ மூன் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்***

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், பான் கீ மூன் அவர்கள் இலங்கைக்கு வருகைதந்ததை முன்னிட்டு 2016 ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி இடம்பெற்ற இராப்போசன விருந்துபசார ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இப்பரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

- **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கிடையிலான மோதல் பற்றிய கலந்துரையாடல்**



2016 ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர்களுக்கிடையிலான மோதல்கள் பற்றிய கலந்துரையாடலின் கூட்டிணைப்பு பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- **நோர்வே பிரதமர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்**



இரண்டு நாளைய உத்தியோகபூர்வ விஜயத்திற்காக நோர்வே பிரதமர் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தமையை முன்னிட்டு 2016 ஆகஸ்ட் மாதம் 12 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விழாவின் வரவேற்புப் பணிகள், இரு கட்சிசார் கலந்துரையாடல் மற்றும் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடும் பணிகள் என்பவற்றை கூட்டிணைக்கும் பணிகள் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

- **சீனாவின் சிச்சுவான் பிரதேசத்தில் இருந்து வருகைதந்த முதலீட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்**

2016 நவம்பர் மாதம் 22 ஆந் திகதி அமைச்சுக்களின் செயலாளர்கள் பலர் சீனா உத்தியோகத்தர்கள் மற்றும் சீனாவின் சிச்சுவான் பிரதேசத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டதுடன் அந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தலும் கூட்டிணைத்தலும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

➢ பிடெல் கஸ்த்ரோ ஞாபகார்த்த விழா



கியுபாவின் தலைவர் திரு.பிடெல் கஸ்த்ரோ அவர்களின் ஞாபகார்த்தத்தினை முன்னிட்டு 2016 டிசம்பர் மாதம் 02 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட வைபவத்திற்காக உரிய அதிதிகளிடம் அழைப்பிதழ்களை அனுப்பி வைக்கும் பணி செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

➢ டஜிகிஸ்தான் சனாதிபதி அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்



மூன்று நாளைய உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த டஜிகிஸ்தான் சனாதிபதி அவர்கள் சார்பில் 2016 டிசெம்பர் 12 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற வரவேற்பு விழா, இரு கட்சிசார் கலந்துரையாடல், ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடல் மற்றும் அவர் சார்பாக சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட இரவு விருந்துபசாரத்தின் ஏற்பாடுகளும் கூட்டிணைப்புப் பணிகளும் இந்தப் பிரிவின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

➢ அதிமேதகு சனாதிபதி அவர்களின் மலேசியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம்



2016 டிசம்பர் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் டிசம்பர் 17 ஆம் திகதி வரை அதிமேதகு சனாதிபதி அவர்கள் மேற்கொண்ட மலேசியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயத்தின் கூட்டிணைப்புப் பணிகள் வெளி நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேற் கொள்ளப்பட்டது.

➢ நத்தார் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட விசேட இரவு விருந்துபசாரம்



நத்தார் தினத்தை முன்னிட்டு 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆந் திகதி சனாதிபதி மாளிகையில் நடாத்தப்பட்ட விசேட நத்தார் இரவு விருந்துபசார வைபவத்தின் ஏற்பாட்டுப் பணிகளும் கூட்டிணைப்புப் பணிகளும் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள் ளப்பட்டது.

➢ அமைச்சுக்களின் செயலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள்

சனாதிபதியின் செயலாளர் அவர்களின் தலைமையில் 2016.02.19, 2016.09.20 மற்றும் 2016.11.11 ஆகிய திகதிகளில் மூன்று கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அந்தக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

➢ போக்குவரத்துத் துறையின் பிரச்சினைகள் தொடர்பாக நடத்தப்பட்ட கலந்துரையாடல்

- இணைந்த நேர அட்டவணையைச் செயற்படுத்தல், கொழும்பு நகரத்தினுள் பஸ் வண்டிகளைத் தரித்து வைக்கும் இடங்களில் உள்ள தடைகள், பெஸ்றியன் மாவத்தையில் மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் இருப்பூர்த்தி நிலையம் மற்றும் இலத்திரனியல் பஸ் கட்டணம் செலுத்தும் முறையைப் பிரபல்யப்படுத்தல் முதலிய போக்குவரத்துத்துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி 2016.02.29 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் கூட்டிணைப்பு மற்றும் ஏற்பாட்டு பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமையில் 2016.03.28 ஆந் திகதி இடம்பெற்ற போக்குவரத்துத்துறையின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான குழுவின் கலந்துரையாடல் பணிகள் செயலாளர் பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

- அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில் 2016.07.22 ஆந் திகதி இடம்பெற்ற இபோச யை மீளமைத்தல் மற்றும் இணைந்த நேர அட்டவணையை செயற்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் பற்றி இபோச தொழிற்சங்க பிரதி நிதிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் ஏற்பாடுகளும் கூட்டிணைப்பு பணிகளும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

➢ அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் /விழாக்கள் மற்றும் கலந்துரையாடல்கள்



- 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் விளையாட்டுக்கள் மற்றும் உடல்நல மேம்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அமைச்சுக்களுக்கிடையிலான நடவடிக்கைக் குழுவைக் கூட்டிணைத்தல் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2016 சனவரி மாதம் 04 ஆந் திகதி கூடிய அந்தக் குழுவின் கூட்டிணைப்பு மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் ஆரம்ப வைபவம் 2016.01.25 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் சனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

- கொஸ்கம, சாலாவ ஆயுதக் களஞ்சியத்தொகுதியில் ஏற்பட்ட திடீர் வெடிப்பு நிலைமை தொடர்பாக 2016.06.17 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் கூட்டிணைப்பும் ஏற்பாட்டு பணிகளும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

- 2016.07.22 ஆந் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டத்தில் இடம்பெற்ற அரச உத்தியோகத்தர்களின் சந்திப்பின் கூட்டிணைப்பு மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் செயலாளர் பணியகத்தின் பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்டது.

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2016.08.23 ஆந் திகதி இடம்பெற்ற சமூர்த்தி முகாமையாளர்களின் தொழில்சார் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடலின் ஏற்பாடுகளும் கூட்டிணைப்பும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

➢ சனாதிபதி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள்

- சனாதிபதி அவர்களின் செயலாளர் அவர்களது தலைமையில் நகரங்கள் மற்றும் முச்சந்திகளைச் சார்ந்துள்ள அதிர்ஷ்ட லொத்தர் சீட்டு விற்பனைச் சாலைகளை அகற்றுதல் பற்றி 2016.02.08 ஆந் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் ஏற்பாடுகள் மற்றும் கூட்டிணைப்பு பணிகளை மேற்கொள்ளல்.

- சனாதிபதியின் செயலாளர் அவர்களது தலைமையில் 2016.07.14 மற்றும் 2016.07.18 ஆகிய திகதிகளில் இடம்பெற்ற மொரகஹகந்த நீர்த்தேக்கத்தினைத் திறந்து வைக்கும் தேசிய வைபவம் மற்றும் அதற்கிணையான ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களைப் பற்றிய கலந்துரையாடல்களின் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

➢ ஏனைய விழாக்கள்

- மேற்கு மாகாண பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் 2016.04.08 ஆந் திகதி ரத்துபஸ்வெல பிரதேசத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவம் காரணமாக காயப்பட்டோர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வைபவத்தின் ஏற்பாடுகள் மற்றும் கூட்டிணைப்புப் பணிகள் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் 2017.01.02 ஆந் திகதி இடம்பெற்ற "நிலைபேறான யுகம்" அபிவிருத்தி நோக்கைப் பிரகடனப்படுத்தும் வைபவம் மற்றும் 2017.01.08 ஆந் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிலைபேறான யுகத்தின் மூன்றாண்டு ஆரம்பம் " தேசியப் பேரவைச் சார்பில் முன் ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளலும் 2016 ஆண்டின் டிசம்பர் மாத இறுதியில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

➢ மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய அறிக்கை

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையிலும் சனாதிபதி அவர்களின் செயலாளரது தலைமை யிலும் சனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் பல நிகழ்ச்சித் திட்டங்கள், கூட்டங்கள், விழாக்களுக்கு உரிய சுருக்கத் தகவல்களை 2016 டிசெம்பர் மாதம் வரை மாதாந்தம் தயாரித்து செயலாளருக்குச் சமர்ப்பித்தல்.

➢ சுற்றறிக்கைளை வெளியிடுதல்

கீழ்க்குறிப்பிட்டுள்ள இலக்கம் கொண்ட சுற்றறிக்கைகள் இப்பிரிவினால் வெளியிடப்பட்டது.

தொடர் இல	சுற்றறிக்கையின் பெயர்	சுற்றறிக்கை இலக்கம்	திகதி
01.	மாவட்டச் செயலாளர்கள்/அரச அதிபர்களைக் கடமைகளில் பங்குபற்றச் செய்தல் (சனாதிபதியின் செயலாளர் அவர்களின் கையொப்பத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை)	SP/SB/02/16	2016.01.12
02.	மாவட்டச் செயலாளர்கள்/அரச அதிபர்களைக் கடமைகளில் பங்குபற்றச் செய்தல் (அதிமேதகு சனாதிபதி அவர்களின் கையொப்பத்தில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை)	SP/SB/02/17	2016.01.18

➢ சனாதிபதி சுற்றாடல் முன்னோடி தங்கப் பதக்கம் பெறுநர்களின் நேர்முகப் பரீட்சைகளில் நடுவர் குழாம்களின் பணிகள்

2016 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் நடாத்தப்பட்ட சுற்றாடல் முன்னோடிப் பதக்கங்களை அளிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகளில் நடுவர் குழாம்களில் பணியாற்றல்.

திகதி	இடம்
2016 மே 24 மற்றும் 27	கு/குளியாபிட்டிய மத்திய மகா வித்தியாலயம்
2016 யூன் 23 மற்றும் 24	அம்பாந்தோட்டை, அக்குருவெல கனிஷ்ட வித்தியாலயம்
2016 யூன் 30	காலி மாவட்டச் செயலகம்
2016 யூலை 25 மற்றும் 26	கு/உடபதலவ சுதர்ஷன மகா வித்தியாலயம்
2016 ஆகஸ்ட் 02	கு/உடபதலவ சுதர்ஷன மகா வித்தியாலயம்
2016 ஆகஸ்ட்16	மாத்தறை மாவட்டச் செயலகம்
2016 ஆகஸ்ட்19	களுத்துறை மாவட்டச் செயலகம்
2016 ஆகஸ்ட் 29	களுத்துறை மாவட்டச் செயலகம்
2016 செப்டெம்பர்13 மற்றும் 14	பொ/திம்பு/அலவாகும்புர மகா வித்தியாலயம்

- **மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்களை நியமித்தல்**

01. ஆறு மாவட்டங்களுக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் ஐந்துபேரையும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள் இருவரையும் நியமிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

02. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் இணைத் தலைவர்கள் 14 பேரையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 25 பேரையும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் இணைத் தலைவர் ஒருவரையும் நியமிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **சனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விழா வைபவங்களில் சிறப்பு அதிதிகளை வரவேற்பதற்கும் ஆசனங்களை ஒழுங்கு செய்வதற்குமாக உத்தியோகத்தர்களை நியமித்தல்**



அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் சனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற விழாக்களின்போது சிறப்பு அதிதிகளை வரவேற்பதற்கும் அவர்களுக்காக ஆசனங்களை ஒழுங்கு செய்வதற்குமாக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் நியமனப் பணிகள், கூட்டிணைப்புப் பணிகள், பயிற்சிகள் மற்றும் அதன் கண்காணிப்புப் பணிகள் செயலாளர் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

பிரத்தியேகச் செயலாளர் பிரிவு

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்/ ஆலோசனைகள் மற்றும் பணிப்புரைகள்/கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் முதலியன தொடர்பாக உச்ச கட்ட வினைத்திறமையுடன் செயற்படுதல்

பிரதான செயற்பாடுகள்/ நோக்கங்கள்

செயற்பாடுகள்	நோக்கங்களை அடைதல்
அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள், ஆலோசனைகள், பணிப்புரைகள், கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் முதலியன தொடர்பாக உச்ச கட்ட வினைத்திறமையுடன் செயற்படுதல்.	பணிப்புரைகள் கிடைக்கப் பெற்றவுடன் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
அதிமேதகு சனாதிபதி அவர்கள் சம்பந்தப்படும் விழாக்கள், கூட்டங்கள் மற்றும் சந்திப்புகள் ஆகிய சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு நாட் பதிவேட்டைத் தயாரித்தல். அதற்கமைய நாளாந்த நிகழ்ச்சித் திட்டங்களை வரிசைப்படுத்தல், கூட்டிணைத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளையும் உத்தியோகத்தர்களையும் அறிவுறுத்தல்.	அதே
அதிமேதகு சனாதிபதி அவர்களின் பணிப்புரைக்கமைய அவரது கையொப்பத்திற்காகக் கடிதங்களைத் தயாரித்தல்.	அதே
அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனம் செலுத்தப்பட வேண்டிய கடிதங்கள்/அறிக்கைகள் மற்றும் விழாக்களுக்குரிய அழைப்புக்கள் என்பவற்றை குறிப்பிட்டு அவரிடம் சமர்ப்பித்தலும் அதற்காக வழங்கப்படும் பணிப்புரைகளின்படி நடவடிக்கை எடுத்தலும்.	அதே
அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களினால் அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை எடுத்தல்.	அதே
கிடைக்கும் தபால் தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்தல்/ கடிதக் கோவைகளைத் தயாரித்தல் மற்றும் பேணல்.	அதே

பதவியினர் பிரதானிப் பிரிவு

அறிமுகம்

சனாதிபதியின் பணித்தொகுதியை முகாமை செய்தல், அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பணிகளைக் கூட்டிணைத்தல், கொழும்பு மற்றும் வெளி மாகாணங்களில் விழாக்கள் மற்றும் கூட்டங்களைக் கூட்டிணைத்தல், சனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கும் கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாக அவரது ஆலோசனைகளுக்கமைய நடவடிக்கை எடுத்தல் முதலியன சனாதிபதி பதவியினர் பிரதானி அலுவலகத்தின் முக்கிய பொறுப்புக்களாகும்.

முக்கிய நோக்கங்கள்

1. சனாதிபதியின் பணித்தொகுதியை விதிமுறையாக முகாமை செய்தல்.
2. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
3. கொழும்பு மற்றும் வெளி மாகாணங்களில் இடம்பெறும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்களையும் விழாக்களையும் கூட்டிணைத்தல்.
4. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் பயனான முறையில் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கூட்டிணைப்புச் செய்தல்.
5. அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கின்ற கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
6. "பொலன்னறுவையை எழுச்சிப் பெறச் செய்வோம்" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுற்றாடல், வலுசக்தி துறைகளின் கருத்திட்டங்களைக் கூட்டிணைத்தல்.

2016 ஆம் ஆண்டில் அடைந்து கொண்டவை

1. சனாதிபதியின் பணித்தொகுதியை விதிமுறையாக முகாமை செய்தல்.

சனாதிபதி செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அனைத்துப் பணித்தொகுதிகளுக்காக விடய ஆய்வறிவு, அலுவலக முறைகள், ஒழுக்கம் மற்றும் உளப்பாங்குகளை விருத்திச் செய்வதற்காக செயலமர்வுகளை நடாத்துதலும், தொடராய்வு செய்தலும்.

2. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்திலும், வெளிக்கள கடமைகளின்போதும் பாதுகாப்புத் தலைவர்களுடன் கலந்துரையாடி கூட்டிணைப்பு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல். அதிமேதகு சனாதிபதி அவர்களினதும், அலுவலகத்தினதும் தகவல்கள் அநாவசிய தரப்பினர்களிடம் சென்றடைவதைத் தவிர்ப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை அலுவலகத்தினுள் கொண்டு வருவதைக் கட்டுப்படுத்தல். செயலகத்திற்கு வருகை தருபவர்களின் உள்வரவு/ வெளியேறுதலையும் கண்காணிக்கும் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

3. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கொழும்பு மற்றும் வெளி மாகாணங்களில் இடம்பெறும் கூட்டங்களையும், விழாக்களையும் கூட்டிணைப்புச் செய்தல்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களில் பங்குபற்றும் கூட்டங்களின் ஆயத்தம், அவை பங்குபற்றத் தகுந்தவையா, அங்கே உரை நிகழ்த்துவது உசிதமானதா, அழைக்கப்பட்டுள்ள அத்துடன் பங்குபற்றுவதை உறுதிப்படுத்தியுள்ள அதிதிகள் பற்றிய தகவல்கள், கூட்டத்தின் நோக்கம், கூட்டத்திற்கு அல்லது வைபவம் நடைபெறும் இடத்திற்கு நுழையும் பாதை விபரங்கள், ஊடகங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன பற்றி முழுமையான விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்டு அது பற்றி அதிமேதகு சனாதிபதி அவர்களை அறிவுறுத்தல்.

இத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக சனாதிபதியின் கூட்டிணைப்புச் செயலாளர்களுக்கு மாவட்டங்களின் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன் அவ் உத்தியோகத்தர்களிடம் இருந்தும் சனாதி பதியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களை மாவட்டச் செயலாளர்களைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளும் வேலைத்திட்டமொன்றும் செயற்படுகின்றது.

4. அதிமேதகு சனாதிபதி அவர்களின் கூட்டங்களும், கலந்துரையாடல்களும் பயனான முறையில் இடம்பெறுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்கு பற்றும் சனாதிபதி செயலகத்தில் இடம்பெறும் கூட்டங்கள், நோக்கங்கள், முன்வரக் கூடிய பிரச்சினைகள், கோரிக்கைகள், பங்குபற்றும் தரப்புகள், கூட்ட நோக்கத்தின்படி நேரடியாகச் சம்பந்தப்படும் நிறுவனங்கள் என்பவற்றைப் பற்றி முழுமையாக அறிந்து கொண்டு அதிமேதகு சனாதிபதி அவர்களை அறிவுறுத்தல்.

அதிமேதகு சனாதிபதி அவர்கள் கூட்டத்திற்குப் பிரவேசிக்கமுன் நிகழ்ச்சிநிரல், கலந்துகொள்வோர்கள் பற்றிய தகவல்கள், கூட்டத்தின் நோக்கத்திற்குரிய பின்னணித் தகவல்களுடன் கூடிய கோவை, குறிப்பு மற்றும் குறிப்புக்கள் வைக்கத் தேவையான காகிதப் பொருட்கள் மேசையின் மேல் தயாராக வைக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல். சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஊடகங்களைத் தயார்படுத்திக் கொள்ளல்.

5. அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்கின்ற கடிதங்கள், கருத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ஏனைய செய்திகள் தொடர்பாகப் பதிலளித்தல்.

அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கப் பெறுகின்ற மக்கள் கோரிக்கைகளை இனமறிந்து கொண்டு வகுப்பீடு செய்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பி வைத்தல். அனுப்பப்பட்ட கடிதங்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தொடராய்வு செய்தல். மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்குள்ள தடைகளை இனமறிந்து அவற்றை அகற்றி விடுவதற்காகக் கையாள வேண்டிய நடைமுறைகள் செயற்படுகின்றனவா என்பதைத் தொடராய்வு செய்தல். மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

6. **"பொலன்னறுவையை எழுச்சி பெறச் செய்வோம்" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வேறு சுற்றாடல், வலுசக்தி உள்ளிட்ட கருத்திட்டங்களைக் கூட்டிணைத்தல்.**

1. **"பொலன்னறுவையை எழுச்சி பெறச் செய்வோம்" மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (சுருக்கம்)**

அபிவிருத்தித் துறை	2016ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	2016ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை
கல்வி – பாடசாலை அபிவிருத்தி	107	13
பிரிவேனாக்கள் அபிவிருத்தி	8	0
சுகாதாரம் - 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது	3	2
சுகாதாரம் - பொலன்னறுவை பொது மருத்துவசாலைப் பணிகள்	20	2
சுகாதாரம் - பிரதேச மருத்துவசாலைகள் அபிவிருத்தி	15	0
குடிநீர் வழங்கல்	85	74
நகர வீதி அபிவிருத்தி	10	1
பிரதேச வீதி அபிவிருத்தி	27	0
கிராமிய வீதி அபிவிருத்தி	441	376
நீர்ப்பாசன சீர்திருத்தம்	9	9
மகாவலி அபிவிருத்தி	9	8
கமத்தொழில்	1	1
கமநலசேவைகள்	4	4
கால்நடை வளங்கள் அபிவிருத்தி	5	5
கூட்டுறவு அபிவிருத்தி	1	1
வனசீவராசிகள் பாதுகாப்பு	1	1
வனங்கள் பாதுகாப்பு	1	1
கிராமிய பொருளாதார அபிவிருத்தி	1	1
விளையாட்டுத்துறை மற்றும் கலாசார அலுவல்கள்	4	0
தொல்பொருள் இடங்களைப் பேணல்	2	1
மதநிலையங்களை அபிவிருத்தி செய்தல்	27	0
நகர அபிவிருத்தி	6	0
மாணிக்கம்பட்டி கால்வாயைப் புனரமைத்தல்	1	1
தேசிய நீரின உயிரியல் அபிவிருத்தி	1	0
அரங்கப்பீடங்கள்	4	0
பொது வசதிகள்	12	10
நூதனசாலை மற்றும் தகவல் நிலையம்	1	0
இடர் முகாமைத்துவம்	101	101
பள்ளேகம குளத்தைப் புனரமைத்தல்	1	0
மொத்தம்	**908**	**612**











லங்காபுர கல்அமன பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட நெற் களஞ்சியம்

கம்பஹா பஹல யாகொட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

1. கம்/ சுவர்ணபாலி மகாவித்தியாலயத்தை மேம்படுத்தல்
2. பஹல யாகொடயை மையமாகக் கொண்ட வீதி முறைமையை விரிவாக்கலும் விஸ்தரித்தலும்
3. பஹல யாகொட புகையிரத நிலையத்தை நவீனமயப்படுத்தல்
4. பஹல யாகொட மற்றும் அண்மித்த நகரங்களை ஒன்றிணைக்கும் போக்குவரத்து முறைமையை மேம்படுத்தல்
5. யாகொட – ஒருத்தொட்ட வயல்வெளியுடன் சம்பந்தப்பட்ட நீர்ப்பாசனப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தலும் கமத்தொழிலின் உற்பத்திப் பெருக்கத்தை உயர்வடையச் செய்தலும்
6. பஹல யாகொட குடிநீர் வசதிகளை விஸ்தரித்தல்
7. பஹல யாகொட பிரதேசத்தின் இளைஞர், யுவதிகளது தொழிற்பயிற்சி மற்றும் திறன்களை மேம்படுத்தல்







அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட நடவடிக்கைப் பிரிவு

அறிமுகம்

அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டதிட்டங்களின் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களால் செயற்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக வேண்டிய உதவிகளை அளித்தல்

பிரதான செயற்பாடுகள் / நோக்கங்கள்

மேற்கூறிய அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் நியதிச்சட்டங்களுக்கமைய வினைத்திறனுடனும், சுறுசுறுப்பாகவும் நிறைவேற்றல்.

2016 ஆம் ஆண்டில் அடைந்து கொண்டவை

I. அரசியலமைப்பினாலும் வேறு நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கமைவாகவும் அதிமேதகு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பலவித பதவிகளுக்கான நியமனங்கள்.	
• அமைச்சரவை அமைச்சர்கள்	01
• இராஜாங்க அமைச்சர்கள்	01
• பிரதி அமைச்சர்கள்	02
• மாகாண ஆளுநர்கள்	02
• உயர்நீதிமன்ற நீதிபதிகள்	02
• மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்	03
• சட்டமாஅதிபர்	01
• மேல்நீதிமன்ற நீதிபதிகள்	08
• நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	01
• மேல்நீதிமன்ற ஆணையாளர்கள்	01
• சனாதிபதி சட்டத்தரணிகள்	05
• இலங்கை நியாயாதிக்க நிறுவனத்தின் உறுப்பினர்கள்	01
• தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	23
• தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	03
• இணக்கச் சபை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	05

• சுயாதீன ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	
➢ தேசிய பெறுகை ஆணைக்குழு	01
➢ இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்	01
➢ தகவல் அறிந்து கொள்ளும் உரிமைகள் பற்றிய ஆணைக்குழு	05
➢ மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழு	01
• அமைச்சுக்களின் செயலாளர்கள்	09
• மாகாண பிரதம செயலாளர்கள்	02
• அரசியலமைப்புச் சட்டத்தின் 34 உறுப்புரைக்கமைய சனாதிபதி மன்னிப்பு வழங்குதல்	154
➢ நத்தார் வைபவத்தை முன்னிட்டு சனாதிபதி மன்னிப்பு வழங்குதல்	
➢ தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு சனாதிபதி மன்னிப்பு வழங்குதல்	
• படைதாங்கு சேவைகளின் தலைவர்கள்	
➢ வான்படைத் தளபதி	01
• பொலிஸ் மாஅதிபர்	01
• பல்கலைக்கழக வேந்தர்கள்	05
• பல்கலைக்கழக துணை வேந்தர்கள்	03
• கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் வேந்தர்	01
• தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் வேந்தர்	01
• தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்	01
• இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	01
• இலங்கை மன்றத்தின் உறுப்பினர்கள்	01
• பொது ஒப்பந்த உடன்படிக்கைப் பதிவாளர்	01
• உதவி பொது ஒப்பந்த உடன்படிக்கைப் பதிவாளர்	01
• சாரணிய தலைமையக ஆணையாளர்கள்	02
• சாரணியர் மாவட்ட ஆணையாளர்கள்	05
• தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உறுப்பினர்கள்	02
• தேசிய ஆரம்பக் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சி சபையின் உறுப்பினர்கள்	01

	• வயது வந்தோருக்கான தேசிய சபையின் உறுப்பினர்கள்	05
	• வலது குறைந்தோருக்கான தேசிய சபையின் உறுப்பினர்கள்	01
	• குற்றமொன்றின் பாதிப்புக்குட்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபையின் உறுப்பினர்கள்.	05
II.	காணி உறுதிகள், நீண்டகால குத்தகை முறிகள்	
	• நீண்டகால குத்தகை முறிகளை வழங்குதல்	220
	• அபிவிருத்தி செய்த காணிகளுக்காக கொடைப்பத்திரங்களை வழங்குதல்	290
	• ரணவிரு உறுதி வழங்குதல்	41
	• சுனாமி கொடைப்பத்திரம் வழங்குதல்	623
	• விகாரைகளுக்கான கொடைப் பத்திரங்கள்	52
	• இலங்கை முதலீட்டுச் சபையிடம் காணி வழங்கல்	01
	• நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் காணி கையளித்தல்	04
	• வீடமைப்பு அதிகார சபையிடம் காணி கையளித்தல்	05
	• மாற்றுக் காணி வழங்குதல்	72
	• மகாவலி குத்தகை முறிகள்	48
	• மகாவலி கொடைப்பத்திரம் வழங்குதல் (அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளுக்காக)	51
	• மகாவலி கொடைப்பத்திரம் வழங்கல் (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ்)	15284
	• மகாவலி விகாரைகள்	15
	• கங்கைக் கரையோர அபிவிருத்திச் சபையை ஒழித்துக் கட்டுவதன் பேரில் சேவையை இழந்த ஊழியர்களுக்கு கொடைப் பத்திரங்களின் பேரில் காணிகளை வழங்குதல்.	12
	• புதிய ரண்பிம கொடைப்பத்திரம் வழங்கல்	9092
	• அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் 3ஆம் பிரிவை இரத்துச் செய்தல்	175
	• அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் 4(1) பிரிவை இரத்துச் செய்து 4 (3) ஆம் பிரிவின் மூலம் புதிய கொடைப்பத்திரம் வழங்குதல்.	1886
	• நடுத்தர வகுப்பு காணிகள்	36
	• அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவை இரத்துச் செய்தல்.	53
III.	பெறுகை மேன்முறையீட்டுச் சபைகள்	
	• பெறுகை மேன்முறையீட்டுச் சபைக் கூட்டங்கள்	68
IV.	படைதாங்கு சேவைகளின் உறுப்பினர்களுக்கு வீரப்பதக்கம் அளித்தல்.	1357

V.	முப்படைகளுக்கு அதிகாரப் பத்திரம் வழங்குதல்	672
VI.	ADC வரவழைத்தல்	29
VII.	அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு விடுமுறைகளுக்காக அங்கீகாரம் வழங்கல்.	468
VIII.	சட்ட வரைவுகள் பற்றி மாகாணசபைகளின் அபிப்பிராயங்களைக் கேட்டறிதல்.	02
IX.	அமைச்சரவைக் குறிப்புகள், பத்திரங்கள் மற்றும் அவதானிப்புகளைச் சமர்ப்பித்தல்.	
	➢ அமைச்சரவைக் குறிப்புகள்	07
	➢ அமைச்சரவை பத்திரங்கள்	13
	➢ அமைச்சரவை அவதானிப்புகள்	02
X.	சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைக் கடிதங்களை வழங்குதல்	14

உள்ளக நிருவாகப் பிரிவு

அறிமுகம்

சனாதிபதி செயலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்களை உற்பத்தித் திறன்மிக்கதாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலக இட வசதிகள், பௌதிக வளங்கள் மற்றும் சேவைகள் வழங்குவதை முகாமை செய்தல் என்பன இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிப்பொறுப்பாகும்.

பிரதான செயற்பாடுகள் / நோக்கங்கள்

- சனாதிபதி அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் அலகுகளுக்குரிய இடவசதி, உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- விசேட அரச விழாக்களை ஏற்பாடு செய்தல். அவற்றிற்குரிய வசதிகளை ஏற்படுத்துவத்குத் தேவையான உள்ளக மற்றும் வெளியக தரப்புகளைக் கூட்டிணைத்துச் செயற்படுதல்.
- நீர்/மின்சார/தொலைபேசி விலைப்பட்டியல்களை தாமதமின்றிச் செலுத்துதல்.
- வருடாந்த பொருட்கள் மீளாய்வுச் சபைகளை நியமித்தல், பொருள் மீளாய்வுகளை நடாத்துதல், பொருட்கள் மீளாய்வுச் சபைகளின் அறிக்கைகளுக்கிணங்க அகற்றப்பட வேண்டிய பொருட்களை ஏலவிற்பனை செய்தலை/அழித்தலை மேற்கொண்டு உரியவாறு பொருட்பதிவொன்றை பேணுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.
- அனைத்துப் பிரிவுகள்/ கூறுகளிலிருந்து ஆவணகூடத்திற்கு அனுப்பப்படும் கடிதக்கோவைகளை விதிமுறையாக அடுக்கி வைப்பதற்கு / பேணுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல்.
- அலுவலகத்தின் அஞ்சல் கூற்றுக்குக் கிடைக்கப் பெறுகின்ற/வெளிப்புறம் அனுப்பப்படுகின்ற அஞ்சல்களை விதிமுறையாகத் தாமதமின்றி அத்துடன் பொறுப்புடன் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு/ கூறுகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சனாதிபதி அலுவலகத்துடன் இணைந்த சகல கட்டிடங்களினதும் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகளைக் கடற்படையின் பராமரித்தல் கூறின் ஒத்துழைப்புடன் முன்னுரிமைப்படி நிறைவேற்றுதல்.
- வருடாந்த பெறுகை செயன்முறையின் கீழ் ஆண்டுக்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்தல், வழங்குநர்களைப் பதிவு செய்தல், அதற்கமைய பொருட்களைக் கட்டளையிடுதல் மற்றும் பொருட்களை வழங்குதல்.
- சனாதிபதி அலுவலகத்தினால் தயாரிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அமைச்சரவைப் பத்திரங்கள், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் பற்றிய அவதானிப்புகள், வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள், பாராளுமன்ற வினாக்களுக்குரிய விடைகள், பல நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் அனுப்பப்படும் எழுத்தாவணங்கள் மற்றும் கிடைக்கப் பெறும் எழுத்தாவணங்கள் என்பவற்றை சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்தல் மற்றும் உரைபெயர்ப்புச் சேவைகளை வழங்குதல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரபுக்களின் இறுதிச்சடங்குகளுக்கு அனுதாபம் தெரிவித்தலும் கிடைக்கப்பெறும் ஆலோசனைகளுக்கமைய நடவடிக்கை எடுத்தலும், உரிய செலவு-களைத் தீர்த்தலும்.

2016 ஆம் ஆண்டின் அடைவுகள்

1. இராஜதந்திர விழாக்கள்

இராஜதந்திர விழாக்களை ஏற்பாடு செய்தலும் அவற்றின் அனைத்துக் கருமங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் சிறப்பான கருமமாகும். இராஜதந்திர விழாக்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வெளிநாட்டு அரச தலைவர்களின் வருகை/நியமனப் பத்திரம் வழங்கல் போன்ற விழாக்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பாக வெளிநாட்டு அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தல்.

- அதற்கிணையாக இணைத்துக் கொள்ள வேண்டிய அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை அழைப்பித்து சனாதிபதியின் செயலாளரது தலைமையில் ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல்களை நடாத்தி, மாண்புமிக்கதாக விழாக்கள்/கூட்டங்களை வெற்றிகரமாக நடாத்துவதற்குரிய வசதிகளை ஏற்படுத்தலும், கூட்டிணைத்தலும்.

- இராணுவ மரியாதை அணிவகுப்பிற்காக விசேட பீடத்தைத் தயாரித்தல், செங்கம்பளம் விரித்தல், இராணுவ மரியாதை அணிவகுப்புகள் மற்றும் பீரங்கி வேட்டுக்களுக்குரிய ஏற்பாடுகளை செய்தல்.

- அரச தலைவர்களின் சந்திப்பு. இருகட்சிசார் கலந்துரையாடல்கள் மற்றும் இருகட்சிசார் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடும் கருமங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்தல்.

- விருந்துபசாரங்கள் மற்றும் அலங்கரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- தேவையான சந்தர்ப்பங்களில் பல நிறுவனங்களுக்கிடையில் அனைத்து கூட்டிணைப்பு பணிகளையும் மேற்கொள்ளல்.

2016 ஆம் ஆண்டில் சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இராஜதந்திர வைபவங்கள்.

- 2016.01.05 – பாகிஸ்தான் பிரதமர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்
- 2016.02.24 – நியூசிலாந்து பிரதமர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்
- 2016.08.12 – நோர்வே பிரதமர் அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்



- 2016.09.01 – திரு.பான் கீ மூன் அவர்களை வரவேற்றல்
- 2016.09.05 – உலக சுகாதார அமைப்பின் உத்தியோகத்தர்களுக்கான இரவு நேர விருந்துபசாரம்.
- 2016.12.13 – தஜிகிஸ்தான் சனாதிபதி அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம்.



2. ஏனைய வைபவங்கள்

பின்வரும் வைபவங்களின்போது பல நிறுவனங்களுக்கிடையிலான அனைத்துக் கூட்டிணைப்பு பணிகள், விருந்துபசாரங்கள், அலங்கரிப்பு வேலைகள் மற்றும் ஏனைய வசதி ஏற்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளல்.

- 2016.01.08 ஆந் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சனாதிபதி பதவியேற்பு வைபவம்.
- 2016.01.08.09 ஆந் திகதிகளில் சனாதிபதியின் பதவியேற்பு சார்பில் சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற "பிரித்" வைபவம்.
- 2016.02.08 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற புத்தாக்குநர்களுக்கான சனாதிபதி விருது அளிக்கும் வைபவம்.
- 2016.06.08 ஆந் திகதி கோட்டை சனாதிபதி மாளிகையை மக்களின் பார்வைக்காகத் திறந்து வைத்தல்.
- 2016.06.13 ஆந் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 2015 சனவரி மாதம் தொடக்கம் பயணப்பாதை மற்றும் உலகளாவிய ரீதியிலான உறவுகளினுள் இலங்கை மாநாடு.
- 2016.06.19, 20 ஆந் திகதிகளில் பொலன்னறுவையில் இடம்பெற்ற அரச பொசன் வைபவம்.
- 2016.07.22 ஆந் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை அபிவிருத்தி சவால்கள் பற்றிய விசேட மாநாடு.
- 2016.08.16 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற வலது குறைந்த போர் வீரர்களுக்காக வீட்டு உறுதிகள் வழங்கும் வைபவம்.
- 2016.08.18 ஆந் திகதி கண்டி சனாதிபதி மாளிகையில் தலதா பெரஹரா முற்றுப் பெற்றதையிட்டு மேற்கொள்ளப்பட்ட தீர்த்தோற்சவம்.



- 2016.10.06 ஆந் திகதி கொழும்பு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சிறுநீரக நோய்த் தடுப்பிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு வசதிகளை ஏற்படுத்தல்.

- 2016.10.11 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கும் வைபவம்.

- 2016.10.18 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்தில் 2016 ஆம் ஆண்டில் ஆகச் சிறந்த விவசாய அமைப்புக்கு தாய்லாந்தின் செயலமர்வொன்றில் கலந்து கொள்வதற்காக விமானச்சீட்டுக்களை வழங்குதல்.

3. நியமனப்பத்திரம் வழங்கும் வைபவங்கள்.

- 2016.01.11 ஆந் திகதி கோட்டை மாளிகையில் நியமனப் பத்திரம் வழங்கப்பெற்ற நாடுகள்.

  - டென்மார்க் இராஜ்ஜியம்
  - காம்போடியா
  - ஈரான்
  - சிலி இராஜ்ஜியம்
  - சைப்பிரஸ்
  - செக் குடியரசு

- 2016.02.26 ஆந் திகதி சனாதிபதி அலுவலகத்தில் நியமனப் பத்திரம் வழங்கப்பெற்ற நாடுகள்

  - அவுஸ்திரேலியா
  - பிரசில்ஸ்

- 2016.04.22 ஆந் திகதி கோட்டை சனாதிபதி மாளிகையில் நியமனப் பத்திரம் வழங்கப்பெற்ற நாடுகள்.

  - மலேசியா
  - உருகுவே
  - ஹங்கேரியா
  - சொல்வீனியா
  - மாலி
  - முருசி
  - துர்க்கி

- 2016.07.21 ஆந் திகதி கோட்டை சனாதிபதி மாளிகையில் நியமனப் பத்திரம் வழங்கப்பெற்ற நாடுகள்

  - மெக்சிக்கோ
  - போர்த்துக்கல்
  - கீரிஸ்
  - அயர்லாந்து

- 2016.10.05 ஆந் திகதி மஹாகமசேக்கர மாவத்தை, சனாதிபதி உத்தியோக பூர்வ இல்லத்தில் நியமனப் பத்திரம் வழங்கப்பெற்ற நாடுகள்

  - பங்களாதேஷ்
  - ஜெர்மனி

- 2016.12.01 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் நியமனப் பத்திரம் வழங்கப்பட்ட நாடு.

  - கியூபா






4. இதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டினுள் அலுவலகத்தின் பல அலுவல்களுக்காக நடாத்தப்பட்ட 1155 கூட்டங்களுக்குத் தேவையான வசதிகளை அளித்தல்.

5. ஏனையவை

- சனாதிபதி செயலகத்திலும் அதன் கீழுள்ள சகல நிறுவனங்களிலும் பொருட்கள் மீளாய்வினை நடாத்தி உரிய பரிந்துரைகளை செயற்படுத்தல்.
- சனாதிபதி அலுவலகத்தின் அனைத்து கருமங்களுக்காகச் செலவிடப்பட்ட செலவுப் பட்டியல்களைத் தாமதமின்றிச் செலுத்துதல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் பயன்படுத்தப்படும் மாளிகைகள் மற்றும் சனாதிபதி செயலகத்தின் கீழுள்ள நிறுவன வளவுகளின் பராமரிப்பு பணிகளும், பேணலும்
- சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்படும் சகல ஆவணங்களையும் துரிதமாக மும்மொழிகளில் மொழிபெயர்த்தலும் உரைபெயர்ப்புச் சேவைகளை வழங்குதலும்.
- பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தலும் கொள்வனவுக்குரிய ஆண்டு பெறுகை நடைமுறையை உரியவாறு மேற்கொள்ளலும்.

மனிதவள அபிவிருத்திப் பிரிவு

அறிமுகம்

சனாதிபதி செயலகத்தின் பணியாட்தொகுதியினரின் ஆட்சேர்ப்புக்கள்/இடமாற்றங்கள்/பதவியுயர்வுகள்/ ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் தொடர்பான நிறுவனரீதியான செயற்பாடுகள் மற்றும் பணியாட்தொகுதியின் வினைத்திறனை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

பிரதான செயற்பாடுகள்/நோக்கங்கள்

- சனாதிபதி செயலகத்தின் ஆளணிக்கான ஆட்சேர்ப்புக்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பான தாபன பணிகள் மற்றும் ஆளணியின் உற்பத்திப் பெருக்கத்தை மேம்படுத்தல்.
- சனாதிபதியின் செயலணிக்காக நிதி ஒழுங்கு 71 இன் கீழ் பதவிகளை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்.
- சனாதிபதி அலுவலகம் மற்றும் ஏனைய பணித்தொகுதிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் சுயவிபரக்கோவைகளை இற்றைப்படுத்திப் பேணுதல்.
- சனாதிபதி அலுவலக ஆளணியினது உத்தியோகத்தர்களின்/ ஊழியர்களின் பாதுகாப்புத் தடைநீக்க அறிக்கைகளை பெறுதல் தொடர்பான நடவடிக்கைகள்.
- அங்கீகரிக்கப்பட்ட ஆளணி விபரங்களைத் தயாரித்தலும் இற்றைப்படுத்திப் பேணுதலும்.
- சனாதிபதி அலுவலகத்தின் அமைப்பாண்மைக் கட்டமைப்பைப் பேணுதல்.
- சனாதிபதி ஆளணிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அரச சேவையின் நிரந்தர / தற்காலிக உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை மதிப்பீடுகள் பற்றிய கருமங்கள்.
- சனாதிபதி ஆளணிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக உள்நாட்டு / வெளிநாட்டு பயிற்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை ஏற்பாடு செய்தல்.
- அரச உத்தியோகத்தர்களுக்காகத் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் கீழ் வழங்க முடியுமான வீடமைப்பு, சொத்துக் கடன்கள், இடர்களுக்கான கடன்கள் உட்பட ஏனைய கடன்களை பரிந்துரைத்தல் / அங்கீகரித்தல்.
- சனாதிபதி ஆளணியினது உத்தியோகத்தர்களின் விடுமுறைப் புகையிரத ஆணைச்சீட்டுகள், அனுசரணை புகையிரத பருவச்சீட்டுக்கள் போன்றவற்றை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள்.
- அக்ரஹார காப்புறுதி நஷ்ட ஈடு வழங்குதலைப் பரிந்துரைத்தல்.
- சனாதிபதி செயலக ஆளணியின் உத்தியோகத்தர்களது விடுமுறைகள், மேலதிக நேரப்படிகள், பிரயாணச் செலவுகள் மற்றும் ஏனைய படிகள் என்பவற்றை அங்கீகரித்தல் தொடர்பான பணிகள்.
- ஆளணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள்.
- விமான நிலைய முடிவிடங்களின் விசேட வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் உரித்துடைய சனாதிபதி செயலகத்தின் ஆளணியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக அவ்வசதிகளை ஏற்படுத்துதல் தொடர்பான பணிகள்.
- வெளிநாட்டு உத்தியோகபூர்வ கடமைச்சீட்டுக்களை வழங்குவதற்குரிய பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் வீசா அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும்போது சேவைச் சான்றிதழ் வழங்குதல்.

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் வெளிநாட்டுச் சுற்றுலாக்களில் பங்குபற்றும் சனாதிபதி ஆளணியைச் சேர்ந்த அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயணங்களுக்கு உரித்தான கொடுப்பனவுகள் மற்றும் அது சார்ந்த செலவுகளைச் செலுத்துதல்.
- தீர்வை வரியற்ற வாகன உரிமம் வழங்குதல் தொடர்பான கடமைகள்.
- நூலகம் தொடர்பான நிர்வாகப் பணிகள்.
- ஒரு மொழிக்குக்கூடுதலான மொழிகளில் தேர்ச்சியுடைய அரச உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துதல் மற்றும் அரச கரும மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்குரிய பணிகள்.
- உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பதிவுகளை வைத்துக் கொள்ளல் மற்றும் விரல் அடையாள இயந்திரங்கள் தொடர்பிலான மேற்பார்வை.
- இயங்குநராகச் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களதும், சிற்றூழியர்களதும் மாதாந்த இயங்குதிறன் வேலைத்திட்டங்களைத் தயாரித்தல்

2016 ஆம் ஆண்டின் அடைவுகள்

- ஆட்சேர்ப்புக்கள், இணைப்புச் செய்தல்கள், இடமாற்றங்கள், ஓய்வு பெறல்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான பணிகள். உரிய காலத்திற்குள் 337 நியமனங்கள் மற்றும் இணைப்புச் செய்தல்களும், 7 ஓய்வு பெறுதல்களும், இடமாற்றங்கள் மற்றும் மீள்விடுவிப்புகள் 216 ம், அக்ரஹார மருத்துவப் பட்டியல் மீளளிப்புக்கள் 77 ம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016.12.31 ஆந் திகதி வரையிலான ஆளணி

அங்கீகரிக்கப்பட்ட ஆளணி : 1496

சேவையில் உள்ள ஆளணி : 983

2016.12.31 ஆந் திகதி வரை இருந்தவாறான ஆளணியின் தன்மை

நிரந்தர	தற்காலிக	ஒப்பந்த	இணைப்பு செய்யப்பட்ட	மொத்தம்
642	184	49	108	983



உள்நாட்டு / வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல்

வெளிநாட்டுப் பயிற்சி

வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளுக்காக அங்கீகாரம் பெற்று 2016.01.01 ஆந் திகதி முதல் 2016.12.31 ஆந் திகதி வரை அப்பயிற்சி பாடநெறிகளில் பங்குபற்றிய பதவிநிலை உத்தியோகத்தரின் எண்ணிக்கை 24 ஆகும்.

உள்நாட்டு பயிற்சி

சனாதிபதி அலுவலகத்தின் ஒவ்வொரு பிரிவிலும்/கூறிலும் இருக்கும் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்பநிலை உத்தியோகத்தர்களின்/ஊழியர்களின் அறிவுத் திறன்களையும் உளப் பாங்குகளையும் விருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு நடாத்தப்பட்டுள்ளன.

தொடர் இல	2016.01.01 ஆந் திகதி தொடக்கம் 2016.12.31 வரை நடாத்தப்பட்ட உள்நாட்டு பயிற்சி பாடநெறிகள்	பயிற்சிபெற்ற குழு	எண்ணிக்கை
01	விருந்துபசார பணிகள் மற்றும் உபசரணை முறைகளைக் கையாளுதல் பற்றிய பயிற்சிச் செயலமர்வு	வான்படை விருந்துபசார கூறின் உறுப்பினர்கள்	40
02	சாரதிகளின் திறன்களை அபிவிருத்தி செய்தல் பற்றிய விசேட செயலமர்வு	சாரதியாளர்களுக்காக	55
03	புதிய சாரதியாளர்கள் திறன் அபிவிருத்தி இரு நாள் செயலமர்வு	சாரதியாளர்களுக்காக	40
04	ஊடகப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் ஒரு நாள் செயலமர்வு	ஊடகப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும்	132
05	இயற்றிறன் அபிவிருத்திப் பரீட்சை பாடநெறி	சாரதியாளர்களுக்காக	88
06	ஓய்வுச் சம்பள விடயம் பற்றிய செயலமர்வு	அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்காக	30
07	வாகனங்களின் நாளாந்த பயணநேர அட்டவணைகளை எழுதுதல் பற்றிய செயலமர்வு	சாரதியாளர்களுக்காக	68
08	உற்பத்திப் பெருக்க அபிவிருத்தி பயிற்சிச் செயலமர்வு	அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்காக	229
09	பெறுகை நடைமுறைபற்றிய பயிற்சிப் பாடநெறி	அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் சகல உத்தியோகத்தர்களுக்கும்	74

நிறுவன ஒருங்கிணைப்புப் பிரிவு

அறிமுகம்

தாபனஒருங்கிணைப்புஅலகினால் அதிமேதகுசனாதிபதிஅவர்களின் மேற்பார்வையின் கீழுள்ளசுயாதீனஆணைக்குழுக்கள் / அமைச்சுக்கள்/சனாதிபதிவிசாரணைஆணைக்குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் தாபனமற்றும் நிர்வாகநடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகிறது. அவ்வாறுஒருங்கிணைப்புசெய்யப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை 30 ஆகும். ஏதாவதொருநிறுவனத்தில் உள்ளடங்காதபல்வேறுநடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான பணிகள்/ நோக்கங்கள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள அமைச்சுக்களின் ஒருங்கிணைப்புப் பணிகளைத் தாமதமின்றி மேற்கொள்ளுதல்.
- 19ஆம் அரசியலமைப்புத் திருத்தத்துக்கமையத் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தலும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.
- சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்கள் செயலணிகளின் கொள்கை ரீதியாக, நிறுவன மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் ரீதியாகக் கிடைக்கும் கடிதங்களுக்குத் துரிதமாகப் பதிலளித்தல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் தாபன, நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்கள் சார்பில் மாண்புமிகு பிரதமர் அவர்களால் பதிலளிக்கவேண்டிய சகல பாராளுமன்ற வினாக்களுக்காக உரிய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளை ஒருங்கிணைப்புச்செய்து பதில் வழங்குதல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழுள்ள அமைச்சுக்கள் (அதிமேதகு சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் நியமனங்கள் தவிர்ந்த) மற்றும் அமைச்சுக்களின் கீழ் வராத சுயாதீன நிறுவனங்களின் வெளிநாட்டு விடுமுறைகள் மற்றும் வெளிநாடு செல்வதற்குரிய அலுவல்களுக்கான அங்கீகாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- விசேட நபர்களுக்காக இராஜதந்திர அனுமதிப் பத்திரங்கள் மற்றும் இரட்டைக் குடியுரிமை வழங்குதல் தொடர்பான பணிகள்
- சமர்ப்பிக்கப்படும் பொதுமக்களது முறைப்பாடுகள் தொடர்பான பணிகள்.
- வருடாந்த கணக்காய்வுப் பணிகளை நிறைவேற்றுதல்

2016ஆம் ஆண்டில் அடையப்பட்டவைகள்

நிறுவனம்	நிறைவு செய்யப்பட்ட பணிகள்	மொத்தம்
அதிமேதகு சனாதிபதி அவர்கள் அமைச்சராகப் பதவி வகிக்கும் அமைச்சுக்களுடன் தேவையான சந்தர்ப் பங்களில் ஒருங்கிணைப்புக்களைச் செய்தல்		
பாதுகாப்பு அமைச்சு	-	-
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	பல்வேறு நடவடிக்கைகள்	
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு	தாபன நடவடிக்கைகள்	02
19ஆம் அரசியலமைப்பின்கீழ் நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்		
தேர்தல் ஆணைக்குழு	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	19
	தாபன நடவடிக்கைகள்	32
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	07
	பல்வேறு கோரிக்கைகள்	12
தேசிய பொலிஸ் ஆணைக்குழு	வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்	2013ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்
	பல்வேறு கோரிக்கைகள்	01
	செயலாளரின் விடுமுறைகளை அனுமதித்தல்	-
கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	01

நிறுவனம்	நிறைவு செய்யப்பட்ட பணிகள்	மொத்தம்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	65
	மக்கள் முறைப்பாடுகள்	16
	வெளிநாட்டு விடுமுறைகள் தொடர்பான அலுவல்கள்	25
	கட்டிடத்தினைக் கொள்வனவு செய்தல்	-
	ஆட்சேர்ப்புத் திட்டங்களை அங்கீகரித்தல்	33
	வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்	2013 மற்றும் 2014 ஆம் வருடங்களுக்கான வருடாந்த அறிக்கையினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் விசாரணை ஆணைக்குழு	வெளிநாட்டு விடுமுறைகள் தொடர்பான பணிகள்	12
	தாபன நடவடிக்கைகள்	39
	இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குக் கட்டிடமொன்றினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைகள்	-
	வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்	2008 மற்றும் 2015 ஆம் ஆண்டு வரையிலான வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நிதி ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	17
	அலுவலகக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணித்தல்	03
	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	03
	வருடாந்த அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்	2015 ஆம் வருடத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

நிறுவனம்	நிறைவு செய்யப்பட்ட பணிகள்	மொத்தம்
எல்லை நிர்ணய ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	23
தேசியப் பெறுகை ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	41
அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுக்கள், சனாதிபதி செயலணிகள் மற்றும் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்		
அமைச்சரவை அலுவலகம்	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	12
கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	23
	தாபன நடவடிக்கைகள்	25
நீதிச்சேவை ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	04
	வருடாந்த அறிக்கை	2013,2015 வருடங்களுக்கு உரிய வருடாந்த அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
தேசியக் கல்வி ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	05
	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	02
	பதவிநிலை உத்தியோகத்தர்கள் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடு	2015ஆம் ஆண்டின் செயலாற்றுகை மற்றும் 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரையிலான மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
	வருடாந்த அறிக்கை	2014-2015 வருடங்களுக்கு உரிய வருடாந்த அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

நிறுவனம்	நிறைவு செய்யப்பட்ட பணிகள்	மொத்தம்
தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	07
	வெளிநாட்டு விடுமுறைகள்	12
தகவல்களை அறிந்து கொள்வதற்கான ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	18
பாரிய மோசடிகள், ஊழல்கள், அரச வளங்கள், சிறப்புரிமை அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பில் விசாரணை செய்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழு	கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல்	125
	தாபன நடவடிக்கைகள்	34
	பல்வேறு நடவடிக்கைகள்	10
காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு	தாபன நடவடிக்கைகள்	43
	சில்லறைக் கட்டுநிதியம்	16
	கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல்	39
	சம்பளங்களைச் செலுத்துதல்	24
	மக்கள் சந்திப்புக்களை நடாத்துதல்	21
அரச சொத்துக்களை மீளப்பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான விசேட சனாதிபதி செயலணி	தாபன நடவடிக்கைகள்	01
இலங்கை , தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	71
	வீசா வழங்குதல்களும் அங்கீகரித்தல்களும்	91
	தாபன நடவடிக்கைகள்	61
	பல்வேறு நடவடிக்கைகள்	91
இலங்கை மன்றம்	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	21
	தாபன நடவடிக்கைகள்	28
	வருடாந்த அறிக்கைகள்	2012-2015 வரையிலன ஆண்டறிக்கைகளை அனுப்பு மாறு கடிதம் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.
	சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்தல்	01
நிருவாக மேன்முறையீட்டு நியாய அதிகாரசபை	தாபன நடவடிக்கைகள்	09
	வருடாந்த அறிக்கைகள்	2015 ஆம் ஆண்டுவரை யிலான அனைத்து வருடாந்த அறிக்கை களும் பாராளுமன் றத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

நிறுவனம்	நிறைவு செய்யப்பட்ட பணிகள்	மொத்தம்
எஸ்.டபிளிவ்.ஆர்.டி.பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மன்றம்	தாபன நடவடிக்கைகள்	08
	பல்வேறு கோரிக்கைகள்	03
நிருவாக நடவடிக்கை தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்	தாபன நடவடிக்கைகள்	17
	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள்	09
ஜே.ஆர்.ஜயவர்த்தன நிலையம்	தாபன நடவடிக்கைகள்	14
நெலும் பொக்குண மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு	பராமரிப்பு நடவடிக்கைகள்	91
	மின்சாரப் பட்டியல்களைத் தீர்த்து வைத்தல்	27
	நீர்ப்பட்டியல்களைத் தீர்த்து வைத்தல்	23
	தொலைபேசி மற்றும் இணையத்தளங்களைத் தீர்த்தல்	15
	செய்திப் பத்திரக் கட்டணங்களைத் தீர்த்து வைத்தல்	11
	நிலையத்தினை ஒதுக்கிக் கொள்ளுதல்	62
	துப்புரவு நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்கள்	15
	பெறுகைக் குழுக்களை நியமித்தல்	38
	சில்லறைக் கட்டுநிதியம்	28
	பல்வேறு நடவடிக்கைகள்	142
	பணியாட் தொகுதி தொடர்பான பிரச்சினைகள்	08
	கட்டிட நடவடிக்கைகள்	06
தாமரைக் கோபுரம்	பல்வேறு நடவடிக்கைகள்	06
உபாய முறையிலான முயற்சியாண்மை முகாமைத்துவ நிறுவனம்	தாபன நடவடிக்கைகள்	17
பல்வேறு நடவடிக்கைகள்		
பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை பிரதமர் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல்		12
மாகாண முதலமைச்சர்களின் வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்	வெளிநாட்டு விடுமுறைகள் சம்பந்தமான அலுவல்கள்	13
இராஜதந்திர அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்		10
இலங்கைப் பாராளுமன்ற அலுவலர்களின் வெளிநாட்டு விடுமுறைகள்		-

கொள்கைக்கூட்டிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் கட்டளைகள் மற்றும் சனாதிபதியின் செயலாளரது ஆலோசனைகளின் பேரில் சனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் திரு.கிங்ஸ்லி பெர்ணாந்து அவர்களின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு செயற்படுகின்றது.

பிரதான பணிகள் / நோக்கங்கள்

- கொள்கைத் தயாரிப்பை இலகுபடுத்தலும் ஒருங்கிணைத்தலும்
- மாவட்ட அபிவிருத்திப் பணிகள் "மைத்திரி ஆட்சி - நிலையான நாடு" எனும் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல்
- "முன்னேற்றம் மற்றும் பொறுப்புகளுடன்கூடிய அரசதுறை", "மைத்திரி ஆட்சி - நிலையான நாடு" எனும் கொள்கைப் பிரகடனத்துக்கமைய அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு
- அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தலும் முன்னேற்ற மீளாய்வுப் பணிகளை மேற்கொள்ளலும்.
- சமூக, பொருளாதார மற்றும் கலாசாரப் பிரச்சினைகளையும் மற்றும் சமூகத் தேவைகள் பற்றியும் கற்றாராய்தல்
- கொள்கைத் தயாரிப்புக்கு வேண்டிய தரவுகளையும் தகவல்களையும் திரட்டுதலும் பகுப்பாய்தலும் தேவைக்கேற்றவாறு அறிக்கையிடுதலும்
- போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான அனைத்துத் தரப்பினர்களையும் கூட்டிணைத்தலும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு உதவியளித்தலுமாகும். இதன் முக்கிய நோக்கமாவது ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கிடையில் குட்டைத்தன்மை மற்றும் நிறைகுறைத்தன்மையை 40% ஆல் குறைத்தல், மெலிவடைதலை 5% வரை குறைத்தல், நிறைகூடிய பிள்ளைகளின் சதவீதத்தை மேலும் உயர்வடையாதிருப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல், நிறை குறைந்த பிள்ளை பிறப்புகள் மற்றும் பெண்களுக்கிடையில் நிறைகுறைந்த, நிறைகூடிய தன்மையினை 30% வரை குறைத்தல், குருதிச்சோகை உள்ள மட்டத்தைவிட 50% தினால் குறைத்தல் என்பனவாகும்

2016 ஆம் ஆண்டில் அடைந்துகொண்டவை

2016 ஆம் ஆண்டில் மேற்குறித்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இப்பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டங்களினதும், நிகழ்ச்சித்திட்டங்களினதும் எண்ணிக்கை பின்வருமாறு:

விடயம்	கூட்டங்கள்/செயற்பாடுகள்
அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில்	32
சனாதிபதியின் செயலாளரின் தலைமையில்	37
சனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளரின் தலைமையில்	30
சனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் தலைமையில்	24
ஏனையவை	23
மொத்தம்	146

இதன்போது,

அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு

(அ) 51 அமைச்சுக்களினது அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்ற மீளாய்வு – சராசரி -

2016 ஆம் ஆண்டின் 04 காலாண்டுகளுக்கும் உரியதாக அந்தந்த அமைச்சுக்களினால் மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றங்கள் வினவப்பட்டது.

I. ஆவது காலாண்டு

- 51 அமைச்சுக்களுக்கு உரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 714 இனது பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றங்கள் வினவப்பட்டது.

II. ஆவது காலாண்டு

- 51 அமைச்சுக்களுக்கு உரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 1064 க்கும் உரிய பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் வினவப்பட்டுள்ளது. 2 ஆவது காலாண்டாகும்போது 20% வீதமான நிதி முன்னேற்றத்தினை அடையாத அமைச்சுக்கள் 18 இனை அழைத்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
- வருடத்தின் நடுப்பகுதியிலான முன்னேற்றத்தினை அடைந்து கொள்ளாத (30%ஆன நிதி முன்னேற்றம்) 23 அமைச்சுக்களுக்காக "பகுப்பாய்வு ரீதியாக மேற்பார்வை அறிக்கைகள்" அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- அனைத்து அமைச்சுக்களினதும் முன்னேற்றத்தினைக் காட்டுகின்ற தேசிய அறிக்கை சனாதிபதியின் செயலாளரின் கவனத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

III. ஆவது காலாண்டு

- 51 அமைச்சுக்களுக்கு உரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 1273 கான பௌதிக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் வினவப்பட்டுள்ளது. 2 ஆவது காலாண்டாகும்போது 60%வீத நிதிரீதியான முன்னேற்றத்தினை அடையாத 12 அமைச்சுக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தினை அடையாத (60% வீத நிதி ரீதியான முன்னேற்றம்) 17 அமைச்சுக்கள் தொடர்பாக விசேட பகுப்பாய்வு மேற்பார்வைகள் அறிக்கைகள் அனுப்பப்பட்டன.
- அனைத்து அமைச்சுக்களினதும் முன்னேற்றத்தினைக் காட்டுகின்ற தேசிய அறிக்கை சனாதிபதியின் செயலாளரின் கவனத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

IV. நான்காவது காலாண்டு

- 51 அமைச்சுக்களுக்கு உரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 1243 னது பௌதீக மற்றும் நிதிரீதியான முன்னேற்றம் வினவப்பட்டுள்ளது.
- அனைத்து அமைச்சுக்களினது முன்னேற்றத்தைக் காட்டுகின்ற 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 51 அமைச்சுக்களுக்கு உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளினது முன்னேற்ற மீளாய்வு – விசேடம்

- 51 அமைச்சுக்களுக்கு உரிய அபிவிருத்தி செலவுகளின் முன்னேற்றம் தொடர்பாக 2016.09.26, 2016.11.11 ஆம் திகதிகளில் சனாதிபதியின் செயலாளர், பிரதமர் அவர்கள் மற்றும் செயலாளர்களுடைய கலந்துரையாடலின் போது முழு மொத்த முன்னேற்றம் மீளாய்வு செய்யப் பட்டது.

(இ) அரச அபிவிருத்திப்பணி மீளாய்வு

2015.01.08 முதல் 2016.11.25 ஆம் திகதி வரையில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப் பட்ட அனைத்து அபிவிருத்திக் கருத்திட் டங்கள் தொடர்பாக தகவல்களை ஒன்று திரட்டி அது தொடர்பாக அறிக்கையொன்றினைத் தயாரிப் பதற்காக சனாதிபதி ஊடகப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) "நீடுறுதியான யுகத்தின் மூன்றாண்டு ஆரம்பம்"- நிகழ்ச்சித் திட்டம்"

அதிமேதகு சனாதிபதி அவர்களின் எதிர் வரும் மூன்றாவது வருட ஆரம்பத்தினை முன்னிட்டு அமைச்சுக்களினால் மேற்கொள் ளப்படவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை நாம் பெற்றுக் கொண்டு அவற்றை நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைவாகத் தயாரித்து நடைமுறைப் படுத்துமாறு அந்தந்த அமைச்சுக்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

I. "அனைத்து இனங்களையும் ஒரேசமமாக மதிக்கும் ஆட்சி" என்ற மகுடத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலும்

II. "மலைநாட்டு மக்களை கௌரவமாக வாழச் செய்தல்" என்ற மகுடத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்திலும் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளது.

(உ) அமைச்சுக்களுக்காக பிரதான செயற்பாட்டுக் குறிகாட்டிகளைத் தயாரித்தல்

நடுத்தரகால மற்றும் நீண்டகால இலக்குகளை வெற்றிகொள்வதற்காக அமைச்சுக்களுக்கு உரிய பிரதான செயற்பாட்டுக் குறிகாட்டிகள் 10 இனைத் தயாரித்து எங்களுக்கு வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அக்குறிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

2. விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள்

தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கமைய மாவட்ட மட்டத்தின்போது அரச நிறுவனங்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகச் செயற்படுத்தப்படும் சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்புச் செய்தல், செயற்படுத்தல் மற்றும் பின்னாய்வு செய்யும் நோக்குடன் பொலன்னறுவை, கம்பஹா, கேகாலை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

இக்குழுக் கூட்டங்களின் தொடராய்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடை பெற்று வருகின்றன. அவ்வாறே கண்டி நகரத்தின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை விசேடமாகத் தேடி விசாரித்துப்பார்க்குமாறு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தெரிவிக்கப்பட்டமையினால் அதுதொடர்பான 2 ஆரம்பத் தொடராய்வுக் கூட்டங்கள் அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் 2016.03.01 திகதி மற்றும் சனாதிபதியின் செயலாளர் தலைமையின் கீழ் 2016.09.19 ஆம் திகதியிலும் இடம் பெற்றதுடன் அதனூடாகப் பல சிக்கல்கள் தீர்த்து வைக்கப்பட்டன.

3. அமைச்சுக்களின் கொள்கை ஒருங்கிணைப்பு

அமைச்சுக்களில் காணப்படுகின்ற சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மற்றும் திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களின் போது (வெள்ளம்/வரட்சி) தலையிட்டு உரிய பிரிவினரை அழைத்து அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுத் தேவையான தீர்மானங்கள் மற்றும் பணிப்புரைகள் வழங்கப்பட்டது. அதே போன்று அமைச்சுக்களின் பொதுவான நிருவாகச் செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் மற்றும் தேசிய மட்டத் தலையீடுகளின் போது ஒப்படைக்கப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் தொடராய்வும் தொழிற் சங்கங்களின் மனக்குறைகள் தொடர்பாகவும் அதிமேதகு சனாதிபதி அவர்கள் தலையிட வேண்டிய சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்பட்ட கடமைப் பணிகளும் உள்ளடங்குகின்றன.

போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்

1. போசணை தொடர்பான பல்துறை செயற்பாட்டுத் திட்டம் 2013-2016 இன் கீழ் அமைச்சுக்கள் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படாத நிகழ்ச்சிதிட்டங்களை நடைமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

2. போசணை தொடர்பான பல்துறைசார் செயற்றிட்டத்தின் கீழ் மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் கீழ்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

3. போசணை தொடர்பான கிராமிய மட்டக்குழுக்களை அறிவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

4. "போசணை மற்றும் சமூக வலுவூட்டல்" தொடர்பாக பாலர் பாடசாலை ஆசிரியர்களை அறிவூட்டுதல்.

5. "போசணை மற்றும் சமூக வலுவூட்டல்" தொடர்பாக பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களை அறிவூட்டுதல்.

6. "போசணை மற்றும் சமூக வலுவூட்டல்" தொடர்பாக அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் மூலம் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள போசணை விடயத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவூட்டுதல்.

7. அமைச்சுக்கள் மற்றும் மாகாண சபைகளின் மூலம் பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள போசணை விடயத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக "போசணை மற்றும் சமூக வலுவூட்டல்" தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

8. பாடசாலை மட்டத்தில் போசணை பாடத்திட்டத்தினைத் தழுவும் வகையில் பாடசாலைகளிலே கடமையாற்றுகின்ற சுகாதார மற்றும் உடற்கல்வி விடய ஆசிரியர்களை அறிவூட்டுதல்.

9. நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் போசாக்கு அச்சுறுத்தல் உள்ள வீட்டலகுகளை அடையாளம் கண்டு கொள்ளுதல்.

10. தேசிய போசணை தகவல் முறைமையினை (National Nutrition Information System) அபிவிருத்தி செய்தல்.

11. போசணை தொடர்பான பல்துறைசார் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய, முன்னோடிக் கருத்திட்டம் பிபிலை பிரதேச செயலகம் மற்றும் நுவரெலியா மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுதல்.

நிதி முகாமைத்துவப் பிரிவு

அறிமுகம்

சனாதிபதி அலுவலகத்தின் சகல நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்

பிரதான பணிகள்/நோக்கங்கள்

- நிரந்தர, தற்காலிக, அமய, ஒப்பந்த மற்றும் இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் உழைப்பூதியக் கொடுப்பனவுகளை செலுத்துதல்.
- உத்தியோகத்தர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச்செலவுக் கொடுப்பனவுகளை செலுத்துதல்.
- சனாதிபதி அலுவலகத்திற்கான சேவைகள் மற்றும் வழங்கல்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துதல்.
- மாதாந்த கணக்குப் பொழிப்புகள் மற்றும் வங்கி இணக்கக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றைப் பொதுத் திறைசேரிக்குச் சமர்ப்பித்தல்
- வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கினைத் தயாரித்தலும் பொதுத்திறைசேரிக்குச் சமர்ப்பித்தலும்.
- வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தலும்.
- வரவு செலவுத்திட்டச் செயற்குழு சந்தர்ப்பத்திற்குரிய பணிகள்
- அலுவலகக் கணக்குகளைத் திறைசேரி கணக்குகளுடன் ஒப்பிடுதல்
- ஏனைய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகளை விடுவித்தல்
- உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்குரிய வெளிநாட்டுப் பயணங்களுக்குரிய நடவடிக்கைகள்

2016 ஆம் ஆண்டின் அடைவுகள்

2016 ஆம் ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடுகளும் மொத்தச் செலவுகளும் (ரூ.மில்.)

விபரம்	மீண்டெழும்	மூலதனம்
மொத்த ஒதுக்கீடு	2,081	4,779
மொத்தச் செலவு	1,985	4,178
%	4,066	8,957



2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான மொத்தச் செலவின ஒப்பிடுகை

வருடம்	*2014*	*2015*	*2016*
மீண்டெழும்	*4,693*	*2,116*	*2,081*
மூலதனம்	*5,183*	*1,191*	*4,779*



உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அறிமுகம்

சனாதிபதி அலுவலகம் மற்றும் அதன்கீழ் உள்ள சகல நிறுவனங்களினதும் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளவும் சனாதிபதியின் செயலாளரினால் கையளிக்கப்படும் விசேட உள்ளகக் கணக்காய்வு விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் சனாதிபதியின் செயலாளரின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பிரிவாகும்

பிரதான பணிகள் /நோக்கம்

- சனாதிபதி அலுவலகத்தினதும் சனாதிபதி அலுவலகத்தின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக இடம்பெறும் உள்ளக நிர்வாக முறையில் பங்குபற்றல். அந்நடவடிக் கைகளில் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் அவற்றினைக் கண்டறிவதற்காகவும் கையாளப்படும் உள்ளகச் சோதனையின் விதிமுறைமைத் தன்மை அளவு தொடர்பாகத் தொடர்ச்சியான பரிசோதனை மற்றும் சுய மதிப்பீட்டினைப் பேணுதல்.
- வேலைகள், திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றங்களினைக் கண்டறிதல் தொடர்பாக சனாதிபதியின் செயலாளருக்கு உதவியளித்தல்.

2016 ஆம் ஆண்டு பிரதான அடைவுகள்.

தொடர் இல	திட்டம்	நிலை	வினைத்திறன் சதவீதம்
01	சனாதிபதி அலுவலகத்தின் நேரப்பதிவு இயந்திரம் மூலம் வரவு மற்றும் புறப்படுதல் நேரத்தைப் பதிதல்	நிறைவு	100%
02	நெலும் பொக்குண (தாமரைத் தடாகம்) மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு	நிறைவு	100%
03	சனாதிபதி அலுவலகத்தின் தபால் பிரிவு	நிறைவு	100%
04	சனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்	நிறைவு	100%
05	2016 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்கான "வவுச்சர்" பத்திரங்களைப் பரிசோதித்தல்	சனவரி முதல் யூன் வரை	50%
06	சனாதிபதி அலுவலகத்தின் களஞ்சியசாலை முகாமைத் துவமும் பொருட்களின் வருடாந்த மீளாய்வும்	நிறைவு	100%
07	சனாதிபதி நிதியம்	நிறைவு	100%
08	காசாளரின் நிதி மற்றும் காசேட்டினைப் பரிசீலித்தல்	நிறைவு	100%
09	சனாதிபதி அலுவலகத்தின் பெறுகைக் கூறினால் 2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 யூலை மாதம் வரை செய்யப் பட்ட கொள்வனவுகள்	நிறைவு	100%
10	சனாதிபதி அலுவலகத்தின் மாதாந்த சம்பளக் கொடுப்பனவு	நிறைவு	100%
11	2016.01.01 தொடக்கம்2016.10.31 ஆம் திகதி வரையில் இலத்திரனியல் ஊடகப் பிரிவினால் பெற்றுக்கொண்ட முற்பணம்	நிறைவு	100%
12	அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உணவு உற்பத்தித் தேசிய நிகழ்ச்சித்திட்டம்	நிறைவு	100%
13	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் (நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள) கூட்டங்கள் - 04)	2 கூட்டங்கள் நடாத்தப் பட்டுள்ளன.	50%

சனாதிபதி நிதியம்

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்கள் உள்ளிட்ட கட்டுப்பாட்டாளர் சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கேற்ப சனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட சனாதிபதி நிதியத்தின் பணியாட்டொகுதியினரால் இலங்கைப் பிரசைகளுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ள நோய்களுக்காக வைத்திய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு க.பொ.த (உயர்தரம்) கற்பதற்காக நிதி உதவியினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஏனைய கருத்திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறே அபிவிருத்தி லொத்தர் சபையினால் கிடைக்கும் வருமானத்தின் 50% மான நிதியினை மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியத்திற்குப் பெற்றுக்கொடுத்தலும் சனாதிபதி நிதியத்தின் பணிப்பொறுப்பாகும்.

பிரதான பணிகள் /நோக்கங்கள்

1. வறுமை நிலைமைக்கு நிவாரணங்கள் அளித்தல்
2. கல்வியையும், புத்தியையும் விருத்தி செய்தல்
3. மதங்களை முன்னேற்றுவதற்காகப் பங்களிப்புச் செய்தல்
4. இனங்களுக்காகச் சேவை புரிந்துள்ள நபர்களுக்கு வெகுமதிகள் வழங்குதல்
5. சனாதிபதி அவர்களினதும் கட்டுப்பாட்டாளர் சபையினதும் அபிப்பிராயப்படி பொதுமக்களின் நலன்களுக்கான பணிகளை நிறைவேற்றுதல்

2016 ஆம் ஆண்டின் பிரதான அடைவுகள்

1. சனாதிபதி நிதியத்திலிருந்து மருத்துவ உதவி வழங்கும் செயற்பாட்டினைத் தன்னியக்கப்படுத்தலின் கீழ் கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலகங்கள் 13 இனைத் தன்னியக்கத் தொகுதியில் உள்ளடக்கியுள்ளதுடன் அவற்றின் பிரச்சினைகள் தொடர்பாகத் தீர்வுகளும் பெற்றுக்கொடுத்தல்.

2. நாளாந்தம் அதிகரித்துவரும் நிதி உதவிக் கோரிக்கைகளின் எண்ணிக்கையினைக் கவனத்திற் கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதற்காக சனாதிபதி நிதியத்தின் பணியாட்டொகுதியின் தேவைப்பாட்டினை மனித வள அபிவிருத்திப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக சனாதிபதியின் உதவிச் செயலாளர் ஒருவர் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்.

3. சனாதிபதி நிதிய அலுவலகத்தின் பிரிவொன்றினை ரேணுகா கட்டடத்தொகுதியின் 1 ஆவது மாடியில் நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.

4. சனாதிபதி நிதியத்தின் பணியாட்டொகுதியினரின் தனிநபர் விருத்தி தொடர்பாக சனாதிபதி அலுவலகத்தின் மனிதவள அபிவிருத்திப் பிரிவின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட கீழ்வரும் பயிற்சிப் பாடநெறிகளுக்காகப் பணியாட்டொகுதியினரை ஈடுபடுத்துதல்.

    - அரச முகாமைத்துவ உதவிச் சேவையிலுள்ள அலுவலர்களுக்காக இடம்பெற்ற "விளைவுப்பெருக்கமிக்க அரச சேவைக்காக" பயிற்சி பாடநெறி
    - அலுவலகப் பணியாளர்களுக்கான "இயலளவு விருத்தி" பயிற்சி பாடநெறி

5. சனாதிபதி நிதியப் பிரிவின் தன்னியக்க செயற்பாட்டிற்குப் பொருத்தமான இயலளவினைக் கொண்ட கணனி இயந்திரங்கள், ஸ்கான் இயந்திரங்கள்,படப்பிரதி இயந்திரங்கள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல்.

6. 2016 ஆம் ஆண்டிலே சனாதிபதி நிதியத்தின் மதிப்பீட்டு வருமானமாக அபிவிருத்தி லொத்தர் சபையின் மூலமாக 2000 மில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் எதிர்பார்க்கப்பட்ட பணத் தொகையிலிருந்து 1836.02 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது. (உள்நாட்டு இறைவரி ஆணை யாளர் திணைக்களத்தின் மூலமாக அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து 2001-2009 காலப் பகுதிக்கான நிலுவை வரித் தொகையினை அறவீடு செய்ததன் காரணமாக இவ் எதிர்பார்த்த பணத்தொகையினை பெற்றுக் கொள்வதற்கு முடியவில்லை.

வருமானம் கிடைத்த முறைமை	நிதி (ரூபா மில்லியன்)
அபிவிருத்தி லொத்தர சபையிடமிருந்து	1836.02
வட்டி வருமானம் மற்றும் அன்பளிப்புக்கள்	53.24
நிலையான வைப்புக்களை அகற்றுதலும் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்	98.45
சனாதிபதி நிதியத்திடம் இருந்த பணத்தொகை	217.63
மொத்தம்	2205.34



2016 ஆம் ஆண்டிலே சனாதிபதி நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் கீழ்வருமாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

பணி	நிதி (ரூபா மில்லியன்)
மருத்துவ உதவிகளுக்காக	1288.49
மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்காக	647.83
கல்வி மற்றும் புலமைப்பரிசில்களுக்காக	127.94
நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக	9.63
மத நடவடிக்கைகளுக்காக	5.01
கலாசார நடவடிக்கைகளுக்காக	4.81
கலை நடவடிக்கைகளுக்காக	1.97
மொத்தம்	2085.68



சனாதிபதி நிதியத்திற்குரிய முதலீடுகளாக அரச வங்கிகளிலே நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி முறிகளாக 2004.45 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு : மேற்காட்டப்பட்டுள்ள எண் ரீதியான தகவல்கள் தற்போது கணக்காய்வு செய்யப்பட்டு வருகிறது.

அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களது "மைத்திரி ஆட்சி – நிலையான நாடு" கொள்கைப் பிரகடனத்தில் "சிறந்த பொருளாதார வலுவுடைய, நற்குணங்கள் நிறைந்த நல்லொழுக்கங்களைக் கொண்டவோர் சமூகம் மற்றும் நல்லாட்சிக்கு முன்மாதிரியான நாடு" கட்டியெழுப்பப்படுவதனை நோக்கமாகக் கொண்ட பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்த எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்தி இலங்கை தற்போது முகம்கொடுத்துவரும் உணர்வு ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களது விசேட கவனத்தின் கீழ் விசேட தேசிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவு தாபிக்கப்பட்டது.

இந்தப் பிரிவின்கீழ் பின்வரும் பிரதான தேசிய நிகழ்ச்சித் திட்டங்களும் விசேட நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

i. உணவுற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம்

ii. சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

iii. போதைப் பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

iv. சிறுநீரக நோய்த் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

v. "சிறுவர்களைப் பாதுகாப்போம்" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

vi. நிலைபேறான பாடசாலை நிகழ்ச்சித்திட்டம்

vii. வறுமை ஒழிப்பு தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

மேற்படி விடயங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி சனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள செயலணிகள் மற்றும் பிரிவுகளுடாக இந்நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

பிரதான செயற்பாடுகள்/ நோக்கங்கள்

- ஒவ்வொரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் குறிப்பிட்ட காலப்பகுதியைக் கொண்டதாக தேசிய நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல்
- அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் முறையான ஒருங்கிணைப்பு
- சட்ட ரீதியானதும் கொள்கை ரீதியானதுமான விடயங்களில் மத்தியஸ்தம் செய்தல்
- அலுவலர்களினதும் ஒட்டுமொத்த நாட்டு மக்களதும் மனப்பாங்கிலான மாற்றங்களை ஏற்படுத்துதல்
- எல்லோரும் ஒன்றுபட்ட நிலைமையில் செயற்படல்
- தொடர்ச்சியான பின்னாய்வு
- மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வு

இதற்கு மேலதிகமாக அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் காலத்திற்கேற்ற வகையில் அமையப்பெறும் விசேட நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதோடு பிரிவின் கீழ் காணப்படும் சமய அலகானது சர்வ மத நடவடிக்கைகளை மேற்கொண்டு விசேட பணியினை ஆற்றுகின்றது.

1. உணவு உற்பத்தித் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (2016/2018)

இலங்கையின் உணவு உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்வதை நுட்பமாகப் பார்க்கும்போது காலாகாலமாக நாம் இறக்குமதி செய்கின்ற பெரும்பாலான உணவுப் பொருட்கள் எமது நாட்டில் உற்பத்தி செய்து தன்னிறைவடையக் கூடியவை என்பது உண்மையாகியுள்ளது. அதேவேளை உணவிற்காகச் செலவாகும் பாரிய அந்நிய நாட்டுச் செலாவணியை நாட்டினுள் மீதப்படுத்திக் கொள்வதற்கும், ஆரோக்கியமான ஒரு இனமாகவும் பொருளாதார ரீதியில் எழுந்து நிற்கக் கூடிய நிலைமையும் காணப்படுகின்றது. இந்த அடிப்படை நோக்கங்களைக் முன்னிலைப்படுத்தியதாக சனாதிபதி செயலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவின் கீழ் உணவு உற்பத்தித் தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. விவசாயம், கடற்றொழில் மற்றும் நீர் வள அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல், கிராமியப் பொருளாதார அலுவல்கள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் ஆகிய அமைச்சுக்களும் அனைத்து மாகாண சபைகள் உள்ளடங்களாக மேலும் அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களும், தனியார் துறையின ரையும் ஒன்றிணைத்ததாக உணவு உற்பத்தி சனாதிபதி செயலணியின் மூலம் இந்தத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் வெற்றியளிக்கும் வகையில் அவசியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த வேலைத்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி பிரதேசத்தில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று தொடக்கம் 2016 வருடம் முழுவதும் சனாதிபதி அலுவலகத்தின் உணவு உற்பத்தித் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் கீழ்வரும் பிரதான பிரிவுகளினூடாக தெளிவுபடுத்தப்படுகின்றது.

i. விசேட முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

ii. களப் பயிர் விவசாயத்தினை முன்னேற்றுதல்

iii. நச்சுத்தன்மையற்ற விவசாய முன்னேற்றம்

iv. விவசாய இயந்திரமயமாக்கல்

v. நச்சுத்தன்மையற்ற உணவு விற்பனை நிகழ்ச்சித்திட்டம்

vi. அடையாளம் காணப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

மேற்படி துறைகளினூடாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் பிரதிபலன்களாக விவசாய நடவடிக்கைகளுக்கு நச்சுத்தன்மை கொண்ட இரசாயனப் பதார்த்தங்களின் பாவனை வெகு சீக்கிரமாக வீழ்ச்சியடைந்தமை, விவசாய நடவடிக்கைகளுக்குச் சேதனப் பசளைப் பயன்பாடு விவசாயிகள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தியமை, சேதனப் பசளை உற்பத்தி நிலையங்கள் நாட்டினுள் உருவாக்கப் பட்டமை, தரமான உணவுப் பயன்பாடு தொடர்பில் மக்கள் ஆர்வம் கொண்டமை, பாரம்பரிய நெல் மற்றும் ஏனைய உப உணவுப் பயிர் உற்பத்திகள் அதிகரித்தமை, நச்சுத்தன்மையற்ற சேதன உணவு விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமை, விவசாயம் செய்யப்படாத காணிகள் புதிதாக விவசாயத்திற்கு உள்வாங் கப்பட்டமை, எள்ளு மற்றும் பாசிப்பயறு உற்பத்தியில் தன்னிறைவடைந்தமை, வீட்டுத் தோட்டங்களை அமைப்பது தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆர்வம் அதிகரித்தமை ஆகியன தற்போது இடம்பெறுவதனைக் காண முடிகின்றது.

2016ஆம் ஆண்டின் மே, யூன் மாதங்களில் கிடைத்த அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தாலும், ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரையில் ஏற்பட்ட கடும் வரட்சியின் காரணமாகவும் விவசாயிகள் கடும் நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொண்டனர். இவ்வாறான நிலைமையின் கீழும் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ச்சியாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்தது.

1.1 விசேட முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையின் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் மத்தியில் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தலை ஏற்படுத்தி உணவு உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பில் அவர்களிடம் காணப்படும் மனப்பாங்கினை முன்னேற்றும் குறிக்கோளுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

	நிகழ்ச்சித்திட்டம்	திகதி	இடம்
1.	நச்சுத்தன்மையற்ற நாடு - விவசாய, கல்வி மற்றும் விற்பனைக் கண்காட்சி	2016 மார்ச் 6,7,8	BMICH கொழும்பு
2.	விசேட விவசாய மாநாடு மற்றும் கல்வி மற்றும் விற்பனைக் கண்காட்சி, அம்பாறை	2016 ஆகஸ்ட் 29,30	அம்பாறை வீரசிங்க மைதானம்







உணவு உற்பத்தி விசேட முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

1.2. களப் பயிர் செய்கையினை முன்னேற்றுதல்

நாட்டினுள் உற்பத்தி செய்யக்கூடிய ஆயினும் இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களுக்குப் பாரிய அந்நிய நாட்டுச் செலாவணி செலவு செய்யப்படுகின்றது. எனவே அந்த உணவுப் பயிர் உற்பத்தியினை முன்னேற்றும் பொருட்டு கமத்தொழில் அமைச்சு உள்ளடங்களாக நிறுவனங்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக சனாதிபதி அலுவலகத்தின் நேரடித் தலையீட்டின் கீழ் 2016ஆம் வருடத்தினுள் விசேட கருத்திட்டங்கள் நடைறைப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பயிர் தொடர்பிலான முன்னேற்றம் பின்வருமாறு-

1.2.1 பாசிப்பயறுச் செய்கை

இலங்கைக்கான வருடாந்த பயறு அவசியப்பாடு 30,000 மெ.டொ. ஆகும். அந்த இலக்கினை அடையும் பொருட்டு உரிய அமைச்சுக்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டினால் ஒட்டுத்தாளில் பாசிப்பயறு செய்கை 21,272 ஏக்கர் நிலத்தில் பின்வரும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மதிப்பீட்டு வருமானம் ரூ. 1,067 மில்லியனாகும்.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	அம்பாந்தோட்டை	12,625	4,754	109,860	13.35	4,000
02	திருகோணமலை	6,500	3,510	64,824	15.00	2,000
03	குருணாகல்	625	704	5,952	1.52	200
04	அனுராதபுரம்	213	420	1,004	0.45	70
05	கண்டி	275	575	2,750	0.77	85
06	பொலன்னறுவை	984	2,700	300	0.08	300
07	வவுனியா	50	96	480	0.13	15
மொத்தம்		**21,272**	**12,759**	**185,170**	**31.30**	**6,670**





அம்பாந்தோட்டை மற்றும் குருணாகல் மாவட்டங்களில் பாசிப்பயறு உற்பத்திச் செயற்பாடுகள்

1.2.2. மிளகாய் உற்பத்தி

இலங்கையின் வருடாந்த மிளகாய் தேவைப்பாடு 60,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடையும் வகையில் உரிய அமைச்சுக்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிகமாக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் நச்சுத்தன்மையற்ற சேதன விவசாய மிளகாய் செய்கைக் கருத்திட்டங்கள் 1,855.5 ஏக்கர் நிலப்பரப்பில் பின்வரும் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக ரூ. 1,750 மில்லியன் அண்ணளவாக வருமானத்தினை விவசாயிகள் பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	பொலன்னறுவை	983.0	1,954	393.5	2.60	8,000
02	அனுராதபுரம்	590.0	1,125	236.0	0.71	5,000
03	கண்டி	155.0	340	62.0	0.05	1,300
04	புத்தளம்	127.5	374	50.0	0.23	1,050
மொத்தம்		**1,855.5**	**3,793**	**741.5**	**3.59**	**15,350**




பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் மிளகாய் உற்பத்தி வேலைத்திட்டங்கள்

1.2.3. பெரிய வெங்காயச் செய்கை/விதை உற்பத்தி

இலங்கையின் வருடாந்த பெரிய வெங்காயத் தேவைப்பாடு 240,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடையும் வகையில் உரிய அமைச்சுக்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் நச்சுத்தன்மையற்ற சேதன விவசாய பெரிய வெங்காயச் செய்கைக் கருத்திட்டம் 260 ஏக்கரில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக ரூ. 1,500 மில்லியன் அண்ணளவான வருமானத்தினை விவசாயிகள் பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	பொலன்னறுவை	05	32	10	0.13	1.8
02	அனுராதபுரம்	250	310	630	1.89	90.0
03	திருகோணமலை	05	21	12	0.12	1.8
	மொத்தம்	**260**	**363**	**652**	**2.14**	**93.6**
04	அனுராதபுரம் உண்மையான விதை உற்பத்தி	02	08	9000 (விதைகள்)	1.03	0.72





பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில்
பெரிய வெங்காய உற்பத்தி வேலைத்திட்டம்

1.2.3.1 சின்ன வெங்காயப் பயிர்ச்செய்கை

மொனராகலை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளி விவசாயக் குடும்பங்கள் 35இனைப் பயன் படுத்தி 4.4 ஏக்கர் நிலப்பரப்பில் சின்ன வெங்காயச் செய்கைக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 420,000 செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அண்ணளவான அறுவடை 24,600 கி.கி ஆகும். மதிப்பீட்டு வருமானம் ரூ. 1.6 மில்லியனாகும்.

1.2.4. சோளப் பயிர்ச் செய்கை

இலங்கையின் வருடாந்த சோளத் தேவைப்பாடு 400,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக சோளச் செய்கையினை அதிகரிப்பதற்குப் போதுமானளவு விதை இன்மை பிரச்சினையாகி உள்ளது. எனவே சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் நச்சுத்தன்மையற்ற சேதன விவசாய சோளப் பயிர் உற்பத்தி கருத்திட்டம் 1,560 ஏக்கர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக ரூ. 311 மில்லியன் வருமானத்தினை பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01.	அனுராதபுரம்	335	400	335	0.040	1,340
02	பொலன்னறுவை	1,000	840	1000	0.344	4,000
03	குருணாகல்	35	13	212	0.013	140
04	வவுனியா	34	149	270	0.031	132
05	கண்டி	156	258	1250	0.480	624
மொத்தம்		**1,560**	**1,660**	**3,067**	**0.908**	**6,236**

சோளம், மிளகாய் மற்றும் பெரிய வெங்காயப் பயிர்செய்கைகளை நச்சுத்தன்மையற்ற விதத்தில் மிகச் சிறப்பாகப் பயிரிட்டு எதிர்ப்பார்த்த அறுவடையையும் பெற முடிந்தது. அதன் மூலமாக அவ்வாறான பயிர்களுக்கு சேதனப் பசளைகளை மாத்திரம் பயன்படுத்தி மிகச் சிறந்த உற்பத்தி அறுவடையினைப் பெற முடியும் என்பது உறுதியானது.





அனுராதபுர மாவட்டத்தின் சோளச் செய்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

1.2.5. எள்ளுப் பயிர்ச் செய்கை

இலங்கையின் வருடாந்த எள்ளுத் தேவைப்பாடு 20,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக உரிய அமைச்சுக்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் எள்ளுவிதை உற்பத்திக் கருத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	அனுராதபுரம்	2,576	1,175	7,729	1.90	450
02	குருணாகல்	64	108	180	0.04	11
03	பொலன்னறுவை	700	950	250	0.08	122
மொத்தம்		**3,340**	**2,233**	**8,159**	**2.02**	**583**

இந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது வரட்சி வலயத்தில் ஏற்பட்ட எதிர்பாரா வரட்சி நிலைமை காரணமாக 30% அளவிலான பயிர்கள் அழிவடைந்தன. மதிப்பீட்டு வருமானம் ரூ. 117 மில்லியன்களாகும்.



அனுராதபுரம் மாவட்டத்தில் எள்ளுப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டம்

1.2.6. சோயா பயிர்ச்செய்கை

இலங்கையின் வருடாந்த சோயாத் தேவைப்பாடு 200,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக உரிய அமைச்சுக்கள் மற்றும் சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் சோயா விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று 489 ஏக்கர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக ரூ. 42 மில்லியன் அண்ணளவான வருமானத்தினை பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	அனுராதபுரம்	489	450	9,779	1.68	490

1.2.7. நிலக்கடலை உற்பத்தி

இலங்கையின் வருடாந்த நிலக்கடலைத் தேவைப்பாடு 30,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக நிலக்கடலை பயிர்ச்செய்கைப் பரப்பளவை அதிகரிப்பதற்குப் போதுமானளவு விதை இன்மை சிக்கலாக மாறியுள்ளது. எனவே சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் நிலக்கடலை உற்பத்திக் கருத்திட்டம் 290 ஏக்கர் பரப்பளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலமாக 28 மில்லியன் ரூபா வருமானத்தினைப் பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	கிளிநொச்சி	10	150	480	0.12	6
02	அனுராதபுரம்	75	80	3,000	0.77	45
03	புத்தளம்	21	41	480	0.40	12
04	குருணாகல்	159	464	6,356	0.89	95
05	வவுனியா	25	79	950	0.25	15
மொத்தம்		**290**	**814**	**11,266**	**2.43**	**173**




அனுராதபுர மாவட்டத்தில் நிலக்கடலை பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டம்

1.2.8 கௌபி பயிர்ச்செய்கை

இலங்கையின் வருடாந்த கௌபி தேவைப்பாடு 16,800 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் கௌபி உற்பத்திக் கருத்திட்டமொன்று 141 ஏக்கர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக 8.5 மில்லியன் ரூபா வருமானத்தினைப் பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	ஹம்பாந்தோட்டை	16	40	400	0.06	5.6
02	அனுராதபுரம்	125	210	1,250	0.32	44.0
மொத்தம்		**141**	**250**	**1,650**	**0.38**	**49.6**

1.2.9. குரக்கன் பயிர்ச்செய்கை

இலங்கையின் வருடாந்த குரக்கன் தேவைப்பாடு 8,750 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் குரக்கன் பயிர்ச் செய்கை கருத்திட்டம் 250 ஏக்கர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக ரூ. 18 மில்லியன் வருமானத்தினை பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	ஹம்பாந்தோட்டை	16	40	400	0.06	6.4
02	அனுராதபுரம்	125	50	1,250	0.03	50.0
03	குருணாகல்	20	27	64	0.01	8.0
04	கண்டி	89	178	250	0.01	35.0
மொத்தம்		**250**	**295**	**1,964**	**0.11**	**99.4**

1.2.10. உழுந்துப் பயிர்ச் செய்கை

இலங்கையின் வருடாந்த உழுந்துத் தேவைப்பாடு 10,000 மெ.டொ. ஆகும். இந்த இலக்கினை அடைவதற்காக சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டின் கீழ் உழுந்து உற்பத்திக் கருத்திட்டமொன்று 407 ஏக்கர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலமாக ரூ. 24 மில்லியன் வருமானத்தினைப் பெற முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொன்)
01	புத்தளம்	59	56	274	0.16	20
02	அனுராதபுரம்	220	347	2,200	0.76	77
03	குருணாகல்	16	23	187	0.04	5
04	வவுனியா	50	53	400	1.40	17
05	பொலன்னறுவை	62	70	620	0.22	21
மொத்தம்		**407**	**549**	**3,681**	**2.58**	**140**

1.3 நச்சுத்தன்மையற்ற விவசாயத்தை மேம்படுத்தல்.

நச்சுத்தன்மையற்ற விவசாயத்தை மேம்படுத்துவதற்காக 2016 சிறுபோகத்தின்போதும் 2016/17 பெரும் போகத்தின்போதும் பாரம்பரிய நெல் விவசாயத்தில் புதிதாக ஈடுபடும் 7,719 பேர் விவசாயிகளுக்கு 6,736 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் மேற்கொள்வதற்கென இலவசமாக விதை நெல் வழங்கப்பட்டது. அண்ணளவான அறுவடை 8,649 மெ.டொ. ஆகும். மதிப்பீட்டு வருமானம் ரூ. 519 மில்லியனாகும்.





களுத்துறை, அனுராதபுரம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பாரம்பரிய நெல் விவசாய வேலைத்திட்டங்கள்

உள்நாட்டுப் பாரம்பரிய நெற்பயிர்ச் செய்கை மேம்பாடு 2016 சிறுபோகத்தின் முன்னேற்றம்

	மாவட்டம்	பகிரப்பட்ட விதை நெல்லின் அளவு (கி.கி)	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	செலவு (ரூ.மில்)	பெறப்பட்ட அறுவடை (மெ.டொ)	அண்ணளவு வருமானம் (ரூ.மி)
1	பொலன்னறுவை	24,000	800	480	1.83	984	59.0
2	கிளிநொச்சி	4,410	147	278	0.31	181	11.0
3	கண்டி	1,235	60	234	0.12	74	4.4
4	இரத்தினபுரி	6,765	229	452	0.47	282	17.0
5	அம்பாறை	750	25	32	0.05	31	2.0
6	காலி	1,573	53	69	0.14	64	4.0
7	திருகோணமலை	210	7	10	0.01	8	0.4
8	கம்பஹா	1,650	45	70	0.12	55	3.2
9	மாத்தறை	390	13	18	0.03	16	0.9
10	நுவரெலியா	1,209	41	260	0.10	50	3.0
11	ஹம்பாந்தோட்டை	1,762	62	63	0.15	76	4.5
மொத்தம்		**43,954**	**1,482**	**1,966**	**3.33**	**1,821**	**109.4**





இரத்தினபுரி, திருகோணமலை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் பாரம்பரிய நெல் விவசாய வேலைத்திட்டங்கள்

உள்நாட்டுப் பாரம்பரிய நெற்பயிர்ச் செய்கை மேம்பாடு 2016/17 பெரும்போகம்

	மாவட்டம்	பகிரப்பட்ட விதை நெல்லின் அளவு (கி.கி)	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயி களின் எண்ணிக் கை	செலவு (ரூ.மில்)	எதிர்பார்க்க ப்பட்ட அறுவடை (மெ.டொ)	அண்ணளவு வருமானம் (ரூ.மி)
1	களுத்துறை	10,520.0	350.0	480	0.88	430	21.50
2	காலி	2,897.0	103.0	246	0.13	126	6.30
3	மாத்தறை	2,500.0	84.0	137	0.03	103	6.10
4	யாழ்ப்பாணம்	2,045.0	69.7	89	0.15	86	5.16
5	கிளிநொச்சி	6,950.0	232.0	124	0.89	285	17.10
6	பொலன்னறுவை	13,980.0	465.3	678	0.89	572	34.32
7	அம்பாறை	5,157.0	172.5	265	0.67	212	12.72
8	கண்டி	6,300.0	158.0	402	2.75	194	11.64
9	புத்தளம்	9,787.5	326.2	518	0.84	770	46.20
10	கொழும்பு	1,000.0	35.0	122	0.13	43	2.58
11	கம்பஹா	7,202.5	240.0	360	0.11	295	17.70
12	திருகோணமலை	105,612.0	3,018.0	2,332	11.03	3,712	222.72
மொத்தம்		**173,951.0**	**5253.7**	**5753**	**18.50**	**6,828**	**404.04**

1.4. விவசாயப் பண்ணை இயந்திரமயமாக்கல்

அதிகப்படியான இரசாயனப் பொருட்கள் பாவனையினைக் குறைப்பதையும், ஓர் அலகிற்கான உற்பத்தித் திறனை அதிகரிப்பதனையும் குறிக்கோளாகக்கொண்டு விவசாயப்பண்ணை இயந்திரமயமாக்கல் அறிமுகப் படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மிக விரைவாகக் கமத்தொழில் செயற்பாடுகளை விட்டு விலகுகின்ற இளம் சமூகத்தினரை விவசாயத்தில் கவரும் வகையிலான வேலைத்திட்டமொன்றாக 2017ஆம் ஆண்டில் விவசாய இயந்திரங்களை இலவசமாகப் பகிர்ந்தளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கென 2016ஆம் ஆண்டில் கீழ்வரும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

	இயந்திரத்தின் வகை	தெரிவு செய்யப்பட்டுள்ள குழுக்கள்	எண்ணிக்கை	செலவு (ரூ.மில்)
	வேளாண்மை பயிர் நடுகை இயந்திரங்கள்	இளம் விவசாய முயற்சியாளர்கள்	150	74.85
	தன்னியக்க வீடர் இயந்திரங்கள்	நச்சுத்தன்மையில்லாத விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள்	690	62.03
மொத்தம்			**840**	**136.88**

1.5. நச்சுத்தன்மையற்ற உணவு வகை விற்பனை நிகழ்ச்சித்திட்டம்

	விடயம்	செலவு (ரூ. மில்.)
1	சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலையீட்டுடன் பாரம்பரிய நெல் அறுவடை உள்ளடங்கலாக நச்சுத்தன்மையற்ற உணவு வகைகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல் வேலைத்திட்டம் (இதன்படி நகரங்களை மையமாகக்கொண்டு நடமாடும் விற்பனை வண்டிகள் 06இன் மூலமாக விற்பனைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், தெரிவு செய்யப் பட்ட சில நகரங்களில் நிலையான விற்பனைக் கூடங்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.)	27.430
2	விதாதா வள நிலையங்களினூடாக நச்சுத்தன்மையற்ற 06 உணவு விற்பனைக் கூடங்களை நிறுவுதல்.	0.298
3	திருகோணமலை மாவட்டத்தில் நச்சுத்தன்மையற்ற உணவுப்பொருள் விற்பனைத் தொகுதிகள் 02இல் விற்பனைக் கூடங்கள் 30% ஆரம்பித்தல்.	1.356

1.6 இனம் காணப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

1.6.1. சேதனப் பசளை தும்பங்காய் செய்கை

	மாவட்டம்	விவசாய நிலம் (ஏக்கர்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகள்/ நடுகைப் பொருட்களின் அளவு (கி.கி)	செலவு (ரூ.மில்)	அண்ணளவு அறுவடை (மெ.டொ)
1	ஹம்பாந்தோட்டை	11	127	11,000	0.97	93.8
2	மொனராகலை	01	20	2,000	0.16	8.5
3	பொலன்னறுவை	25	150	15,000	1.13	213.0
மொத்தம்		**37**	**297**	**28,000**	**2.26**	**315.3**



ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சேதன முறையிலான தும்பங்காய் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

1.6.2. கொள்ளுப் பயிர்ச் செய்கை

மருத்துவ ரீதியில் பெறுமதி வாய்ந்த கொள்ளுப் பயிர்ச் செய்கை தொடர்பில் கவனத்தினைச் செலுத்தி நுவரெலியா மாவட்டத்தில் 250 பயனாளிகளைத் தெரிவுசெய்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கென ரூ. 0.31 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



நுவரலெலியா மாவட்டத்தில் கொள்ளுப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

1.6.3. சப்ரகமுவ மாகாண சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் விசேட கருத்திட்டங்கள்

கருத்திட்டம்	விவசாயத்தின் நிலப்பரப்பளவு	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவு (ரூ.மில்.)
ஏற்றுமதிக்காக, கீழ்நாட்டு ஈரவலயத்தில் செவ்வாழைப் பயிர்ச்செய்கை கருத்திட்டத்திற்கென இழைம வளர்ப்பு ஆய்வு கூடத்தினை மேம்படுத்தல்	கேகாலை மாவட்டம் மற்றும் அதற்கு வெளியிலான விவசாயிகள்	800	2.18
ஏற்றுமதி வியாபார சந்தைக்கென மரவள்ளி விவசாயக் கருத்திட்டம்	20 ஏக்கர்	200	0.95
ஏற்றுமதி வியாபார சந்தைக்கென அன்னாசி விவசாயப் பண்ணைகளை அமைத்தல்	20 ஏக்கர்	200	0.95
மொத்தம்		**1,200**	**4.08**

இந்தக் கருத்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதன் மூலமாக பாரியளவிலான அந்நியநாட்டுச் செலாவணியை பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.





சப்ரகமுவ மாகாண சபையுடன் மேற்கொள்ளப்படும் விசேட கருத்திட்டங்கள்

1.6.4. "வேதியவர" நீர்ப்பாசனப் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம்

சிறு நீர்ப்பாசனத்திற்குரிய குளங்கள் மற்றும் அதிகளவான நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் பழுதடைந்த நிலையிலேயே உள்ளன. எனவே இலங்கைத் தரைப்படையின் இயந்திராதிகள் மற்றும் உழைப்பினைக் கொண்டு சிறு நீர்ப்பாசனப் புனரமைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன் முன்னோடிக் கருத்திட்டத்தினை திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்காக இலங்கைத் தரைப்படைக்கு 09 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 2016ஆம் ஆண்டில் 10 குளங்களின் புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளன.




சிறு நீர்ப்பாசனப் புனரமைப்புச் செயற்பாடுகள்

1.6.5. வடமேல் மாகாண சபையுடன் நடைமுறைப்படுத்தப்படும் விசேட திட்டங்கள்

	பயிர்/ வேலைத்திட்டம்	விவசாய நிலங்களின் அளவு (நிலம்)	விவசாயிகளின் எண்ணிக்கை	பகிரப்பட்ட விதைகளின் அளவு (கி.கி)	தற்போதைக்கான செலவு (ரூ.மில்.)	அண்ணளவான அறுவடை (மெ.டொ)
01	மிளகாய் (விதை, நிலத்தை பண்படுத்தல் 50%,டாபோலின் பொலிதீன் சாடிகள்)	204.0	1,352	80	2.31	408
02	சோளம்	309.0	300	1,614	1.38	761.5
03	நிலக்கடலை	792.0	1,753	31,668	5.92	712.8
04	பாசிப்பயறு	1,262.0	1,195	12,627	1.80	441.7
05	கௌபி	91.0	211	730	0.16	27.3
06	உழுந்து	134.0	181	1,071	0.15	46.9
07	எள்ளு	29.0	16	73	0.02	0.02
08	குரக்கன்	19.5	56	58	0.01	0.01
09	பெரிய வெங்காயம் (விதை உற்பத்தி)	1.5	71	6,740	0.82	0.81
10	உப உணவுப் பயிர்ச் செய்கைக்காக நிலத்தை பண்படுத்தல் ஊக்குகைக் கொடுப்பனவு 50%					0.88
	மொத்தம்	**2,842.0**	**5135**	**54,661**	**12.57**	**2,399.92**

மேற்படி பயர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களினூடாக 488 மி.ரூபா வருமானத்தை விவசாயிகள் பெற முடியும் எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.









வடமேல் மாகாண சபையுடன் மேற்கொள்ளப்படும் விசேட கருத்திட்டங்கள்

1.6.6. உள்நாட்டு பாரம்பரிய உணவு உற்பத்திகளின் போசாக்கு தொடர்பான பகுப்பாய்வு

உணவு உற்பத்தித் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்நாட்டு பாரம்பரிய உணவுப் பயன்பாடு மேம்படுத்தப்படுகிறது. இதற்கென அவ் உணவுகளின் போசாக்குத் தரம் தொடர்பிலான தகவல்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பது தேசியக் கடமையாகும். 2016ஆம் ஆண்டில் உள்நாட்டு உணவுகள் சிலவற்றின் போசாக்குத் தன்மையைத் தொழிநுட்ப நிறுவனத்தினூடாக பகுப்பாய்வு செய்வதற்கென 940,000 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

1.6.7. சேதனப் பசளை உற்பத்தி

நச்சுத்தன்மையற்ற விவசாயத்தினை மேம்படுத்துவதற்காக நாட்டினுள் சேதனப் பசளைகளை அதிகரிப்பது அத்தியாவசியமான விடயமாகும். இதற்கென இலங்கைத் தரைப்படைக்கு 12.9 மில்.ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலமாக 1881 மெ.டொ சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதில் தற்போது 45 மெ.டொ பொதியிட்டு பகிரப்பட்டு உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளினை அடைவதற்கான பங்களிப்பு நல்கப்பட்டுள்ளது.

02. சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அறிமுகம்

பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடு வேகமடைந்தமை, மக்களது வாழ்க்கை முறைமை மாற்றமடைந்தமை, சனத்தொகை மற்றும் மனிதனது தேவைப்பாடுகள் அதிகரித்தமை ஆகிய காரணிகளினால் ஏற்படுகின்ற சுற்றாடல் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நிலைபேறான சுற்றாடலை உருவாக்கும் குறிக்கோளுடன் ''மறுமலர்ச்சி'' சுற்றாடல் பாதுகாப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டம் (2016 – 2018) அறிமுகப்படுத்தப்பட்டது. சனாதிபதி அலுவலகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சனாதிபதி செயலணியினூடாக பங்குதார நிறுவனங்களுடன் ஒன்றிணைந்ததாக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன்போது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, காணி அமைச்சு,வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு உட்பட அமைச்சுக்களும் அவ்அமைச்சுக்களின் கீழ் இயங்கும் பல்வேறான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் உயரிய பங்களிப்பினை நல்குகின்றன. இதன்போது பின்வரும் பிரதான விடயப்பரப்புக்கள் 6 இன் கீழ் தேசிய வேலைத்திட்டங்கள் 21 அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

i. **சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல்**
ii. **வனப் பாதுகாப்பும் அபிவிருத்தியும்**
iii. **நிலைபேறான காணி முகாமைத்துவம்**
iv. **வனவிலங்கு மனித சகவாழ்வு**
v. **பல்வகை உயிர் வளங்களைப் பாதுகாத்தல்**
vi. **நிறுவன மீள்கட்டமைப்பு மற்றும் மேம்பாடு**

பங்குதார நிறுவனங்களால் அந்தந்தத் துறைகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் சுற்றாடல் பாதுகாப்பு சனாதிபதி செயலணி இதற்கு அவசியமான வழிகாட்டல், ஒருங்கிணைப்பு,தொடராய்வு, மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மீளாய்வினை மேற்கொள்கின்றது.

2.1 சுற்றாடல் மாசடைதலைக் கட்டுப்படுத்தல்

சுற்றாடல் மாசடைவதனைக் கட்டுப்படுத்துவதற்கு ''மறுமலர்ச்சி'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட உபாய முறைகள் பின்வரும் வேலைத்திட்டங்களின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- **குப்பைக்கூழங்களற்ற இலங்கை**
- **குப்பைக்கூழங்களற்ற நகரம்**
- **பசுமைக் கடற்கரை**
- **நீலக் கடல்**
- **தூய்மையான வாயு – நீண்ட ஆயுள்**
- **மக்கள் உயிர்காக்கும் - நீரை பாதுகாத்தல்**
- **செழிப்பான நகரம்**

சனாதிபதி செயலணியினால் சுற்றாடல் மாசடைவதனைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள் - 2016

- உள்ளூராட்சி மன்றங்களில் கழிவு முகாமைத்துவத்தினை முறைமையாக்கும் பொருட்டு வேண்டிய ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்

  - இலங்கையின் அனைத்து மாநகர சபைகளின் பங்குபற்றலுடன் சனாதிபதி அலுவலகத்திலும், மத்திய மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பங்குபற்றலுடன் கண்டியிலும் என 2 செயலமர்வுகளை நடாத்தியமை

  - உள்ளூராட்சி மன்றங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் 5 வருட திட்டத்தை தயாரிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.

- சனாதிபதி அலுவலகத்தில் கழிவு முகாமைத்துவத்தினை முறைமையாக்குதல்.

- 2016 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கொட்டப்படும் கழிவுகளை முகாமை செய்யும் வகையில் உரிய நிறங்களைக் கொண்ட குப்பைத் தொட்டிகள் 50 ஐ வழங்கி பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை மீள்சுழற்சியின் பொருட்டு பயன்படுத்தியமை.

- மாத்தளை, இரத்தினபுரி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்ட சுற்றாடல் மாநாடுகளுக்கு இணையாக பாடசாலைகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் குப்பை அகற்றல் தொட்டிகளை பெற்றுக் கொடுத்தமை.





2016 சர்வதேச புத்தகக் கண்காட்சியின்போது கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

அட்டவணை 2.1 சனாதிபதி அலுவலகத்தினூடாக சுற்றாடல் மாசடைவினைக் கட்டப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கல்

செயற்பாடு	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம்	நிதி ஒதுக்கீடு ரூ.மி	முன்னேற்றம் (2016)
பொலித்தீன் பாவனையை குறைத்தல்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	37.05	- நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் பொலித்தீன் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் மற்றும் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளும் அலுவலர்களை பயிற்றுவித்தல் - பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்,மின், இலத்திரனியல் கழிவுகள் ஒழிப்பு வாரத்தினை பிரகடனப்படுத்தல் (2016.10.24 – 2016.10.30) - அனைத்து பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிப்போர் மற்றும் மீள்சுழற்சி செய்பவர்கள் 105 பேரை பதிவு செய்தல். - 3R எண்ணக்கருவினை அடிப்படையாகக்கொண்டு நிறுவனங்களுக்கு குப்பைத் தொட்டிகளை வழங்கியமை. - சுற்றாடல் நேயமிக்க பொருட்கள் மற்றும் பல்வகைமைச் செயற்பாட்டினால் உக்கிப்போகும் பொருட்களை பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தி தேசிய அருங்கலை மன்றத்துடன் இணைந்து இரண்டு கண்காட்சிகள் நடாத்தப்பட்டன. (2016.11.20 – ம.சு.அ.ச வளாகத்தில், 2016.11.17-19 வரையில் BMICHஇல்) - பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சேகரிப்பாளர்களுக்கு பயற்சியளிக்கும் செயலமர்வுகளை நடாத்துதல். - புதிய சட்டங்களையும் விதிகளையும் அறிமுகம் செய்தல், • உணவுப் பொதியிடும் பொலித்தீன் மற்றும் பொலித்தீன் உறைகள் தடைசெய்யப்பட்டமை • பொது விடயங்களின்போது பொலித்தீன் மூலமாக செய்யப்படும் அலங்கரிப்புக்கள் தடை-செய்யப்பட்டமை. • பொலிஸ்டயரின் உணவுப் பெட்டிகள் தடை-செய்யப்பட்டமை.
இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	4.00	தொழிநுட்ப அறிவாளர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான செயலமர்வுகளை நடாத்தல். - முறையற்ற விதமாகக் கழிவு சேகரிப்பவர்களுக்குத் தெளிவுபடுத்தும் செயலமர்வுகளை நடாத்தியமை. - தேசிய இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் பொலித்தீன் பிளாஸ்டிக் ஒழிப்பு வார நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியிலான பிளாஸ்திக் பொலித்தின் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தியமை. (அதன்போது 427 டொன் இலத்திரனியல் கழிவுகள் சூழலுக்கு தீங்கற்ற விதத்தில் அழிக்கப்பட்டன.)அதே வாரத்திற்குள் சேகரிக்கப்பட்ட பாதரசம் உள்ளடங்கிய C.F.L. மின்குமிழ்கள் 90000 அலகுகள் அளவில் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்டன.

செயற்பாடு	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம்	நிதி ஒதுக்கீடு ரூ.மி	முன்னேற்றம் (2016)
வரட்சியான பிரதேசங்களில் இரசாயனக் கழிவுகளால் ஏற்படுகின்ற மாசடைவினைக் கட்டுப்படுத்துதல்.	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	3.70	- ஒவ்வொரு மாவட்டத்திலும் 400 கிராமங்கள் என்ற வகையில் 10000 கிராமங்களை "நீலப்பசுமை" கிராமங்களாக அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தல். (நிதி முன்னேற்றம் 81%) - குருணாகல் மாவட்டத்தின் பொல்பிதிகம பிரதேச செயலகப்பிரிவின் சியம்பலன்கமுவ கிராமத்தினை முன்னோடிக் கிராமமாக அபிவிருத்தி செய்தல். - ஊடுகலப்பு வடிமுறை (RO PLANTS) யினால் வெளியேறும் கழிவு நீரில் காணப்படும் பாரலோகங்கள் மற்றும் இரசாயனப் பதார்த்தங்கள் மீண்டும் சுழலுக்குள் அகற்றப்படுவதனை தடுக்கும் வகையில் சுற்றாடல் நேயமிக்க, குறைந்த செலவு மற்றும் இலகுவாக செயற்படுத்தக்கூடிய முறைமையாக phytoremediation முறைமையினை அறிமுகம் செய்தல்.
வதிவிட வாயு நிலைமை முகாமைத்துவம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	7.59	- நிதி முன்னேற்றம் 91.2% ஆகும். - உரிய கட்டிடங்களைத் தெரிவு செய்து (உதா: பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வைத்தியசாலை வளாகங்கள்) உரிய அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல். - இக்கருத்திட்டத்திற்கு ஆலோசகர் ஒருவர் மற்றும் கள உத்தியோகத்தர்களை நியமித்தல்.
நகரத் திட்டமிடல் மற்றும் கட்டிட நிர்மாணிப்புக்களின் போது பசுமை எண்ணக்கரு சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ளல்.	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	9.00	- வழிகாட்டிக் கோவையைத் தயாரித்து வெளியிடல்.
கல்வி அமைச்சின் கழிவு முகாமைத்தவ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப் படுத்தல்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	4.2	- நிதிசார் முன்னேற்றம் 99% - வெளிக்கள கற்கை நிலை முகாமையாளர்களுக்கு அடிப்படைப் பயற்சி செயல்அமர்வுகளை நடாத்தியமை மற்றும் ஒரு முகாமையாளருக்கு 10 பாடசாலைகள் என்ற வகையில் 200 பசுமைப் படையணிகளை அமைத்தல்.
இரத்தினபுரி பிரதேச சபையினால் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் களஞ்சியப்படுத்தும் நிலையத்தை அமைத்தல்.	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	2.575	நிர்மாண வேலைகள் முடிவடைந்துள்ளன.
மாத்தளை மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அரைவாசி துப்பர வேற்பாட்டு கழிவு அகற்றல் தொட்டியினை நிறுவுதல்.	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	0.80	வேரகம, விகாரகம வத்த பிரதேசத்தில் 5 ஏக்கர் நிலத்திற்குரியதாக சாத்தியவள அறிக்கை (Feasibility Report) மற்றும் எண்ணக்கரு திட்ட (Conceptual Design) வடிவமைப்பு.

செயற்பாடு	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம்	நிதி ஒதுக்கீடு ரூ.மி	முன்னேற்றம் (2016)
சுற்றாடல் மாசடை-தலைக் கட்டுப்படுத்துதல் • மலக்கழிவு அகற்றல் தொகுதிகளை அமைத்தல் - யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, கண்டி – நாவலப்பிட்டி நகர சபை • கொம்பஸ்ட் நிலையங்களை அமைத்தலும் நீடித்தலும் • கம்பஹா- ஜா-எல பிரதேச சபை, கம்பஹா- மீரிகம பிரதேச சபை.	மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	30	- யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மலக்கழிவுத் தொகுதிக் கட்டுமானப் பணிகளை அமைக்கும் செயற்பாடு இறுதிக் கட்டத்தில் உள்ளது. - ஏனைய கருத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
கணாதொல கூட்டு கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	4.00	பொலித்தீன், பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிலையம் மற்றும் கொம்பொஸ்ட் தொகுதிகள் இரண்டின் கட்டுமானங்களை மேற்கொள்ளல்.





பிலாஸ்டிக், பொலித்தீன், இலத்திரனியல் கழிவகற்றல் வாரத்தைப் பிரகடனப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு மற்றும் கண்காட்சி (20.10.2016)





ஜா-எல மற்றும் மீரிகம கொம்பொஸ்ட் தொகுதிகளை அமைத்தல்

2.2 வனப்பாதுகாப்பும் அபிவிருத்தியும்

காடழிவு மற்றும் காடழிப்பு காரணமாக உயிர்பல்வகைமைகள் அழிவடைதல், உயிரினங்களின் வாழ்விடங்கள் இல்லாது போதல், ஆற்றுப்படுக்கைப் பிரதேசங்களின் தரம் குறைவடைதல், மண் அரிப்பு அதிகரித்தல், காலநிலை மாற்றங்கள் ஏற்படல் ஆகிய பாதிப்பான விடயங்கள் பல ஏற்படுகின்றன. எனவே வனப்பாதுகாப்பு மற்றும் வன அபிவிருத்தியின் பொருட்டு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- **வனரோப்பா (காட்டு மர நடுகை)**
- **வன அரண – ரெக்கவரண (காட்டைப் பாதுகாத்தல்)**
- **வன சரண (காட்டிலிருந்து உதவிபெறுதல்)**

<u>சனாதிபதி செயலணியினூடாக வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு நடைமுறைப்படுத்திய விசேட செயற்பாடுகள் - 2016</u>

- திருகோணமலை மொரவெவ கந்தளாய் வன ஒதுக்கத்தில் 2 ஹெக்டயார் நிலப்பிரதேசத்தில் திருக்கொண்டை, வேம்பு, கருங்காலி,இலுப்பை மருதை, நாக, வீரை, மற்றும் பாலை உட்பட காட்டுமரங்கள் 2000 ஒரே தடவையில் நடப்பட்டு 2016.10.21ஆம் திகதி தேசிய மரநடுகை நிகழ்வு நடாத்தப்பட்டது.

- இலங்கையில் வனப்பகுதியின் அடர்த்தியை 32% வரை அதிகரிக்கும் வேலைத்திட்டத்திற்கு இணையாக 15 மில்லியன் மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் செயற்பாடு சனாதிபதி அலுவலகத்தின் தலையீட்டினால் ஆரம்பிக்கப்பட்டது.





தேசிய மரநடுகை விழா (2016.10.21) கன்றுகள் உற்பத்தி

அட்டவணை 2.2 : 15 மில்லியன் கன்றுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள்

நிறுவனம்	கன்றுகளின் அளவு (மில்)
இலங்கை மகாவலி அதிகார சபை	3.5
வனப் பாதுகாப்பு திணைக்களம்	5.0
அரச மரக்கூட்டுத்தாபனம்	2.0
கமத்தொழில் திணைக்களம்	4.5
வன சீவராசிகள் திணைக்களம்	0.025

- மாத்தளை மாவட்டத்தில் சுற்றாடல் மாநாட்டுக்கு இணையாக நக்கல்ஸ் வன ஒதுக்கத்திற்குரிய காணிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- இரத்தினபுரி மாவட்டச் சுற்றாடல் மாநாட்டுக்கு இணையாக இரத்தினக்கல் அகழ்வின் காரணமாகக் கரைகளில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ள களுகங்கை ஆற்றின் இருகரைகளில் 1000 மூங்கில் கன்றுகளும் மருதங்கன்றுகளும் 1000உம் நாட்டப்பட்டன.

- பொலன்னறுவையில் சுற்றாடல் வாரத்தைப் பிரகடனப்படுத்தும் ஆரம்ப நிகழ்விற்கு இணையாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பங்குபற்றிய ஏனைய அனைவருக்கும் 4000 பழக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.





பொலன்னறுவையில் சுற்றாடல் வாரத்தைப் பிரகடனப்படுத்தும் ஆரம்ப நிகழ்வின்போது பழக்கன்றுகளை பகிர்ந்தளித்தல்

அட்டவணை 2.3 : வனப் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு சனாதிபதி செயலகத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

செயற்பாடு	நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிறுவனம்	நிதி ஒதுக்கீடு (ரூ.மில்)	முன்னேற்றம்
விவசாயக் கருத்திட்டம், அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்களுக்காக பயன்பாட்டினைக் குறைத்தல் மற்றும் பலாத்காரமாக அத்துமீறிக் கைப்பற்றுதலைத் தவிர்த்தல் (அளவீடு மற்றும் எல்லைகளை அடையாளமிடல்)	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (வனப் பாதுகாப்புத் திணைக்களம்)	25.00	நிதி முன்னேற்றம் 100% ஆகும். காடுகளை அளவை செய்தல் 10 கி.மீ. எல்லைகள் அடையாளமிடல் 28 கி.மீ. எல்லைத்தூண்கள் பராமரிப்பு 278.2 கி.மீ காடுகளின் சட்டரீதியான நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தும் 30 பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல்.
சுற்றாடல் சுற்றுலாத் தொழிலை மேம்படுத்தல் (நக்கல்ஸ் வன ஒதுக்கத்தில் தகவல் மையமொன்றினை ஆரம்பித்தல்)	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, வன பாதுகாப்புத் திணைக்களம்	23.00	கட்டுமான செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. (நிதி முன்னேற்றம் 81%)
அழிவிற்குள்ளான வனஒதுக்கங்களில் மீள்நடுகைச் செயற்பாட்டின் பொருட்டு 2017 ஆம் ஆண்டிற்காக தேவையான மரக்கன்றுகளை உற்பத்தி செய்தல்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	42.00	3 மில்லியன் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் பராமரிப்புச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. (நிதி முன்னேற்றம் 100%)
25 மாவட்டங்களுக்கு மென பழ மரக்கன்று களைக் கொள்வனவு செய்தல்	உரிய மாவட்டச் செயலகம்	5.00	கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.
வெலிமடை பிரதேச செயலகப் பிரிவில் வன வளர்ப்பு கருத்திட்டம்	பதுளை மாவட்டச் செயலகம்	0.1584	கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.
வளவே கங்கை வன ஒதுக்கத்தைப் பாதுகாத்தல்	ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம்	1.515	கருத்திட்டம் நிறைவு செய்யப் பட்டுள்ளது.
சனாதிபதி பதவியேற்பு நிகழ்வுடனான மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்கள்	வவுனியா மற்றும் மொனராகலை மாவட்டச் செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	0.854	கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.



காடுகள் புனரமைக்கப்படுவதைத் துரிதப்படுத்தலும் அதற்கு உதவியளித்தலும்



கன்று உற்பத்தி



நக்கல்ஸ் வனஒதுக்கத்தில் தகவல் நிலையமொன்றை நிர்மாணித்தல்



காடுகளை அளவை செய்தலும் எல்லைகளை அடையாளமிடுதலும்

2.3. நிலைபேறான காணி முகாமைத்துவம்

அழிவடைந்துள்ள நிலவளத்தினைப் பாதுகாக்கும் நோக்கில், இலங்கையினுள் இடம்பெறுகின்ற மண் அரிப்பு மற்றும் பல்வேறு மாசடைவுகள் மூலமாக இடம் பெறுகின்ற காடழிப்பினைத் தவிர்த்துக் கொள்ளுதல், நீரக வள பிரதேசங்களைப் பாதுகாத்து நீர்வளத்தினைப் பாதுகாத்தல் அனைத்து மாணிக்கச் சுரங்கங்கள், மணல், கற்கள் மற்றும் ஏனைய கனிய வள நிலங்கள் மற்றும் கரையோர வலயங்களை இற்றைப்படுத்தி சுற்றாடல் தொகுதியினை புனரமைப்புச் செய்தல், காலநிலை மாற்றங்களுக்கேற்ற வகையில் கிராமங்களை இலங்கை முழுவதும் உருவாக்குதல். காணிப் பயன்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு கீழ்வரும் நிகழ்ச்சித் திட்டங்களை நிலைபேறான காணி முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

- காடழிவு, காடழிப்பு
- பாலைவனம், பசுந்தரைகள்
- அகழ்வினால் ஏற்படும் அழிப்பு
- காலநிலை மாற்றம்
- செழிப்பான நிலங்கள்

சனாதிபதி செயலணியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட பணிகள் - 2016

- 2014 ஆம் ஆண்டிலே அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நீரக வளமூலங்கள் அவற்றினுடைய நீரேந்தும் பிரதேசங்கள் மற்றும் வன ஒதுக்கங்களைப் பாதுகாத்தல் மற்றும் பேணல் தொடர்பான தேசியக் கொள்கையினை அடிப்படையாகக்கொண்டு மாவட்ட அடிப்படையில் நடைமுறைப் படுத்தும் முகமாக ஒன்றிணைந்த விஞ்ஞாபனமொன்றைத் தயாரித்தல்.

- பொலன்நறுவை மாவட்டத்தின் சுற்றாடல் வாரத்தைப் பிரகடனப்படுத்தும் ஆரம்ப நிகழ்வுக் கிணைவாகக் காலநிலை மாற்றத்திற்கேற்ப கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட விவசாயக் குடும்ப அங்கத்தவர்கள் 200 பேருக்கு கமத்தொழில் உபகரணங்கள் மற்றும் பழப் பயிர்கள் வழங்குதல்.

- சிறிய நீர்மின் பிறப்பாக்கிக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனால் ஆறுகளின் இயற்கை நீர் பரவியோடும் வடிவு முறையில் மாற்றத்தின் அடிப்படையில் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகுதல் மற்றும் அதனால் இடம்பெறுகின்ற சுற்றாடல் மாசடைவதனைக் குறைப்பதற்காக சனாதிபதி செயலகம் தலையிடுதல்.

- மாணிக்கக் கல் சுரங்கங்களைப் புனரமைத்தல் மற்றும் மீண்டும் நிலத்தினைச் சீர்திருத்து வதற்காகத் தலையிடுதல், சட்டவிரோத அகழ்வு மற்றும் அகழ்வு சார்ந்த நடவடிக்கைகளினால் இடம் பெறுகின்ற சுற்றாடல் சேதங்களைக் குறைக்குமுகமாக உரிய நிறுவனங்களைத் தெளிவூட்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- மண்சரிவு அச்சுறுத்தலுக்குள்ளான நிலப் பிரதேசங்களிலே அவ் அச்சுறுத்தல் நிலைமைகளைக் குறைப்பதற்காகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

அட்டவணை 2.4. நிலைபேறான காணி முகாமைத்துவம் தொடர்பாக சனாதிபதி செயலகத்தினால் ஒதுக்கீடுகளை வழங்குதல் - 2016

செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட நிறுவனங்கள்	ஒதுக்கீடுகள் (ரூ. மில்.)	முன்னேற்றம்
இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் உயர் நீரக ஆற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களின் முகாமைத்துவம்	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	10.00	08 பிரதேச செயலகங்களில் தெளிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மரநடுகை நடவடிக்கைகளை மேற்கொண்டமை
நிலைபேறான நில முகாமைத் துவம் (இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் உயர் ஆற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசங்களை முகாமைத்துவம் செய்தல்	இரத்தினபுரி மாவட்டச் செயலகம்	05.00	பதுளை, ஹப்புத்தளை, வெலிமட, பண்டாரவளை, ஊவபரணகம, எல்ல, ஹாலி - எல ஆகிய 07 பிரதேச செயலகங்கள் நிகழ்ச்சித் திட்டத் திற்காக தெரிவு செயயப்பட் டுள்ளமை - அப்பிரதேசங்களிலே 60,095 கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. - பூர்த்தி செய்யப்பட்ட மொத்த வனப்பிரதேசத்தின் அளவு 75.7 ஹெக்டயர்.
நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, காலி, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலே மாதிரிக் கருத்திட்டங்களாக 20 ஏக்கர் படி நீரேந்தும் பிரதேசங்களை அண்மித்ததாக காட்டு மரநடுகை மேற்கொள்ளுதல்	நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு	10.00	மாவட்ட நிலையப் பொறுப்பு அலுவலர்களைத் தெளிவுபடுத்தி சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களைத் தெரிவுசெய்து 114 ஏக்கரில் நடுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமை

செயற்பாடுகள்	ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட நிறுவனங்கள்	ஒதுக்கீடுகள் (ரூ. மில்.)	முன்னேற்றம்
காணிப் பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 11 மாவட்டங்களுக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு முன்மொழிவுகள் உள்ளடங்கிய 44 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்	காணி அமைச்சு	5.5	காணிகளை அடையாளங் காணுதல், கன்றுகளைக் கொள்வனவு செய்தல், நடுகை, மண்பாதுகாப்பு முறைமைகளைப் பின்பற்றுதல், தெளிவூட்டுதல் மற்றும் அறிவித்தல் பலகைகளைப் பொருத்துதல் (அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் நிறைவு செய்யப்பட்டு 100% வீதம் முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.
வெலிஓய நீர் தேங்கும் பிரதேசத்தினை முகாமை செய்வதற்காக நிலப்பயன்பாட்டினை ஆராய்தல் மற்றும் முகாமைத்துவத் திட்டங்களை தயாரித்தல்.	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	1.83	2016 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்றம் 85% ஆகும். - சுற்றாடல் ரீதியாக பிரச்சினைகள் உள்ள பிரதேசங்கள் காட்டப்படும் தேசப்படங்கள் மற்றும் சமூகம் எவ்வாறு இயற்கை விபத்துக்களுக்கு ஆளாகலாம் என்பதை காட்டும் தேசப்படங்களைத் தயாரிக்கும் ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.









மண்பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல்

2.4. தாபன மறுசீரமைப்பும் மற்றும் மேம்பாடும்

சுற்றாடல் விடயமானது பரந்த இடைவெளியையும் அதேபோன்று ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட விடயங்களையும் கொண்டுள்ளதால் அனைத்துப் பிரிவுகளிலும் ஏற்ற இறக்க ரீதியில் என்ற அடிப்படையில் சுற்றாடல் கூறுகள் காணப்படுவதாலும், சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்போது நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாட்டுக்காகக் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்கள்
- கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு
- மக்கள் குரல்

சனாதிபதி செயலணியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட பணிகள் - 2016

- சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாகப் புத்திஜீவிகளுக்கிடையில் கலந்துரையாடலை ஏற்படுத்துவதையும், புத்திஜீவிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடையே முனைப்பான பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதையும் நோக்காகக்கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புத்தி ஜீவிகளுடன் 2015.12.29 ஆம் திகதி மற்றும் 2016.03.23 ஆம் திகதிகளில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தினை நோக்காகக் கொண்டு இக்குழுவின் முன்மொழிவு பயன்படுத்தப்படுகிறது.

- சுற்றாடல் பாதுகாப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினைச் சமூகமயப்படுத்துவதற்கும் தெளிவூட்டுவதற்குமாக சுற்றாடல் மாநாடுகள் மற்றும் தேசிய நிகழ்வுகள் நடாத்தப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களுக்குரியதான சுற்றாடல் பிரச்சினைகளை அடையாளம் காணுதல், அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தொடராய்வு நடவடிக்கைகள் சுற்றாடல் மாநாட்டுக்கிணைவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அட்டவணை 2.5. சுற்றாடல் மாநாடு மற்றும் தேசிய நிகழ்வுகளை நடாத்துதல் - 2016

மாவட்டங்கள்	இடம்பெற்ற திகதி	நடைமுறைப்படுத்துகின்ற இணை நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மற்றும் முன்னேற்றம்
இரத்தினபுரி சுற்றாடல் மாநாடு - சீவலி விளையாட்டரங்கு	2016.03.07	இணை நிகழ்ச்சித் திட்டங்கள் - 15 (முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 02 நடாத்தப்பட்டுள்ளது)
பொலன்னறுவை பளுகஸ்தமண சேவா முக்த முகாம் ம.வி.	2016.05.30	சர்வதேச சுற்றாடல் தினத்திற்கு இணைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட சுற்றாடல் வார பிரகடன ஆரம்ப வைபவம்
மாத்தளை சுற்றாடல் மாநாடு - எட்வேட் விளையாட்டு அரங்கு	2016.06.05	இணை நிகழ்ச்சித் திட்டங்கள் - 34 (முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் 01 நடாத்தப்பட்டுள்ளது)
திருகோணமலை சுற்றாடல் மாநாடு – மக்கேசர் விளையாட்டரங்கு	2016.10.21	இணை நிகழ்ச்சித் திட்டங்கள் - 17







இரத்தினபுரி மாவட்ட சுற்றாடல் மாநாடு (2016.03.07)





மாத்தளை மாவட்ட சுற்றாடல் மாநாடு (2016.06.05)







திருகோணமலை மாவட்ட சுற்றாடல் மாநாடு (2016.10.21)

- பாடசாலை சுற்றாடல் சங்கங்களை அமைத்தல் மற்றும் சுற்றாடல் நேயம்மிக்க பாடசாலை சூழலொன்றை ஏற்படுத்துவதற்காக சனாதிபதி அலுவலகத்தினால் ரூபா 4.2 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடல் நேய விடயங்கள் உள்ளடக்கித் திருத்தப்பட்ட விஞ்ஞான பாடநிரல் தொடர்பாக ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது. ஏற்கனவே 8 மாகாணங்களின் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட 200 பாடசாலைகளினது திண்மக் கழிவு முகாமைத்துவத்தினை முறைமைப்படுத்தி பசுமைப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

03. போதைப்பொருள் தடுப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

போதைப்பொருள் பயன்பாட்டில் இளம் பராயத்தினர் கூடுதலாக ஈடுபடும் போக்கு காணப்படுகின்றமை யானது இலங்கையின் பொருளாதார மற்றும் பண்பாட்டு விழுமியங்களின் பின்னடைவிற்கு மிகப்பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியுள்ளது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானத்தில் 1/3 பகுதியளவு மதுசாரம் மற்றும் புகைத்தலுக்குச் செலவு செய்யப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதுடன், நாட்டின் சுகாதாரத்துறைச் செலவின் 22 சதவீதம் அதிகமான அளவு நேரடியாக போதைப்பொருளைப் பயன்படுத்தியவர்களுக்காகச் செலவுசெய்ய வேண்டியேற்பட்டுள்ளது. இத்துர்ப்பாக்கிய நிலமையிலிருந்து நாட்டை மீட்டெடுத்து எண்ரீதியான அபிவிருத்திக்காக "போதையிலிருந்து விடுபட்ட நாடு" என்ற இந்நிகழ்ச்சித்திட்டமானது போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

போதைப்பொருள் தடுப்புக்கு உரிய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து 2015 ஆம் ஆண்டிலே போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டதுடன் இச்செயலணியினால் போதைப்பொருள் தடுப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அனைத்து மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல்.

2014 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2020 ஆம் ஆண்டாகும்போது இலங்கையின் சட்டவிரோத போதைப் பொருள் உற்பத்தி, கொண்டுசெல்லுதல் மற்றும் விற்பனையை 80% இனால் குறைத்தல், தனிநபர் மதுசாரப் பயன்பாட்டினை 25% இனால் குறைத்தல், புகையிலை உற்பத்திப் பயன்பாட்டினை 50% இனால் குறைத்தல் போன்றன போதைப் பொருள் தடுப்புத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்காகும்.

அதற்கமைவாக, போதைப்பொருள் கேள்வியினைக் குறைப்பதுடன் வழங்கலைக் குறைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தி பின்வரும் 3 பிரதான பிரிவுகளின்கீழ் இந்நிகழ்ச்சித்திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

1. கொள்கை, சட்டமாக்குதல் மற்றும் முற்றுகை
2. சிகிச்சையும் புனர்வாழ்வளித்தலும்
3. தடுத்தல்

1. கொள்கை, சட்டமாக்குதல் மற்றும் முற்றுகை

போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியினால் போதைப்பொருள் தொடர்பான முற்றுகைச் செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காகவும் தொடராய்வுச் செய்முறையினை நடைமுறைப்படுத்துவதற்காகவும் இலங்கைப் பொலிசார், மதுவரித் திணைக்களம் மற்றும் முப்படைகளை ஒன்றிணைத்து அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்காகக் கீழ்வருமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- அனைத்து உள்நாட்டுப் பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவு, சர்வதேசப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் குற்றவியல் மற்றும் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான அலுவலகத்துடன் போதைப்பொருள் வியாபாரத்தினைத் தடுப்பதற்காக புலனாய்வு அலகொன்றினை உருவாக்குதல்.

- கொழும்புத் துறைமுகத்திற்குள் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திற்கு இணைந்ததாக பலம்வாய்ந்த விசாரணை அலகொன்றினை உருவாக்குவதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை.

- அபாயகரமான ஔடத சட்டத்தின்கீழ் வரும் சம்பிரதாயப் போதைப்பொருட்கள், போதை வில்லைகள் போன்ற புதிய போதைப்பொருட்கள் தொடர்பான முற்றுகை மேற்கொள்கின்ற அலுவலர்களின் அறிவினை மேம்படுத்துவதற்குரிய நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

- மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 46, 47 மற்றும் 50 ஆம் பிரிவுகளைத் திருத்துவதன் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்களின் முற்றுகைக்கு அவசியமான சட்டரீதியான ஏற்பாடுகளை வழங்குதல்.

- போதைப்பொருளுடன் தொடர்பான சந்தேக நபர்களை 48 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் உரிய சட்டத் திருத்தங்களை மேற் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- மாதத்திற்கொரு தடவை அனைத்துப் பாதுகாப்புப் பிரிவுகளும் சந்தித்து முற்றுகை தொடர்பாக தொடராய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1.1 முப்படை, பொலிஸ் மற்றும் மதுவரித் திணைக்களத்தின் முற்றுகை மற்றும் செயற்பாடுகள்

போதைப்பொருள் பயன்பாடானது துரிதமாகப் பரவுவதற்குப் பிரதான காரணமாக அமைவது போதைப்பொருள் நாட்டிற்குள் மலிவாக இருத்தலாகும். அப்பரவுதலைக் குறைப்பதாயின் தடை-செய்யப்பட்ட போதைப்பொருட்களை நாட்டிற்குள் கொண்டுவருவதைத் தடுப்பது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அப்பணிகள் தொடர்பாகக் கடற்படையானது 2016 ஆம் ஆண்டிலே உயர்மட்டத்திலே வெற்றிகளை ஈட்டிக்கொண்டுள்ளதுடன் கடற்படை உத்தியோகத்தர்களைப் போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து தவிர்ந்துக் கொள்வதற்காகவும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடற்படை முகாம்களினுள் நடாத்திச் செல்லப்படுகின்ற உணவகங்களில் புகைத்தல் மற்றும் மதுபான விற்பனை முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர்களின் விடுதிகள் மற்றும் சிரேஷ்ட கடற்படை விடுதிகள் உள்ளிட்ட கடற்படை நிறுவனங்களில் புகைத்தல் விற்பனையும் தடை-செய்யப்பட்டுள்ளது. வீடுகள், கடற்படை முகாம்கள் மற்றும் ஏனைய பொது இடங்களில் பிரதானமாக முகாமிற்குள் போதைப் பொருட்கள் கொண்டுவருவதனைத் தவிர்ப்பதற்காகக் கடற்படை நுழை-வாயில்களில் புகைத்தல் மற்றும் மதுபான ஒழுக்காற்றுப் பாதுகாப்புப் பிரிவினால் அனைத்துக் கடற்படை உத்தியோகத்தர்களும் கடும் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

2016 ஆம் ஆண்டிலே ஒக்டோபர் மாதமாகும்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் தொடர்பான தகவல்கள் கீழ் வருமாறு.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் வகை	அளவு (கி.கி)
ஹெரோயின்	113.3
கேரள கஞ்சா	1,657.4
உள்நாட்டு கஞ்சா	7,235.9

மேலும் ஹொக்கேன், கசீஸ், கஞ்சா கலக்கப்பட்ட புகையிலை, மதன லேகியம், பான்பராக், ஹென்ஸ், பஜாஜ்ஹென்ஸ், பெசி பௌடர் மற்றும் போதையூட்டும் வில்லைகள் போன்ற தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களைப் பாரிய அளவில் கைப்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியுடன் இலங்கை இராணுவம், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன இணைந்து தேசிய பணியில் ஈடுபட்டுள்ளது. மாவட்ட மற்றும் பிரதேச தெளிவூட்டல் நடவடிக்கைகளின் போது இராணுவத்தினரைக் கள நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தி அறிவூட்டுதல்தொடர்பான நடவடிக்கைகளுக்காக நேரடிப் பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினாலும் அத்திணைக்கள உத்தியோகத்தர்களைத் தெளிவூட்டும் பல்வேறு நடவடிக்கை மூலமாகப் பாரிய சேவையினைப் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பில் சனாதிபதி செயலணிக்கு வழங்கியுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேல் மாகாணத்தில் கைப்பற்றப்பட்டுள்ள நச்சுப் போதைப் பொருட்களின் பெறுமதி (கொக்கேன், ஹெரோயின், கேரள கஞ்சா, கஞ்சா) ரூபா 250.9 மில்லியன் ஆவதுடன் ரூபா 1.2 மில்லியன் பெறுமதியான சட்டவிரோத மதுபானம் மற்றும் புகைத்தல் என்பவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கை மதுவரித் திணைக்கள அறிக்கைகளின்படி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வரித்தொகைகளின் ஒப்பீடு பின்வருமாறு :

2015 வரித் தொகை	2016 வரித் தொகை	2015/2016 (குறைவு/அதிகரிப்பு) %
120,794,510,293.29	105,957,033,447.21	14%

2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் சட்டவிரோதமான முறையிலே எதனோல் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அச்சட்டவிரோத எதனோலினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மதுசாரம் பதியப்படவோ அல்லது வரி அறவீட்டுக்கு உட்படவோ இல்லை. போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணி செயற்படத் தொடங்கியது முதல் இவ்வாறு சட்டவிரோதமாகக் காணப்பட்ட எதனோல் நிறுத்தப்பட்டதனால் அனைத்துப் போதைப்பொருள் சார்ந்த உற்பத்திகள் பதிவு செய்யப்படுதலும் அவ் உற்பத்திகளுக்கு முறையாக வரி அறவீடு செய்தலும் ஆரம்பமானது. இது உற்பத்தியின் அதிகரிப்பு அல்லாததுடன் உண்மையான உற்பத்திகள் பதிவுக்குட்படுத்தப்பட்டு, உரியவாறான முறையிலே வரிஅறவீடு செய்யப்பட்டதன் பெறுபேறாகும்.

அதேபோல் போதைப்பொருள் தடுப்புச் செயலணியின் செயற்பாடுகளினால் மதுபான உற்பத்திச் சாலைகள் கடும் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட்டது. அதன் காரணமாக உண்மையான மதுபான உற்பத்திகள் பதிவு செய்யப்படுதல் இடம்பெற்றது. அதேபோன்று சட்டவிரோத மதுபான முற்றுகைகளும் அதிகரித்தன. 2014 ஆம் ஆண்டிலே முற்றுகைகளின் எண்ணிக்கை 29,176 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டாகும் போது அது 32,783 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நாட்டினுள் சட்டவிரோத மதுபானங்கள் அதிகூடிய அளவில் குறைந்துள்ளமை காணப்படுகின்றது.

இறக்குமதிசார் வரி விதிக்கப்படாத வெளிநாட்டு மதுபானங்கள் நாட்டிற்குள் உள்வருவதை தடை-செய்வதற்குச் சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2016/01/01 க்கு முன்னர் இலங்கையினுள் வெளிநாட்டு மதுபானத்தினை உடைமையில் வைத்திருத்தல் அல்லது கொண்டு செல்லுதல் தொடர்பில் வரையறைகள் இருந்துள்ளதுடன் 2016/01/01 முதல் வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பில் அவ்வரையறை 7.5 லீட்டராக மாறியது.

இதற்கு மேலதிகமாக 2016/09/01 முதல் இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் வெளிநாட்டு மதுபானங்களை ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பெறுபேறாக வெளிநாட்டு மதுபான முற்றுகைகள் அதிகரித்துள்ளதுடன் வெளிநாட்டு மதுபானங்களில் குறைவு காணப்பட்டது.

இவ்விடயங்களைக் கவனமாக உற்றுநோக்கும்போது காணக்கூடிய விடயம் நாட்டிலே சட்டம் நடைமுறைப்படுத்தலிலே இடம்பெற்றுள்ள மாற்றமாகும். எழுந்த வாரியாக உற்பத்தி அதிகரிப்பு காணப்பட்டாலும் உண்மையில் நடைபெற்றுள்ளது நாட்டிற்குள் சட்டவிரோத மதுபானம் குறைவடைந்துள்ளமையும், அனைத்து மதுபானங்களும் பதிவு செய்யப்பட்டு, வரி அறவீட்டிற்குட் பட்டமையும் ஆகும்.

தற்போதுள்ள அரசு பிரயோகரீதியிலே போதையிலிருந்து விடுபட்ட நாடு என்ற மகுடத்தின் கீழ் போதைப்பொருள் தடுப்புச் செயலணியினை ஒருங்கிணைத்துக்கொண்டு நாடுபூராகவும் போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றினை மேற்கொள்வதன்மூலமாக மதுபானத்தினைக் குறைக்கும் அரச கொள்கையினை வெற்றிபெறச் செய்வதில் இவ்வாறு பங்களிப்பைச் செய்துள்ளது.

1.2 புகையிலை பயிர்ச்செய்கையாளர்களை வேறு பயிர்ச் செய்கைகளுக்கு ஈடுபடுத்துதல்

புகையிலைப் பயிர்ச்செய்கையின் ஆர்வத்தை இல்லாமல் செய்வதற்காகப் புகையிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கு மிகவும் மனம்கவரும் பயிர்களை அறிமுகப்படுத்தல், நடவடிக்கைகள், இலங்கை புகையிலைக் கம்பனி மற்றும் கமத்தொழில் அமைச்சின் ஒத்துழைப்புடன் மாத்தளை, பதுளை,

அநுராதபுரம், பொலன்நறுவை, குருநாகல், நுவரெலியா, மொனராகலை மற்றும் கண்டி மாவட்டங்களில் போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியின் வழிகாட்டலின்மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் 2000 ஹெக்டயர் அளவு புகையிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் செய்கையாளர்கள் அதிலிருந்து அகற்றப்பட்டு வேறு பயிர்ச்செய்கைகளுக்கு முறையாக ஈடுபடுத்தப்படுகின்றனர். அதற்கமைவாக வருடாந்தம் புகையிலைப் பயிர்ச்செய்கையிலிருந்து அகற்ற எதிர்பார்க்கும் காணிகளினுடைய அளவுகள் கீழ்வருமாறு.

ஆண்டு	2016	2017	2018	2019	2020
புகையிலைப் பயிர்ச் செய்கையிலிருந்து விடுவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற காணியின் அளவு (ஹெக்டயர்)	200	400	600	400	400

அதற்கமைய முழுமையாக இந்த நாட்டில் புகையிலைப் பயிர்ச்செய்கையை நிறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில், புகையிலைப் பயிர்ச் செய்கையிலே தற்போது ஈடுபட்டுள்ள பயிர்ச்செய்கையாளர்களுக்கு வேறு பொருளாதார பயிர்களை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் மற்றும் சந்தைவாய்ப்புத் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் இந்நிகழ்ச்சித் திட்டத்திலே உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் பெரும்போகத்தின்போது மாற்று ஏற்றுமதி விவசாயப் பயிராக 50 ஏக்கர் நிலப்பரப்பில் உடுதும்பர மற்றும் தெல்தெனிய போன்ற பிரதேசங்களிலே மிளகு பயிர்ச்செய்கையும் 2017 இல் அம்மாதிரிச் செய்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறுபோகத்தின்போது 527.5 ஏக்கர் நிலப்பரப்பில் சோளம், கௌபி, வற்றாளை, உள்நாட்டு நெல்,மிளகாய், பாசிப்பயிறு, கச்சான் போன்றவை மெல்சிறிபுர மற்றும் மஹியங்கனை, கலேவெல போன்ற பிரதேசங்களில் மாற்றுப் பயிர்களாகச் செய்கை பண்ணப்படுகிறது.

1.3 போதைப்பொருள் தொடர்பான தவறுகளுக்காகத் தண்டப்பணம் மற்றும் தண்டனைகளை அதிகரித்தல்

கஞ்சாவினை உடைமையில் வைத்திருத்தல் தொடர்பாக தண்டப்பணத்தினை ரூபா 5,000 இல் இருந்து ரூபா 50,000 வரை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ள ஏனைய தண்டனைகள் மற்றும் தண்டப்பணங்களை அடையாளம் கண்டு உரிய சட்டச் சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடுபூராகவும் அமைந்துள்ள போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளிக்கும் நிலையங்களில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் உள்ளடக்கங்களை காலத்தின் சமூகத் தேவைப்பாட்டின் அடிப்படையில் திருத்தியமைத்து மற்றும் மேம்படுத்தி உரிய அவதானிப்புக்கள் சனாதிபதி செயலணியினால் மேற்கொள்ளப்படுகின்றது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களைப் புனர்வாழ்வளிப்பதற்காகச் சுயமாகவும் வெளிநபர்களுடைய வழிகாட்டல் மூலமாகவும் ஈடுபடுத்தப்படுவதுடன் போதைப்பொருள் பயன்பாட்டின் காரணமாகச் சட்டரீதியாகக் குற்றவாளியாக்கப்பட்டவர்களைச் சிறைச்சாலையினுள்ளே புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளுக்குள்ளாக்கப்படுகிறது.

இவ்வனைத்து புனர்வாழ்வளிப்பு நிலையங்களிலும் மனித மற்றும் பௌதிகவளத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உரிய அமைச்சுக்களால் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நேரடி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் சனாதிபதி செயலணியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஒளடதங்களுக்கு அடிமையாகிய நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு) தொடர்பான சட்டத்தின் கீழ் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களைப் பாதுகாத்தல் மற்றும் புனர்வாழ்வளிப்புக்காக புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தின் கீழ் கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் 2013 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

புனர்வாழ்வு பெற்றவர்களுடைய வாழ்க்கைத்தரம், சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியினை மேம்படுத்துவதற்காகத் தொழில் பயிற்சியொன்றினை வழங்கும்பொருட்டு 2016 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்விப் பயிற்சி நிலையம் சேனபுரவில் நிர்மாணிக்கப்பட்டது.

புனர்வாழ்வளிப்புச் செயற்பாடானது ஒரு வருட வரையறுக்கப்பட்ட காலத்தைக் கொண்டதாகும். முதல் 6 மாத கால சிகிச்சை புனர்வாழ்வளிப்பு நிலையம் கந்தக்காடு மூலம் பிரதான புனர் வாழ்வளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக ஆன்மீக ஆலோசனைகள், கல்வி, யோகா பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அழகியல் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் சிகிச்சை முறைகளுக்காகப் பின்பற்றப்படுகின்றன.

இரண்டாவது 6 மாத காலத்தினுள் தொழில்பயிற்சியினை வழங்குவதற்காக சேனபுரவில் உள்ள மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி நிலையத்தின் மூலமாக தேசியப்பயிலுநர் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அதிகாரசபை மற்றும் இலங்கைத் தொழில்பயிற்சி அதிகாரசபை என்பவற்றுடன் இணைந்து தொழில்பயிற்சித் திறன்களை வழங்குவதற்காக தச்சுவேலை, தளபாட கற்கை நெறி, மரவேலைக் கட்டிட கற்கைநெறி, கட்டிடக் கற்கை நெறி, நீர்க் குழாய்க் கற்கைநெறி, கட்டிடக் கலை கற்கைநெறி, மின்சாரத் தொழில்நுட்பக் கற்கைநெறி, கணனிக் கற்கைநெறி மற்றும் உருக்கு வேலைக் கற்கைநெறி ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வெற்றிகரமாக கற்கை நெறிகளை பயின்று புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளவர்களுக்காக NVQ III சான்றிதழை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்பயிற்சிக் கற்கைநெறிக்கு மேலதிகமாகத் தொழில் துறைசார் நேரொத்த நிகழ்ச்சித் திட்டங்கள், தொழில்நுட்ப நிறுவனம், தென்னை அபிவிருத்தி அதிகாரசபை, தொழில்நுட்ப அபிவிருத்திச் சபை, இலங்கை பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்திச் சபை, பிறிமா நிறுவனம், வர்ண மீன்கள் இனப்பெருக்கப் பயிற்சி நிலையம், கால்நடை உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களம் போன்ற நிறுவனங்களைத் தொடர்புபடுத்திக்கொண்டு புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுக்குச் சுயதொழில் வாய்ப்புக்களை பல்வேறு தொழில்துறைகள் மூலமாக ஏற்படுத்துவதற்காக இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு போதைப்பொருள் தடுப்பு சனாதிபதி செயலணியினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புனர்வாழ்வளிப்புச் செயற்பாட்டின் கீழ் ஆரம்பம்முதல் இன்றுவரை தொடராக மூன்று வருடங்களுக்கு அண்மித்த காலங்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகள் புனர்வாழ்வளிப்புச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன்பின்னர் 6 மாத காலம் தொழில்பயிற்சியில் ஈடுபடுத்தி சமூகமயப்படுத்தப்பட்டவர்கள் விபரங்கள் அவர்களின் மாவட்ட அடிப்படையில் கீழ்வருமாறு.

அட்டவணை 2.1 **போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக புனர்வாழ்வளிக்கப்பட்டு 2016 திசெம்பர் 31 ஆம் திகதி ஆகும்போது சமூகமயப்படுத்தப்பட்ட மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற போதைப்பொருள் தொடர்பான குற்றவாளிகள் மாவட்ட அடிப்படையில்**

தொ இல.	மாவட்டம்	புனர்வாழ்வளிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை	சமூகமயப்படுத் தப்பட்டவர்களின் எண்ணிக்கை	புனர்வாழ்வளிக்கப் பட்டுக்கொண்டி ருப்பவர்களின் எண்ணிக்கை
1	அம்பாறை	5	5	-
2	அநுராதபுரம்	38	31	7
3	பதுளை	8	6	2
4	கொழும்பு	1016	693	215
5	காலி	28	22	4
6	கம்பஹா	440	358	73
7	அம்பாந்தோட்டை	29	15	5
8	களுத்துறை	128	103	18
9	கண்டி	32	21	10
10	கேகாலை	23	18	5
11	குருநாகல்	92	80	13
12	மாத்தறை	8	5	3
13	மொனராகலை	1	1	-
14	மாத்தளை	1	0	1
15	நுவரெலியா	3	1	2
16	பொலன்நறுவை	8	8	-
17	புத்தளம்	55	49	5
18	இரத்தினபுரி	13	12	1
19	திருகோணமலை	7	7	-
20	மட்டக்களப்பு	1	0	1
	மொத்தம்	**1936**	**1435**	**363**

போதைப்பொருட்களுக்கு அடிமையாகிப் புனர்வாழ்வின் பின்னர் சமூகமயப்படுத்தப்பட்டவர் களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற தொடராய்வுச் செயற்பாடு

போதைப்பொருட்களுக்கு அடிமையாகிச் சமூகமயப்படுத்துப்பட்டவர்களுடைய பொருளாதார, சமூக நிலைமைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களைப்பற்றித் தேடிப்பார்த்தல் மற்றும் நேரடியாக அதில் தலையீடுகளை மேற்கொள்வதன்மூலம் அவர்களை நாட்டுக்கு வினைத்திறனான மற்றும் பயனுள்ள பிரசைகளாக மாற்றுதல் காலத்தின் தேவையாகவுள்ளது.

இச்செயற்பாட்டின்போது அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் பொருளாதார சமூக மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக முக்கியத்துவம் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தின்கீழ் உள்ள புனர்வாழ்வு பெறுநர்களுக்கு

சமூகத்தில் வாழும்போது ஏற்படக்கூடிய அல்லது முகங்கொடுக்கவேண்டி ஏற்படும் பிரச்சினைகளைப்போன்று பொருளாதார அசௌகரியங்கள் மற்றும் தொழிலின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் நிவாரணம் அளித்தல் அவர்களுக்குச் சமூகத்திலே சிறந்த நபர்களாக வாழ்வதற்குள்ள இயலுமையை தேடிப்பார்ப்பதற்காக இப்பணியகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுடைய பொருளாதார, சமூக மற்றும் நலனோம்புகை நடவடிக்கை ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் 2 கொழும்பு மற்றும் புத்தளம் போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

அதன்கீழ் தற்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட 1258 பேர்களில் மாதிரியாகப் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் 373 பேர் தொடர்பாகத் தொடராய்வு செய்து அவர்களின் கருத்துக்கள் மற்றும் முன் மொழிவுகளுக்கமைய தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் காணும் மேற்பார்வை செய்யப்படுவதுடன் அதன்போது அடையாளம் காணப்பட்ட முக்கிய விடயங்களைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்.

- சமூகமயப்படுத்தப்பட்ட புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களுடைய போதைப்பொருள் பயன்பாட்டின் தற்போதைய நிலைமைக்கமைவாக 26.% ஆகவும் எந்தவித போதைப்பொருட்களையும் பயன்படுத்தாதவர்களின் எண்ணிக்கை 26.3% ஆகவும் அபாயகரமான போதைப்பொருள் தவிர்ந்த ஏனைய போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றவர்களின் எண்ணிக்கை 24.4% ஆகவும் மீண்டும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிச் சிறை தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5.9% ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- அவ்வாறு அடையாளம் காணப்பட்ட புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை தொழில்களின் தன்மை அடையாளம் காணப்பட்டதுடன் அதற்கமைவாக 19% ஆனவர்கள் கூலித்தொழில்களிலும், 13% ஆனவர்கள் வேலையற்றவர்களாகவும் 3% ஆனவர்கள் வெளிநாட்டில் வசிப்பவர்களாகவும், புனர்வாழ்வு பெற்றவர்களில் சிறு தொகையினர் சிறு அளவில் சுயதொழில்களிலும் மற்றும் தனியார் தொழில்களிலும் ஈடுபடுவர்களாகவும் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

- மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் கூடுதலாக கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் போதைப்பொருள் பயன்பாட்டாளர்கள் பரந்து காணப்படுவதை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

அதற்கமைவாக சனாதிபதி செயலணியின் அறிவுறுத்தல்களுக்கமைய புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் மேற்குறித்த 03 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் தொடராய்வுப் பணிகள் கூடிய கவனத்துடன் மேற்கொள்வதுடன் அதற்குரிய எண்கள் ரீதியான தரவுகள் பின்வருமாறு:

மாவட்டம்	2016 ஆம் ஆண்டில் சமூக மயப்படுத்தப்பட்ட எண்ணிக்கை	தொடராய்வு செய்யப்பட்ட எண்ணிக்கை	தொடராய்வு செய்யப்படாத எண்ணிக்கை
கொழும்பு	666	202(30%)	464(70%)
கம்பஹா	352	112(32%)	240(68%)
களுத்துறை	99	30(30%)	69(70%)
மொத்தம்	**1117**	**344(31%)**	**773(69%)**

2017 ஆம் ஆண்டில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகியவர்கள் 3,000 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோரை புனர்வாழ்வளித்துத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குமாறும் உரியவாறு புனர்வாழ்வளிக்குமாறும் அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

03. தடுப்பு

3.1 <u>விசேட போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மாவட்ட ரீதியில் நடாத்துதல்.</u>

"போதையிலிருந்து விடுபட்ட நாடு" எனும் தொனிப்பொருளின்கீழ் ஒன்பது தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட ரீதியிலும் களுத்துறை மாவட்டத்தில் மட்டும் அனைத்து பிரதேசச் செயலகப் பிரிவுகளை உள்ளடக்கும் வகையிலும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இப்போதைப்பொருள் நிகழ்ச்சித் திட்டங்களின்போது போதைப்பொருள் பாவனையின் பாதகமான விளைவுகளும் அதனைத் தவிர்த்துக் கொள்வதால் ஏற்படும் நன்மைகளும் அறிவுறுத்தப்படுகின்றது.

அட்டவணை 3.2 போதைப்பொருள் தடுப்புத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்ளடங்கிய பிரதேச செயலகப் பிரிவுகள்

இடம்பெற்ற மாவட்டம்	திகதி	பிரதேசச் செயலகப் பிரிவு	பிரதேசச் செயலகப் பிரிவில் அறிவூட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை	மாவட்டமட்ட நிகழ்ச்சிக்கு பங்குபற்றியர்களின் எண்ணிக்கை (ஏறத்தாழ)
1. கம்பஹா	2015.07.09	13	3,921	3,000
2. காலி	2015.09.18	19	5,618	1,500
3. கேகாலை	2015.11.16	11	3,324	1,000
4. கொழும்பு	2016.01.19	13	3,918	1,500
5. குருநாகல்	2016.04.05	30	9,027	3,000
6.நுவரெலியா	2016.06.26	5	1,516	1,500
7. புத்தளம்	2016.07.11	16	4,848	3,000
8. குருநாகல் (ஹிரியாலை)	2016.08.31	02	2,120	5,000
9. யாழ்ப்பாணம்	2016.09.09	15	4,519	3,000
10.களுத்துறை	2016.12.	14 (கிராமியக் குழுக்கள் 762)	5,230	பிரதேசச் செயலக மட்டத்திலே அறிவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்கள்
		<u>138</u>	<u>44,041</u>	<u>22,500</u>



கம்பஹா மாவட்ட நிகழ்ச்சித்திட்டம்



புத்தளம் மாவட்ட நிகழ்ச்சித்திட்டம்



யாழ்ப்பாண மாவட்ட நிகழ்ச்சித்திட்டம்



குருநாகல் மாவட்ட நிகழ்ச்சித்திட்டம்



கேகாலை மாவட்ட நிகழ்ச்சித்திட்டம்

3.3 உளவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

புனர்வாழ்வு பெறுநர்கள் உளரீதியான மற்றும் சமூகரீதியான காரணங்களினால் ஏற்படுத்திக்கொண்ட பழக்கவழக்கங்களிலிருந்து அவர்களை மீட்பதற்காக உள அடிப்படையிலான சிகிச்சை நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் சரியான பழக்கவழக்கங்கள் மற்றும் அனுபவங்களில் அவர்களை ஈடுபடுத்தி பூரண ஆளுமை விருத்தியினை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதற்கமைவாக, ஆன்மீக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆலோசனைத் திட்டங்கள் மற்றும் உளரீதியான கோட்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் முதலியன ஆரம்பப் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்காக அபாயகர ஒளடத கட்டுப்பாட்டுத் தேசியசபை, டிரஸ்டீஸ் நிறுவனம், பிரம்மகுமாரி இராஜயோக தியான நிலையம், இலங்கை செக்கய்கைசெய் மன்ற நிறுவனம், போதைப்பொருள் மற்றும் தகவல் நிலையம், அநுராதபுர தம்ம அநுராத விபஸ்சனா தியான நிலையம், உளவளச் சுகாதாரச் சபை மற்றும் இப்பணியக ஆலோசனைச் சபை மூலமாக நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதன்கீழ் நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ்வருமாறு.

	நிகழ்ச்சித்திட்டம்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
1.	ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள்	328	45343
2.	ஆன்மீக நிகழ்ச்சித்திட்டங்கள்	64	7484

3.4 போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்களை அமைத்தல் மற்றும் மேற்பார்வை.

பிரதேச மட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கில் போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியின் மூலமாக போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைத்து அவற்றை மேற்பார்வை செய்வதுடன் தற்போது அதற்கமைவாக -

- இலங்கையின் 25 மாவட்டங்களில் போதைப்பொருள் தடுப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் ,
- பிரதேச செயலகப் பிரிவுகள் 332 லும் போதைப்பொருள் தடுப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- அதேபோன்று 2017 ஆம் ஆண்டாகும்போது இலங்கையின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.5 அரச நிறுவனங்களிலிருந்து போதைப்பொருள் பயன்பாட்டினை இல்லாதொழித்தல்

"போதையிலிருந்து விடுபட்ட நாடு" என்ற எண்ணக்கருவினை யதார்த்தபூர்வமாக்குவதற்காக அரச நிறுவனங்களில் போதைப்பொருள் பயன்பாட்டினை இல்லாதொழித்தலானது முக்கிய பணியாகும். இந்நோக்கில் பல சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளதுடன் வேண்டிய ஆலோசனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளன.

போதைப்பொருள் தடுப்புத் தொடர்பாக சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள்

	தலைப்பு	சுற்றறிக்கை இலக்கம்	திகதி
1.	சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின நிகழ்ச்சித் திட்டம்	PS/DP/11/02	2015.05.20
2.	தேசிய போதைப்பொருள் தடுப்பு மாதத்தினைப் பிரகடனப்படுத்தல்	PS/DP - 01	2015.06.26
3.	அரச நிறுவனங்களில் இருந்து போதைப்பொருள் பயன்பாட்டினை இல்லாதொழித்தல் மற்றும் பாடசாலை மட்டங்களிலே நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் (பொது நிருவாகச் சுற்றறிக்கை)	19/2015	2015.07.29
4.	சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு மாதத்தினை பிரகடனப்படுத்தல் - 2016	PS/DSP/04/16	2016.05.20

3.6 போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேறு நிகழ்ச்சித் திட்டங்கள்

1. "போதையிலிருந்து விடுபட்ட நாடு" நடைபவனி மற்றும் தேசிய பட்டம்விடும் விழா

போதைப்பொருள் ஒழிப்பு சனாதிபதி செயலணியினால் 2016.08.28 ஆம் திகதி றொட்டரி நிறுவனம் மற்றும் Kite Sri Lanka நிறுவனத்துடன் இணைந்து தேசிய பட்டம் விடுதல் விழா மற்றும் நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.

2. போதைப்பொருள் ஒழிப்பவர்களாக இளைஞர் யுவதிகளை சமூகமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியின் பூரண மேற்பார்வையின்கீழ் இலங்கை பொலிஸ் மற்றும் அமறிது அமைப்புடன் இணைந்து நாடுபூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களை மையமாகக் கொண்டு போதைப்பொருள் ஒழிப்பவர்களாக இளைஞர் யுவதிகளை சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அதற்கமைவாக 2016.07.10 முதல் 2016.09.27 வரையில் பொரளை பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திற்கு உட்பட்ட இளைஞர் யுவதிகள் 100 பேருக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம் நடாத்தப்பட்டதுடன் அதன் முதலாவது குழு கலைந்துசெல்லும் வைபவம் பொலிஸ்மா அதிபரின் தலைமையின்கீழ் இடம்பெற்றது.

3. பல்கலைக்கழக மாணவர்களை அறிவூட்டும் மாவட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

போதைப்பொருள் பயன்பாட்டின் மூலமாக ஏற்படுகின்ற பழக்கத்திற்குள்ளாகுதல் மற்றும் அதனுடைய மோசமான விளைவுகள் தொடர்பாக பல்கலைக்கழக உள்நுளைவு அனுமதி பெற்ற மாணவ மாணவிகள் 6,600 பேரை உள்ளடக்கி 18 நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமாக அறிவூட்டுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது.

4. நிலைபேறான பாடசாலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் அனைத்துப் பாடசாலைகளிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைத்தல்.

3.7 போதைப்பொருள் தடுப்புச் சனாதிபதி செயலணியின் மூலமாக வெளிவாரியான போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்திங்களுக்காக வளப் பங்களிப்பினை பெற்றுக் கொடுத்தல்.

- சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் 200 பேருக்குப் பயிற்சி அளித்தல் - 2016.09.28
- மகாவலி வலய 400 பேரளவிலான இளைஞர் யுவதிகளைப் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக பயிற்றுவிக்கும் வதிவிடச் செயலமர்வுளை நடாத்துதல்
- ஆயர்வேத திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற சமூக ஆயர்வேத மருத்துவர்களைத் தெளிவூட்டும் செயலமர்வு 2016.11.17
- வடமேல் மாகாண தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர்கள் 300 பேரை போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக அறிவுறுத்தும் செயலமர்வு - 2016.11.22
- சமூக அமைப்புக்களுடன் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சிவில் பாதுகாப்புக் குழுக்கள் மூலமாக கிராமிய போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- UNODC உடன் தகவல்கள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளைப் பரிமாறிக் கொள்ளுதல்.

04. சிறுநீரக நோய்த்தடுப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அறிமுகம்

இலங்கையில் தற்போது அதிகமாகப் பரவியுள்ள மூலகாரணங்கள் அடையாளம் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயினை இல்லாதொழிப்பதற்கும் அந்த நோயின் காரணமாக அவதியுறும் நோயாளிகள் உட்பட அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்குக் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சிறுநீரக நோய்த்தடுப்புத் தேசிய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டின் மே மாதம் மூலகாரணம் அடையாளம் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய்த்தடுப்புக்கான தேசியத் திட்டம் (2016-2018) வெளியிடப்பட்டது. சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு உட்பட ஏனைய தொடர்புடைய அமைச்சுக்களும் தனியார் துறையின் பல்வேறு நிறுவனங்களும், சிறுநீரக நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணியினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



மூலகாரணம் அடையாளம் காணப்படாத சிறுநீரக நோய்த்தடுப்புக்கான தேசிய திட்ட வரைவு (2016-2018) அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் 2016.05.30 ஆம் திகதி சமர்பிக்கப்படுதல்

தேசியத் திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு சிறுநீரகத் நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணியினால் சிறுநீரக நோய்த் தடுப்புக்காக 2016 ஆம் ஆண்டிலே நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

4.1. சிறுநீரக நோய்த்தடுப்புக்காக தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

சிறுநீரகநோய் காணப்படுகின்ற மாவட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் அடையாளம்கண்டு அந்தந்த மாவட்டங்களிலுள்ள விசேட பிரச்சினைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டிலே தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் 03 நடாத்தப்பட்டதுடன் அதற்கிணைவாக பிரதேச மட்டத்தில் அறிவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், நோயாளிகளை முன்னதாகவே அடையாளம் கண்டுகொள்ளும் கிளினிக் வசதிகளை நடாத்துதல், நோய்க்குள்ளான குடும்பங்களுக்காக நலனோம்புகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சுத்தமான குடிநீர் தேவைப்பாடு போன்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அட்டவணை 4.1. 2016 ஆண்டில் நடாத்தப்பட்ட பிரதான தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள்

மாவட்டம்	நடாத்தப்பட்ட திகதி	நடாத்தப்பட்ட இடம்
அநுராதபுரம்	2016.03.10	மதவாச்சி மைத்திரிபால சேனாநாயக்க வித்தியாலயம்
வவுனியா	2016.06.12	வவுனியா, போகஸ்வெவ வித்தியாலயம்
பதுளை	2016.06.29	கிராந்துருகோட்டை மகாவலி விளையாட்டு மைதானம்





அநுராதபுரம் மாவட்டத்தின் மதவாச்சி மைத்திரிபால சேனாநாயக்க வித்தியாலயத்தில் இடம்பெற்ற உலக சிறுநீரக தின வைபவத் தேசிய நிகழ்வு (2016.03.10)









வவுனியா மாவட்டத்தின் போகஸ்வெக வித்தியாலயத்தில் இடம்பெற்ற தேசிய நிகழ்வு (2016.06.12)





பதுளை மாவட்டத்தின் கிராந்துருகோட்டை மகாவலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேசிய நிகழ்வு (2016.06.29)

4.2. அறிவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

உரிய அமைச்சுக்கள் உட்பட ஏனைய தரப்பினர்களுடன் ஒன்றிணைந்து மக்களையும் அதேபோன்று பாடசாலை மாணவர்களையும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு ஊடகங்களின் மூலம் நடாத்தப்படுகின்றன. அதன்மூலமாக நச்சுத்தன்மையற்ற உணவுப் பயன்பாடு, சுத்தமான குடிநீர், முறையான உடற்பயிற்சி, பழக்க வழக்கங்கள் மற்றும் சிறந்த விவசாய ஒழுங்கு முறைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சஞ்சிகைகள் மற்றும் பதாதைகள், வீடியோ நாடாக்கள் மற்றும் அறிக்கை ரீதியான நிகழ்ச்சித்திட்டங்கள் அறிவூட்டல் திறமுறைகளாக கையாளப்படுகிறது.

அட்டவணை 4.2 அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் - 2016

மாவட்டம்	பிரதேசம்	அறிவூட்டப்பட்ட நபர்களின் எண்ணிக்கை
அநுராதபுரம்	மதவாச்சி /ஹொறொவபத்தானை	3,500
வவுனியா	போகஸ்வெவ	3,400
பதுளை	கிராந்துருகோட்டை	40,000
குருநாகல்	10 பிரதேச செயலகப் பிரிவுகள்	18,000
பொலன்னறுவ	மெதிரிகிரிய/ களுகெலே	1,450
இரத்தினபுரி	ஏகலியகொட	400
மொனராகலை	கோட்டவெஹர மங்கட – ரத்தம்பலாகம - ஹம்பேகமுவ	5,400
அம்பாறை	அம்பாறை நகரம்	3,500
கொழும்பு	அவிசாவலை மற்றும் சனாதிபதி செயலகம்	3,400

இதற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விசேட செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- பாடசாலைகளை அடிப்படையாகக்கொண்டு ஆக்கபூர்வமான போட்டிகளை நடாத்துவதன்மூலமாக பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.(சிறுகதை, கவிதைகள், சித்திரம், வினாவிடை போட்டிகள் மற்றும் குறுநாடகங்கள்)
- அப்பியாசப் புத்தகங்களை அச்சிடும் அச்சீட்டாளர்களுடன் கலந்துரையாடி பாடசாலை மாணவர்களை இது தொடர்பில் அறிவூட்டுவதற்கான செய்தியொன்றை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். இதற்காக சுகாதாரக் கல்விப் பணியகத்தின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
- சிறுநீரக நோய்க்குள்ளான குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியினை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக 11 மாவட்டங்களிலே கள உத்தியோகத்தர்கள் 400 பேரினை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று 2016.10.06 ஆம் திகதி நடாத்தப்பட்டமை.






2016 ஆம் ஆண்டிலே நடாத்தப்பட்ட பல்வேறு அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

4.3 சிறுநீரக நோயாளிகளை முன்னதாகவே அடையாளம் காணுதல்

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஒத்துழைப்புடன் அச்சுறுத்தலுக்குள்ளான மாவட்டங்களின் நபர்களைப் பரிசோதிப்பதன் மூலமாக நோயாளர்கள் முன்னராகவே அடையாளம் காணப்படுகின்றனர். 2016 ஆம் ஆண்டிலே சனாதிபதி செயலணியின் தலையீட்டின் மூலமாக முன்னராகவே அடையாளம் கண்டுகொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 4.3. 2016 ஆம் ஆண்டிலே சனாதிபதி செயலணியின் தலையீட்டின்மூலம் மேற்கொள்ளப்பட்ட முன்னராகவே அடையாளம் கண்டுகொள்ளும் பரிசோதனைக்காக உட்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை

மாவட்டம் / பிரதேசம்	பரீட்சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
அநுராதபுரம் /மதவச்சி /ஹொறவபத்தான	2,000
பதுளை - மஹியங்கனை/ ரிதிமாலியத்த	28,000
வவுனியா - போகஸ்வெவ	1,000
பலாங்கொடை - கொட்டவேஹெறமங்கட	1,500
அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹெற	2,100
பொலன்னறுவை - திம்புலாகல / களுகெலே	2,000
குருநாகல் - வாரியபொல	1,500

18 - CM 25284

இதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கிளினிக் மூலமாக அச்சுறுத்தலுக்குள்ளான பிரதேசங்களிலிருந்து சுமார் 3 இலட்சம் பேர் முன்பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டிலே சுமார் 05 இலட்சத்திற்கும் அதிகமான எண்ணிக்கையிலானவர்கள் பரிசோதிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளனர்.






2016 ஆம் ஆண்டிலே நோயாளர்களை முன்அடையாளம் கண்டுகொள்ளுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

4.4. சுத்தமான குடிநீர் வழங்குதல்

இந்நோய்க்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரினை வழங்குவதன் மூலமாக அவர்களை இந்நோயிலிருந்து ஓரளவேனும் மீட்டுக்கொள்ளலாமென உலக சுகாதார அமைப்பு விதந்துரை செய்துள்ளது. எனவே, நோய்க்குரிய தீர்வைத் தேடும் ஒரு வழிமுறையாகச் சுத்தமான குடிநீரானது வழங்கப்படுகின்றது. இக்கடமைப் பணியின்போது நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம், இலங்கைக் கடற்படை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் உட்பட அனைத்து தரப்பு நிறுவனங்களும், சேவை நீடிப்பு மூலமாக நீரினை வழங்குதல், ஊடுகளப்பு நீர் வடிமுறை மூலம் நீரினை வழங்குதல், பௌசர்கள் மூலம் நீரினை வழங்குதல், மழைநீர் சேகரிப்பு தாங்கிகளை அமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. விசேடமாக சுத்தமான குடிநீர் வழங்கும்போது தனியார் கொடையாளிகளிடமிருந்து கூடுதலான ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற்றன. காலி முகத்திடல் ஹோட்டல்,ஈ.ஏ.பி ஊடக வலையமைப்பு, சியறா நிர்மாணத்துறை நிறுவனம், எமறேசன் இன்றல்நஸனல் மற்றும் சாந்தியமைப்பு உட்பட தனியார் துறை நிறுவனங்கள் பல இதில் உள்ளடங்குகின்றன.





அச்சுறுத்தலுக்குட்பட்ட மாவட்டங்களுக்காக சுத்தமான குடிநீர் வழங்கல்

அட்டவணை 4.4. ஊடுகலப்பு வடிமுறைமையிலான நீர் தொகுதியினை நிர்மாணித்தல் - 2016

- ஊடுகலப்பு வடிமுறைமையிலான நீர்த் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக சனாதிபதி செயலகத்தினால் இலங்கைக் கடற்படையினருக்கு ரூபா 167 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. அதனுடைய நிதி ரீதியான முன்னேற்றம் 85%ஆவதுடன் ஊடுகலப்பு வடிமுறைமையிலான 85 நீர்த்தொகுதித் திட்டங்கள் நிறை வடைந்துள்ளன.

நிதி ஒதுக்கீடு	சமுதாய அடிப்படையிலான நிர்மாணித் தல்கள்	பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணித் தல்கள்	மொத்தம்	பெறுமதி ரூபா மில்லியன்	பயனாளிகள்
2016 வரவு செலவு ஒதுக்கீடு	85	31	116	165.4	204,460
கொடையாளிகளின் அன்பளிப்புகள்	17	40	57	44.7	46,950
மொத்தம்	**102**	**71**	**173**	**210.1**	**251,410**

அட்டவணை 4.5. குடியிருப்பாளர்களுக்காக நீர் வடிமுறை உபகரணங்களை வழங்குதல்

மாவட்டம்	நீர் வடிமுறை உபகரணங்களின் எண்ணிக்கை	பெறுமதி ரூபா	பயனாளிகள்
அநுராதபுரம்	200	777,000	995
வவுனியா	115	440.250	560
பதுளை	343	1,369,795	1,618
குருநாகல்	177	712,425	842
மொத்தம்	**835**	**3,299,470**	**4,015**

அட்டவணை 4.6. மழைநீர் தாங்கிகள் மற்றும் ஏனைய நீர்வழங்கல் கருத்திட்டங்கள்

மாவட்டங்கள்	கருத்திட்டம்	நிதிப் பங்களிப்பு ரூபா	பயனாளிகள்
அநுராதபுரம்	மழைநீர் தாங்கிகள் 85 இனை வழங்குதல் (வடமத்திய மாகாண சபை மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ்)	4,124,370.00	425
அம்பாறை	சமன்பெத்த மற்றும் அருணபுரவுக்கான குழாய்நீர் வழிகளை விரிவாக்குதல்	1,277,148.25	2,800
மாத்தளை	வில்கமுவ, தேவகிரி ஆகிய கிராமங்களுக்கான நீர் வழங்கல்	1,409,039.00	1,200
மொனராகலை	கொட்டவெஹெர மங்கட மகா வித்தியாலயத்திற்காகக் கிணறொன்றினை நிர்மாணித்து நீர் வசதியினை வழங்குதல்	561,591.00	2,555
அம்பாந்தோட்டை	பெலியத்த பிரதேசச் செயலகப் பிரிவிற்கு மழை நீர் சேகரிக்கும் தாங்கிகள் 20 இனை வழங்குதல்	840,000.00	100





மழைநீர் தாங்கிகள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கான நீர்வடி உபகரணக்களை வழங்குதல் - அநுராதபுரம்

4.5. சுகாதாரப் பிரிவின் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

சிறுநீரக நோயாளர்களுடைய சிகிச்சை நடவடிக்கைகளை மிக வினைத்திறனான முறையில் மேற்கொள்வதற்காக வைத்தியசாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

- சிறுநீரக நோயாளார்களுக்கும் மற்றும் அவர்களுடைய பொறுப்பாளர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக விடுதிகளை நிர்மாணித்தல்

  - அநுராதபுரம் பிரதான வைத்தியசாலையின் சிறுநீரக நோய் விடுதிகள் மற்றும் குருதி மாற்று நிலையத்தினை நிர்மாணித்தல். - மதிப்பீட்டுச் செலவு ரூபா 284 மில்லியனாகும். (ஊழிய பங்களிப்பு இராணுவத்தினரால் வழங்கப்படுவதனால் இதன் உண்மையான செலவானது ரூபா 141 மில்லியனாவதுடன் ரூபா 143 மில்லியன் அரசுக்கு மீதமாக்கப்பட்டது.)

- கண்டி பொது வைத்தியசாலை சிறுநீரக நோய் விடுதி மற்றும் குருதி மாற்று நிலையத்தினை நிர்மாணித்தல் - மதிப்பீட்டுச் செலவு ரூபா 382 மில்லியன் ஆகும். (ஊழிய பங்களிப்பு இராணுவத்தினரால் வழங்கப்படுவதனால் இதன் உண்மையான செலவானது ரூபா 217 மில்லியனாவதுடன் ரூபா 165 மில்லியன் அரசுக்கு மீதமாக்கப்பட்டது.)

- கிராந்துரக்கோட்டை நோயாளர் நிவாரண நலன் பேணல் பிரிவினை நிர்மாணித்தல் - மதிப்பீட்டுச் செலவு ரூபா 40 மில்லியன்களாகும்.

➢ மாளிகாவத்தை பொது வைத்தியசாலையினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

➢ சீன உதவித்திட்டத்தின்கீழ் பொலன்நறுவை சிறுநீரக வைத்தியசாலையினை நிர்மாணிக்கும் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல். (இதற்காக ரூபா 2963 மில்லியன் தொகையானது சீன அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.)

உத்தேச விடுதிக் கட்டடத்தொகுதி -அநுராதபுரம்-





உத்தேச விடுதிக் கட்டடத்தொகுதி - கண்டி

4.6 தேசிய சிறுநீக நிதியத்தினை வலுப்படுத்தல்

நீரோகா லொத்தர், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் கொடையாளிகளின் உதவிகளினால் கட்டியெழுப்பப்பட்ட தேசிய சிறுநீரக நிதியத்தினாலும் நலனோம்புகைக்காக நிதி வழங்கப்படுகிறது. 2 இலட்சம் ரூபாவில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய சிறுநீரக நிதியமானது தற்போது ரூபா 490 மில்லியனையும் விஞ்சிய நிதியமொன்றாக மாறியுள்ளது. அதன்மூலமாக சிறுநீரக நோய்க்குள்ளான குடும்பங்களின் பிள்ளைகளுக்காக சனாதிபதி புலமைப்பரிசில் வழங்குதல், வைத்தியசாலை விடுதிக் கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல், குருதி மாற்று நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய நலனோம்புகை நடவடிக்கைகளுக்காக நிதியம் வழங்கப்படுகிறது.

நோயாளிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்திற்காக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

நாட்பட்ட சிறுநீரக நோயாளிகள் காணப்படுகின்ற குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் பாரிய பின்னடைவு மட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. விசேடமாக பிரதான குடியிருப்பாளருடைய சுகவீனம் காரணமாக பிரதான ஜீவனோபாய முறைமையானது தடையாகிறது. இவ்வாறான குடும்பங்களைக் கட்டியெழுப்புவதற்காக சிறுநீரக நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணி சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சுடன் ஒன்றிணைந்து நிகழ்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

சனாதிபதி கல்விப் புலமைப் பரிசில் வழங்குதல் - 2016

சிறுநீரக நோயின் காரணமாக பெற்றோர்களை இழந்த க.பொ.த (உயர் தரம்) இல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்காக மாதாந்தம் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது. அதற்கமைவாக அநுராதபுரம், வவுனியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் 111 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கப் பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் சிறுநீரக நோய் காணப்படுகின்ற மாவட்டங்களில் 128 மாணவர் களுக்காக இப்புலமைப் பரிசில் திட்டம் வழங்கப்பட்டு வருவதுடன் புலமைப்பரிசில் தொகையானது 2017 முதல் ரூபா 3000.00 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 4.8 க.பொ.த (உ/தர) இல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கான புலமைப் பரிசில் வழங்கல் (2016 ஆம் ஆண்டு) (மாதங்களின் பெறுமதிகள் கிட்டிய 000')

மாவட்டம்	மாண.எ	மார்ச்சு	ஏப்பிரல்	மே	யூன்	யூலை	ஆக	செத்	ஒக்	நவ	டிச	மொத்தம்
அநுரா-தபுரம்	64	64	64	64	64	64	64	52	52	52	52	592
வவுனியா	14					14	14	9	9	9	9	64
பதுளை	33					33	33	24	24	24	24	162
மொத்தம்	**111**	**64**	**64**	**64**	**64**	**111**	**111**	**85**	**85**	**85**	**85**	**818**

- **சிறுநீரக நோயாளிகளுக்காக மாதாந்தக் கொடுப்பனவொன்றை வழங்குதல்**

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின்மூலம் மூலகாரணம் நிச்சயிக்கப்படாத சிறுநீரக நோய் பரந்துள்ளது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் சிறுநீரக நோயாளர்களுக்காக ரூபா 3000 தொகைக் கொடுப்பனவொன்று வழங்கப்பட்டு வருவதுடன் தற்போது 11 மாவட்டங்களில் அது நடைமுறைப்படுகிறது. அத்தொகையானது ரூபா 5,000 வரையில் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதன்கீழ் 81 பிரதேசங்களில் உள்ள நோயாளிகள் 29,000 எண்ணிக்கையானவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

- **வீட்டு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், திருத்தப் பணிகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பான அறைகளை நிர்மாணித்தல்**

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு மற்றும் சிறுநீரக நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணி ஒன்றுசேர்ந்து வீட்டு வசதிகள் இல்லாத குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோய் காணப்படும் குடும்பங் களுக்காக வீட்டு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றைச் சமர்ப்பித்

ததுடன் அதற்கான அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன்மூலம் வீட்டு வசதிகள் இல்லாத குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர்களைக் கொண்ட குடும்பங்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 5 இலட்சம், திருத்தப் பணிகளுக்காக ரூபா 2 இலட்சம் வீதம் வழங்கப்படுகின்றது.

அட்டவணை 4.9 வீட்டு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், திருத்தப் பணிகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பான அறைகளை நிர்மாணித்தல் - 2016

மாவட்டம்	கருத்திட்டம்	முதலீடு ரூபா	நிதிப் பங்களிப்பு
அநுராதபுரம்	மதவாச்சி பிரதேசத்திலே நோய்க்குள்ளான 10 குடும்பங்களுக்காக வீடுகளை அமைத்தல்	3,940,000.00	சனாதிபதி செயலணி மற்றும் நன்கொடை நிறுவனங்கள் மூலம்
பதுளை	நோய்க்குள்ளான 7 குடும்பங்களுக்காக வீட்டிலேயிருந்து செயற்படுத்துகின்ற குருதி மாற்றுச் செயற்பாட்டுக்காக சுகாதாரப் பாதுகாப்பான அறைகளை நிர்மாணித்தல்	630,000.00	வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் நிதிப்பங்களிப்பின் கீழ்









சிறுநீரக நோயாளிகளின் குடும்பங்களுக்காக வீடமைப்பு உதவிகளையும் புலமைப்பரிசில்களையும் வழங்குதல்

4.7. ஆய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல்

நாட்பட்ட சிறுநீரக நோய்க்கான காரணிகளை விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்துவதற்காகவும் அதற்கான சிகிச்சை முறைகள் மற்றும் ஏனைய சேவைகளை மேம்படுத்துவதற்காகவும் சிறுநீரக நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணி ஏனைய தரப்பு நிறுவனங்களுடன் இணைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணத்துவ அறிவை பரிமாறிக்கொண்டு ஆராய்ச்சிகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக உதவிகளை வழங்குகிறது.

அட்டவணை 4.10 ஆய்வு செயற்பாடுகளில் பங்களிப்பு செய்தல்

திகதி	செயலமர்வு	விடயம் / பெறுபேறு
2016.03.15	சீன நிபுணத்துவ அறிவைப் பரிமாற்றும் கருத்தரங்கு	பேராதனை பல்கலைக்கழகத்துக்காக நவீன தொழிநுட்பத்துடனான ஆய்வுகூடத்தை நிர்மாணித்தல்.
2016.04.04-08	நெதர்லாந்து நீர் தொடர்பான நிபுணர்கள் செயலமர்வு (நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை பிரதிநிதிகளுடன்)	பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள நீர் மூலங்களைப் பார்த்து அது தொடர்பான அறிக்கை மற்றும் விதந்துரைகளைச் சமர்ப்பித்தல்
2016.04.26-28	உலக சுகாதார நிறுவன செயலமர்வு	நாட்பட்ட சிறுநீரக நோய் தடுப்புக்கான வழிகாட்டல் மற்றும் விதந்துரைகளை வழங்குதல்
2016.07.03	குருதி மாற்றம் தொடர்பில் தாதியர்களை பயிற்றுவிக்கும் செயற்திட்டம்	குருதி மாற்றம் தொடர்பில் தாதியர்களை மலேசியாவில் பயிற்றுவிப்பதற்கான உதவிகளை வழங்குதல்
2016.09.30	உள்ளூறுப்புக்கள் மறுநடுகை மற்றும் உறுப்புக்களை தியாகம் செய்தல் பற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலர்களுக்கான செயலமர்வு	உள்ளூறுப்புக்கள் மறுநடுகை மற்றும் உள்ளூறுப்புக்களை தியாகம் செய்தல் தொடர்பில் தெளிவூட்டுதல்
2016.09.30	சிறுநீரக நோயின் சமூகப் பொருளாதார தாக்கம் தொடர்பான செயலமர்வு	400 சமூக சேவை அலுவலர்களை தெளிவுபடுத்துதல்
2016.10.09-11	உலக சுகாதார மாநாடு	பேர்லின் நகரில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றல்





ஆராய்ச்சிச் செயற்பாடுகளை விதிமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல்

5. "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" தேசிய செயற்றிட்டம்

சமூக ரீதியில் பிள்ளைகள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளைக் குறைத்து அவர்களது கட்டுக்காப்பு, அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" தேசிய செயற்றிட்டம் 2017-2019 திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்கும்போது உரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் நிறுவனங்களின் பங்குபற்றுதலுடன் நடாத்தப்பட்ட பல கலந்துரையாடல்களின்பின் தற்போது செயற்படுத்தப்படுகின்ற பணிகளுக்கு மேலதிகமாக மேலும் பிள்ளைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தத் தேவையான முக்கிய விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

அட்டவணை 5.1 "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" தேசிய செயற்றிட்டத்தைத் தயாரிப்பதற்காக பங்குதாரரான நிறுவனங்களுடன் நடத்தப்பட்ட முக்கிய கலந்துரையாடல்கள்

திகதி	கலந்துரையாடப்பட்ட விடயங்கள்
2016.01.07	பிள்ளைகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் பிள்ளைகளைப் பேணுதலுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் அதிமேதகு சனாதிபதி அவர்களது தலைமையில் நடைபெற்ற அடிப்படைக் கலந்துரையாடல்
2016.03.18	நிரல் அமைச்சுக்கள், திணைக்களம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் அலுவலர்களுடன் தேசியத் திட்டத்தைத் தயாரிக்கும் விசேட கலந்துரையாடல்
2016.04.07	மாகாண சபை அலுவலர்களுடனான தேசிய திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல்
2016.05.24	திட்ட வரைபை அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல்
2016.10.13	பிள்ளைகளின் பிள்ளைப்பருவ ஆளுமை விருத்தி தொடர்பில் உளநல மருத்துவ நிபுணர்களுடனான கலந்துரையாடல்
2016.11.03	சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்காகப் பிள்ளைப் பருவ உள விருத்தி மற்றும் பிள்ளை வளர்ப்பு முறை தொடர்பாக விரிவுரை நடத்துதல்
2016.11.17	"பிள்ளைகளைப் பாதுகாப்போம்" தேசிய செயற்றிட்டம் 2017 – 2019 செயற்படுத்தப்படல் தொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களுடனான விசேட கலந்துரையாடல்

வீட்டு வன்முறை, பாலியல் முறைகேடுகள், போசாக்கு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள், போதைப்பொருள் மற்றும் பல்வேறு குற்றங்களில் ஈடுபடுதல், நன்நடத்தைக்கு உட்படுதல், குடும்ப பிரச்சினைகளால் அநாதரவாதல் மற்றும் வலதுகுறைவு போன்ற பிரச்சினைகளால் இலங்கையின் சிறுவர் சந்ததியினர் முகம் கொடுக்கும் துன்பங்களை அகற்றுவதற்காக இந்தச் செயற்றிட்டத்தினால் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" தேசிய செயற்றிட்டம் 2017 – 2019 மூன்று முதன்மை துறைகளின்கீழ் பல சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

- துஷ்பிரயோகம் /கடத்தல்களைத் தடுத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- சுகாதார, போசாக்கு மற்றும் நலன்புரி செயற்பாடுகள்
- ஆளுமை விருத்தி, கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன்கள்



2016.11.17 நடைபெற்ற "பிள்ளைகளைப் பாதுகாப்போம்" தேசிய செயற்திட்ட விசேட கலந்துரையாடல்

சிறந்த ஆளுமையுடனான பிள்ளைகளைச் சமூகத்துக்கு வழங்குதல்

தற்போது நவீன உளவியல் ரீதியான எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி தற்கால இளம் தலைமுறை யினரை வலுவூட்டி சிறந்த பிரஜைகளை எதிர்காலத்திற்கு வழங்குவதற்காகப் பொருத்தமான முறைமை-களை தயாரிப்பதற்கு சனாதிபதி செயலகம் பங்களித்து செயற்பட்டு வருகிறது. சிறந்த சமூக மீள்கட்ட மைப்பை உருவாக்குவதற்காக பிள்ளைப்பருவ உள விருத்தி, பிள்ளை வளர்ப்பு முறைகள், பிள்ளைகள் தொடர்பில் நாட்டிலுள்ள எண்ணக்கருக்களை முறையாக மற்றும் விஞ்ஞானபூர்வமாக விருத்தி செய்தல் மிகவும் முக்கியமானதாகும். பிள்ளைப்பருவத்தில் மன அழுத்தம் ஏற்படுவது தடுக்கப்பட வேண்டும். அதன்மூலம் பண்பான உயர் ஆளுமை கொண்ட வினைத்திறனான, ஒழுக்கமான, சட்டத்தை மதிக்கும் பிரஜைகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. பிள்ளைப்பருவத்தில் அனுபவிக்க நேரிடும் பாதகமான அழுத்தங்கள் (ACEs – Adverse Childhood Experiences) தனிநபர் மனப்பாங்கு மற்றும் திறன் விருத்தி தொடர்பில் பாதகமாக தாக்கம் செலுத்துவதாக நவீன உளவியலின் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அவற்றில் பத்து முதன்மை விடயங்களை உளவியல் மருத்துவர்கள் வெளிப்படுத்தியிருப்பதுடன், பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் அனுபவிக்க நேரிடும் பாதகமான தாக்கங்களுக்கு உட்படுவதனை இயன்றளவுக்குக் குறைப்பதற்காகச் சமூகத்தை தெளிவுபடுத்த வேண்டியது கட்டாயமானது என்பதுடன், அதனூடாக மிகச் சிறந்த பிரஜைகளை எதிர்காலத்துக்கு வழங்கலாம். அதற்காக அரசாங்கம் தலையிட வேண்டிய சந்தர்ப்பங்களை இனமறிந்துகொண்டு தேசியக் கொள்கைகளை வகுக்க எதிர்பார்க்கப் படுவதுடன் அதற்காகச் சனாதிபதி செயலகம் தலைமையேற்று செயற்பட எதிர்பார்க்கப்படுகிறது.

6. நிலைபேறான பாடசாலை செயற்றிட்டம்

இலங்கை மாணவர் சந்ததியை அறிவு, ஆற்றல், மற்றும் ஆக்கத்திறனான மனப்பாங்குடனான பிள்ளை களாக மாற்றுவதற்காக நிலைபேறான பாடசாலைச் செயற்திட்டத்தை அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக உயர்தர வகுப்புக்களைக் கொண்டுள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் தெரிவு-செய்யப்பட்ட பாடசாலைகள் அடங்கலாக 3409 பாடசாலைகளில் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதிமேதகு சனாதிபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்தப்படும் உணவு உற்பத்தித் தேசியச் செயற்றிட்டம், சுற்றாடல் பாதுகாப்புத் தேசியச் செயற்திட்டம், போதைப்பொருள் ஒழிப்பு தேசியச் செயற் றிட்டம், சிறுநீரக நோய் தடுப்பு தேசியச் செயற்றிட்டம் மற்றும் "பிள்ளைகளைப் பேணிக்காப்போம்" தேசிய செயற்றிட்டம் ஆகிய 05 முதன்மைச் செயற்திட்டங்களை இணைத்து இந்தச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

"அழகிய சிறுவர் உலகம் - நிலைபேறான நாளைய தினம்" எனும் தொனிப்பொருளின் ஊடாக பாடசாலைப் பிள்ளைகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய நடத்தைகளிலிருந்து தடுத்து, தொழில் உலகுக்கும் சமூகத்துக்கும் பழக்கப்படுத்துதலும் மற்றும் அவர்களை சமூக மாற்றத்துக்கேற்ப வலுவூட்டலும் பாதுகாத்தலும் இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் செயற்றிட்டம் தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஏனைய அனைத்துத் துறைகள் உள்ளிட்ட அமைச்சுக்களுடனும் தொடர்புடைய நிறுவங்களுடனும் 2016.11.30 ஆம் திகதி இந்தச் செயற்றிட்டம் தொடர்பில் ஆரம்பக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.
- நிலைபேறான பாடசாலை செயற்றிட்டத்துக்கான வழிகாட்டல் கோவை தயாரிக்கப்பட்டது.
- நிலைபேறான பாடசாலைச் செயற்றிட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களை மாகாண மட்டத்தில் தெளிவூட்டல்.
- நிலைபேறான பாடசாலைச் செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக முதலாவது கட்டத்தில் ஒரு பாடசாலைக்கு ரூ.50,000 என்றவாறு 141 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.
- நிலைபேறான பாடசாலைச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வினை 2017.01.19 ஆம் திகதி திகன கெங்கெல்ல மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் மற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.







7. வறுமைஒழிப்பு தேசிய செயற்றிட்டம்

சுதந்திரத்தின் பின்னர் இதுவரை இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்பு செயற்றிட்டங்களின் ஆக்கபூர்வமான விடயங்கள் பல இருந்ததுடன் அவற்றின் அதிகமான குறைபாடுகளும் இருந்தன. அவற்றில் ஆக்கபூர்வமான விடயங்களை உள்ளீர்த்து, மேலும் மேம்படுத்தி, அடுத்துவரும் 14 ஆண்டுகளில் வறுமையை ஒழிப்பதற்கும், உலக நிலைபேறான இலக்குகளை அடைவதற்காகவும் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2016.08.29 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பித்து "2017 – வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டு" ஆக பிரகடனப்படுத் தப்பட்டது.

அந்த இலக்குகளை அடைவதற்காக அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது தலைமையில் 2016.11.25 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தின் 01 ஆம் குழு மண்டப அறையில் முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை அமைச்சர்கள், ஆளுநர்கள், மாகாண முதலமைச்சர்கள், சனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், மத்திய வங்கி ஆளுநர், வங்கிகளின் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட பல அரச அலுவலர்கள் அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். அதன்போது வறுமையை ஒழிப்பதற்கான புதிய திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்குமாக கலாநிதி சரத் அமுணுகம அவர்களது தலைமையிலான முதன்மை செயற்பாட்டு குழு நியமிக்கப்பட்டது.





அதிமேதகு சனாதிபதி அவர்களது தலைமையில் 2016.11.25 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்

- பத்திரிகை விளம்பரம் வெளியிடுவதன் ஊடாக வறுமை ஒழிப்புத் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

- 2017 ஆம் ஆண்டில் வறுமையை ஒழிப்பதற்காக அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங் களால் அமுல்படுத்தப்படவுள்ள விசேட செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெறுதல்.

- கலாநிதி சரத் அமுணுகம அவர்களது (குழுத் தலைவர்) தலைமையில் 2016.12.20 ஆம் திகதி கலந்துரையாடல் நடத்துதல் மற்றும் அனைத்து பங்குதார நிறுவனங்கள் உள்ளிட்ட நபர்களின் கருத்துக்களை ஒருங்கிணைத்து வறுமையை ஒழித்தல் தொடர்பான வரைபைத் தயாரித்தல்.

- அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது தலைமையில் 2016.12.22 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தில் இரண்டாவது கலந்துரையாடல் நடைபெற்றது.





அதிமேதகு சனாதிபதி அவர்களது தலைமையில் 2016.12.22 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்.

8. சமய அலுவல்கள்

ஐக்கியமான தேசத்தில் சமய சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக சனாதிபதி செயலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவின்கீழ் "சமய அலுவல்கள் கூறு" நிறுவப்பட்டுள்ளது. அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்கேற்கும் அனைத்து சமய விழாக்கள், கலந்துரையாடல்கள், சந்திப்புக்கள் மற்றும் விசேட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் தொடராய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் இந்தக் கூறின் முதன்மைக் குறிக்கோளாகும். பௌத்த சமய நாடான இலங்கையிலுள்ள ஏனைய சமய தரப்புக்களிடையே சகவாழ்வை விருத்திசெய்து பண்புமிகு சமூகத்தை உருவாக்குவதற்காகப் பல்வேறு தொனிப்பொருள்களை இணைத்து இயங்கும் சமய அலுவல்கள் கூறானது பல அணுகுமுறைகள் ஊடாக மேற்படி இலக்குகளை அடைந்துள்ளது. அதாவது,

சனாதிபதி சதஹம் யாத்ரா	காலத்திற்கேற்ற சமய போதனைகளை கேட்டறிதல் :- மனித சமுதாயத்திற்கு வழங்கும் புதிய சமய போதனை மண்டபம்
வரலாற்றுமிக்க பெரஹராக்களின் விபரங்கள்	தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகும் பெரும் கலாச்சாரத்தின் மாற்றமடையாத பூஜை வீதிகளின் குறுக்குத் தோற்றம்
மதித்து கௌரவிக்க வேண்டியோரை மதித்தல்	அறியாமையின் இருள் மையத்தினை சமூகத்திலிருந்து அகற்றுவதற்காக உயிர்த்தியாகம் செய்த இல்லற துறவறத்தவர்களை நினைவு கூரல்.
ஏனையோரும் எம்மைப் போன்றவர்களே	வழிபாட்டுக்கும் நம்பிக்கை கொள்வதற்குமாக எல்லோருக்கும் உள்ள உரித்தினை உறுதிப்படுத்தும் நற்செயல்.
வாழ்வதற்குத் தகுந்த பிரதேசங்களில் வாழ்வது	தனிநபர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நட்புக் குழுக்களுடனான சூழலுக்காக
ஒளியிலிருந்து ஒளியை நோக்கி	மக்களுக்காக நன்மை மற்றும் ஆசி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

8.1 சனாதிபதி சதஹம் யாத்ரா

"சதஹம் யாத்ரா" நிகழ்வு என்பது நீண்டகாலமாக அரச அனுசரணையுடன் அனைத்து பௌர்ணமி நாட்களிலும் அரச தலைவரின் தலைமையில் நடைபெற்று வந்த நிகழ்வாகும். அதுவானது தலைநகருடன் மட்டும் மட்டுப்படுத்தாமல் தூரப் பிரதேசங்களிலுள்ள விகாரைகள் மற்றும் அப்பிரதேச மக்களின் சமயப்பற்றினை நேரடியான இலக்காகக்கொண்ட சமய நிகழ்வாகும். அத்துடன், சதஹம் யாத்ரா தர்மபோதனைகள் இடம்பெறும் விகாரைகளில் நிலவும் தேவைகளை இனங்காணுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நோக்குடன் நடத்தப்படுவதுடன், நற்பண்புள்ள மக்களுடனான சமூகத்தை உருவாக்குவதற்காக நடத்தப்படும் தார்மீகமான முயற்சியாகும்.

"சதஹம் யாத்ரா" திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்.

1. பிரதேச அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து பூர்வாங்க கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
2. விகாரைகளுக்குச் செல்லும் வீதிகளை அபிவிருத்தி செய்தல்.
3. உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்தல்
4. தாதுகோபுரங்கள், விகாரைகளின் அபிவிருத்தி
5. சுகாதார கட்டமைப்புகளை புனரமைத்தல்
6. மின்சாரக் கட்டமைப்பை இற்றைப்படுத்தல் அல்லது புதிதாக அமைத்தல்

7. விகாரைகள்சார் சுற்றாடலைச் சுத்தப்படுத்துதல்
8. விகாரைகள்சார் புனரமைப்புச் செயற்பாடுகள்.
9. பரிஷ்கார மற்றும் விசேட காணிக்கைகளை வழங்குதல்
10. தொடர்பாடல் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு
11. இலவச பகிர்ந்தளிப்புக்காக விகாரை மற்றும் மகாசங்கத்தினர் தொடர்பான நூல்களை எழுதுதல், அச்சிடுதல் மற்றும் பிரச்சாரம்.
12. மேற்குறித்த அனைத்துச் செயற்பாடுகளின் மேற்பார்வை

8.1 அட்டவணை – 2016ஆம் ஆண்டில் சதஹம் யாத்ரா தர்ம போதனை நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெற்ற மாவட்டங்கள் மற்றும் விகாரைகள்

தொடர் இல.	சதஹம் யாத்ரா தர்ம போதனை நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்ற திகதி	மாவட்டம்	விகாரையின் பெயர்
01	2016.01.23	அம்பாந்தோட்டை	பலாந்தொட்டை கிரிகண்டு சே ரஜமகா விகாரை
02	2016.02.22	கேகாலை	பெலிகல, வரலாற்றுமிக்க ஸ்ரீ விஜய சுந்தராராம விகாரை
03	2016.03.22	நுவரெலியா	அம்பகமுவ, விஜயபா பிரிவென் விகாரை
04	2016.04.21	காலி	ஸ்ரீ சைலாராம புராண ரஜமகா விகாரை
05	2016.06.19	மாத்தளை	மாதிபொல, கெந்தன்கமுவ, ஸ்ரீ சுனந்தாராம புராண விகாரை
06	2016.07.19	மொனராகலை	யுதகனா ரஜ மகா விகாரை
07	2016.09.16	இரத்தினபுரி	பேல்மடுல்ல, கல்பொத்தாவல ஸ்ரீ பாதஸ்தான ரஜமகா விகாரை
08	2016.10.15	கம்பஹா	சபுகஸ்கந்த ரஜ மகா விகாரை
09	2016.11.14	கொழும்பு	ஸ்ரீ நிகேதனாராம புராண விகாரை
10	2016.12.13	கொழும்பு	முல்லேரியா நவ நகர, ஹிம்புட்டான, ஸ்ரீ அபிநவாராம விகாரை

8.2 வரலாற்றுப் பெருமைமிகு தலதா வருடாந்த பெரஹரா நிறைவு விழா-2016 ஏற்பாடு செய்தல்

செங்கடகல நகரில் எழுந்தருளியுள்ள புத்தபிரானின் புனித தந்தங்களுக்காக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் நான்கு தேவாலயங்கள் உள்ளிட்ட தலதா பெரஹரா 2016 ஆண்டிலும் முழு அரச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பாரம்பரிய நிறைவு விழா தியவடன நிலமே தலைமையிலான நான்கு பரிவார தேவாலய நிலமேமாரின் அழைப்பின்பேரில் அதிமேதகு சனாதிபதி அவர்கள் தலைமையிலும் மக்கள் பிரதிநிதிகளின் பங்கேற்பிலும் 2016.08.18 ஆம் திகதி பிற்பகல் கண்டி சனாதிபதி மாளிகையில் கோலாகலமாக இடம்பெற்றது. இந்த விழாவை வெற்றிபெறச் செய்வதற்காக கண்டி அரசாங்க அதிபரும் பெரஹரா குழுவின் தலைவர், கங்கவட்ட கோறளை பிரதேச செயலாளர் உள்ளிட்ட ஊழியர்கள் விலைமதிக்க முடியாத ஒத்துழைப்பை வழங்கினர்.




சிரேஷ்ட நடன கலைஞர்களுக்கு சனாதிபதியின் பாராட்டுக்கள்

8.3 ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால அவர்களது 152 ஆவது நினைவு தேசிய விழா செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

இந்த விழா சமய அலுவல்கள் பிரிவு, புத்தசாசன அமைச்சு, களனி பல்கலைக்கழக பொதுசனத்தொடர்பு கற்கைப்பிரிவு ஆகியவை இணைந்து பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மண்டபத்திலும் 2016.09.25 மற்றும் 26 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால அவர்களது 152 ஆவது தேசிய நினைவு நிகழ்வு பௌத்த தேரர்கள், மக்கள் பிரதிநிதிகள், கற்றறிவாளர்கள் அமைச்சுக்களின் செயலாளர்கள், பௌத்த அலுவல்கள் இணைப்பாளர்கள், தத்துவவியலாளர்கள், ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால மன்றம், அதிபர்கள், பௌத்த சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருமளவானோரின் பங்கேற்பில் கோலாகலமாக நடைபெற்றது.

8.4 கோட்டை சனாதிபதி மாளிகையில் 2016 ஆண்டின் தீபாவளி விழா ஏற்பாடு செய்தல்

2016.10.29 ஆம் திகதி கோட்டை சனாதிபதி மாளிகையில் அதிமேதகு சனாதிபதி அவர்களது தலைமை யிலும் பிரதமரின் பங்குபற்றுதலுடனும் தீபாவளி விழா இடம்பெற்றது. இந்து சமய பூசகர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் ஏனைய (சிங்கள/தமிழ்) பக்தர்களும் பங்கு பற்றிய தீபாவளி விழா மிகவும் விசித்திரமான கலாசார அம்சங்களைக் கொண்டிருந்தது.




8.5.1 சாசனாரக்ஷன சம்மேளன கலந்துரையாடல் நடத்துதல் - 2016

ஸ்ரீ சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி மற்றும் அபிவிருத்தியை அடைவதற்காகவும் சாசன ரீதியில் மிகவும் முக்கியத்துவமான தேசியக் கொள்கை ரீதியான இலக்குகளை அடைவதற்காகவும் சாசனாரக்ஷன சம்மேளனத்தின் பதிவாளர் மற்றும் தலைவர்களான தேரர்களின் பங்கேற்புடன் அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் அமைச்சு செயலாளர்களின் பங்கேற்புடனான இந்தச் சந்திப்பு 2016.07.05 ஆம் திகதி சனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.



8.5.2 சமயங்களுக்கிடையிலான மாநாட்டை நடத்துதல்

பிற்போக்குவாதிகளால் அனைத்து மக்களைத் தவறாக வழிநடத்தக்கூடியதாகச் செய்யப்படும் கூற்றுக்கள் மற்றும் தூண்டுதல்களுக்கு வாய்ப்பளிக்காத வகையில் செயற்படுவதற்காக மக்களிடையே நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் குறிக்கோளுடன், சமய தலைவர்களை உள்ளடக்கிய இந்த சமயங்களுக்கிடையிலான சபை அதிமேதகு சனாதிபதி அவர்களது தலைமையில் 2016.02.25, 2016.02.14 மற்றும் 2016.07.26 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. இதன்மூலம் இலங்கையில் தேசிய நல்லிணக்கம் மற்றும் வகை கூறலையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கு ஆலோசனை பெறுதல் எதிர்பார்க்கப்படுகிறது.







8.5.3 அனுராதபுர விஜய ஸ்ரீ ஜய ஸ்ரீ வெள்ளரசு வளாகத்தில் வருடாந்த மல்லிகை மலர் பூஜை நடத்துதலை ஒருங்கிணைத்தல்.

தேசிய சாந்தி மன்றத்தின் போஷகர் வணக்கத்துக்குரிய கொட்டபொல அமரகீர்த்தி தேரரின் ஆலோசனையில் சாந்தி மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இந்த மல்லிகை மலர் ஆசீர்வாத பூஜை விழாவின் அடிப்படை குறிக்கோளானது அதிமேதகு சனாதிபதி அவர்கள் முப்படையினர், பொலீசார் மற்றும் அனைத்து மக்களுக்கும் ஆசீர்வாதம் வழங்குவதாகும். இந்த பூஜை அனுரா-தபுரத்திலுள்ள புனித வெள்ளரசு மரத்திற்கருகில் 2017 யூலை 23 ஆம் திகதி முழுமையான அரச அனுசரணையுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வோடு இணைந்ததாக ருவன்வெலி தாது கோபுரத்துக்கு விண்ணிலிருந்து மலர் தூவப்பட்டதுடன், தங்கமுலாம் பூசப்பட்ட சூடாமணியும் அர்ப்பணிக்கப்பட்டது.





வருடாந்த மல்லிகை மலர் பூஜை - அனுராதபுரம்

8.5.4. சனாதிபதி பதவியேற்பின் முதலாவது நிறைவு விழாவை ஏற்பாடு செய்தல்

சனாதிபதி பதவியேற்பின் முதலாவது நிறைவு விழா 2016 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்றது. அதனை நினைவுகூர்ந்து சனாதிபதி மாளிகையில் முழு இரவு பிரித் பாராயணமும், மறுநாள் தான நிகழ்வும் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் முப்பெரும் பிக்கு சங்கத்தினர், அமைச்சரவை உறுப்பினர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள், பிரதேச மக்கள் பிரதிநிதிகள், சனாதிபதியின் சிரேஷ்ட அலுவலர்கள் மற்றும் ஏனைய அரச அலுவலர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.





09. ஏனைய விசேட செயற்பாடுகள் - 2016

9.1 சனாதிபதி மாளிகையை மக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தல்

சனாதிபதி மாளிகையை முதற்தடவையாக மக்கள் பார்வைக்காகத் திறந்துவைத்தல் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களது எண்ணக்கருவுக்கமைய இடம்பெற்றது. காலனித்துவ காலத்தில் ஆளுநரின் உத்தியோகபூர்வ வசிப்பிடமாகவும், சுதந்திரத்தின் பின்னர் நியமிக்கப்பட்ட அரச தலைவரின் வதிவிடமாகவும் பாவிக்கப்பட்ட இந்த மாளிகையைத் தமது கண்களால் காண்பதற்காக பாடசாலைப் பிள்ளைகள் உள்ளிட்ட பெருமளவு மக்கள் நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் வருகை தந்தார்கள். பெருமளவு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் பார்வையிட்டனர்.






9.2 கவனமாக சென்று வாருங்கள் - வீதிப் பாதுகாப்பு வாரம்

(2016.12.01 – 2016.12.07 மேல் மாகாணம்)
வீதி விபத்துக்கள் மற்றும் அவற்றினால் ஏற்படும் மரணங்களைக் குறைப்பதனை முக்கிய இலக்காக கொண்டு தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்திய செயற்றிட்டமாகும். அதற்காகச் செலவாகும் தொகையில் பத்து மில்லியன் ரூபா (10,000) சனாதிபதி செயலகத்தினால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டது.

9.3 பண்பாட்டு மற்றும் கலை கொள்கை அலகை நிறுவுதல்

நல்லாட்சி செயற்பாட்டுக்கு உந்து சக்தியான, நவீன ஜனநாயக சமூகமாக முன்னெடுப்பதற்காக உறுதுணையாகவும் முற்போக்கான தேசிய கலை பண்பாட்டு கொள்கையை வகுக்கும் நோக்குடன் அமுல்படுத்தப்படும் திட்டமாகும். கலை மற்றும் பண்பாட்டு கொள்கை அலகின் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய தரப்புக்களுக்கிடையில் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள கலை மற்றும் பண்பாட்டு கொள்கை அலகை சட்டத்தின்மூலம் நிறுவவேண்டுமென அந்த சபை தீர்மானித்தது.

9.4 மிகிமண்டலே ரித்மய

கலைப் படைப்புக்களை முதன்மைப்படுத்திய இரசனைக்குரிய நிகழ்ச்சிகளின்மூலம் சூழல் நேயமிக்க சமூகத்தை உருவாக்கும் நோக்குடன்,"மஹ பொலவே ரித்மய" எனும் இரசனையூட்டும் நிகழ்ச்சி உருவாகியுள்ளது. அத்திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட நான்கு இடங்களில் நான்கு ஆரம்ப நிகழ்வுகளை நடாத்துவதற்காகச் சனாதிபதி செயலகத்தினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்ச்சி 2016.11.30 பி.ப 6.30 – 9.00 மணிவரை பிரபல இசைக்கலைஞர் தர்ஷன ருவன் திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினரால் மொனராகலை நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

9.5 தேசிய புத்தகக் கொள்கையினைத் தயாரித்தல்

இலங்கையின் புத்தகங்கள் சார்ந்த பலமான சமூகத்தை உருவாக்குவதற்காகவும், அதன்மூலம் அறிவு வளர்ச்சி மற்றும் சமூக ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் புத்தக வெளியீட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்கள், எழுத்தாளர்கள், தொகுப்பாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், ஆய்வாளர்கள், வெளியீட்டாளர்கள், அச்சுக் கலைஞர்கள், வடிவமைப்பாளர்கள், புத்தக வர்த்தகர்கள் மற்றும் வாசகர்கள் இலங்கையின் நூல்கள் அபிவிருத்திச் செயற்பாட்டில் இயங்கு திறனாக பங்களிப்புச் செய்து தேசியப் புத்தகக் கொள்கையைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள சகல தரப்புகளதும் பங்குபற்றுதலுடன் 2016.10.03 ஆந் திகதி கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. தேசியப் புத்தகக் கொள்கை பாராளுமன்றச் சட்டமாக நிறைவேற்ற பொருத்தமானதென முன்மொழியப்பட்டதுடன் சட்ட வரைபுக்காகத் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் - 2016

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டங்கள் /கலந்துரையாடல்கள்		
1	2016.01.07	சிறுவர் பாதுகாப்புக்கான சனாதிபதி தேசிய அலகை நிறுவுதல் தொடர்பான கலந்துரையாடல்
2	2016.01.27	போதைப்பொருள் தடுப்புக் குழு கூட்டம்
3	2016.01.25	தனியார் துறை விவசாய முயற்சியாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்
4	2016.02.23	"இலங்கையின் பொருளாதாரம்" தொடர்பில் பொருளியலாளர்களுடன் நடத்தப்பட்ட புத்திஜீவிகள் சந்திப்பு
5	2016.02.05	சமயத் தலைவர்கள் மாநாடு
6		அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் பொருளியல் தொழில்வாண்மை யாளர்கள் சந்திப்பு
7	2016.03.23	சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களுடனான பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் குழுக்கூட்டம்
8	2016.03.31	"இலங்கையின் பொருளாதாரம் மற்றும் எதிர்கால பயணம்" கலந்துரையாடல்
9	2016.05.06	2016 ஏப்ரல் 27, 28, 29 ஆகிய மூன்று நாட்கள் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில்"மிகிலக்க மாளிகையில்" உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்களின் பங்கேற்புடன் நடைபெற்ற செயலமர்வின் பெறுபேறாக தயாரிக்கப்பட்ட அறிக்கையைக் கௌரவ சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல்.

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
10	2016.05.24	"பிள்ளைகளைப் பாதுகாப்போம் செயற்றிட்டம்" தொடர்பான கலந்துரையாடல்
11	2016.05.30	சிறுநீரக நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணியுடனான கலந்துரையாடல்
12	2016.05.31	தியவதன நிலமே உள்ளிட்ட நிலமேக்களுடனான கலந்துரையாடல்
13	2016.06.14	சமயங்களுக்கிடையிலான மாநாடு
14	2016.06.23	மின்சக்தி மற்றும் சக்திவலுத் துறை முதலீடு தொடர்பான கூட்டம்
15	2016.07.05	அகில இலங்கை சாசனாரக்ஷிக்க சம்மேளன கலந்துரையாடல்.
16	2016.08.29	மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சின் அலுவலர்களுடன் சனாதிபதி அவர்கள் மேற்கொண்ட முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்
17	2016.08.31	மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் வடமேல் சுற்றாடல் அதிசார சபைக்கிடையிலான நெருக்கடி தொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களுடனான கலந்துரையாடல்
18	2016.10.18	திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல் தொடர்பான கலந்துரையாடல்
19	2016.11.28	ரிதிகம பிரதேச சபை பிரதேச கல்குவாரி தொடர்பில் சனாதிபதி அவர்களுடனான கலந்துரையாடல்
சனாதிபதியின் செயலாளர் தலைமையிலான கூட்டங்கள் /கலந்துரையாடல்கள்		
20	2016.01.05	சனாதிபதி மாளிகையை மாணவர்களுக்காகத் திறந்துவைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
21		கண்டி நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்
22	2016.02.17	போதைப்பொருள் ஒழிப்புக்காகப் போக்குவரத்து மற்றும் நிதித் துறையின் ஒத்துழைப்பைப் பெறுதல் தொடர்பான கலந்துரையாடல்
23	2016.03.09	போதைப்பொருள் தடுப்பைத் தொனிப்பொருளாகக் கொண்ட தொலைக் காட்சி, மேடை நாடகங்களுக்கு பிரச்சாரம் வழங்குதல்.
24	2016.05.31	அம்பாறை மாவட்ட விவசாயிகள் சந்திப்புத் தொடர்பான கலந்துரையாடல்
25	2016.06.30	சனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்காக கொட்டகை நிர்மாணித்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல்
26	2016.08.05	வருடாந்த தலதா பெரஹரா முன்னேற்ற மீளாய்வு கூட்டம்
27	2016.12.22	வரட்சி நிலைமை காரணமாக உணவு உற்பத்தி முகம்கொடுக்கும் நெருக்கடி தொடர்பான கலந்துரையாடல்
28		உணவுற்பத்தி தேசியச் செயற்றிட்டத்தின் சந்தைப்படுத்தல் தொடர்பில் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் ஹதபிம அதிகார சபையுடனான கலந்துரையாடல்

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
சனாதிபதி அவர்களின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டங்கள் / கலந்துரையாடல்கள்		
29	2016.01.04	போதைப்பொருள் தடுப்புத் தேசியச் செயற்திட்ட கொழும்பு மாவட்ட நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
30	2016.01.12	"போதையிலிருந்து விடுபட்ட நாடு" நான்காவது நிகழ்வு தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்
31	2016.01.14	சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான புத்திஜீவிகள் கலந்துரையாடல்
32	2016.01.22	கலை, கலாசார அலகின் சட்டபூர்வ வரையறை தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல்
33	2016.01.25	உணவு உற்பத்தி தேசியச் செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம்
34	2016.02.01	அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் அமுல்படுத்தப்படும் விசேட திட்டங்கள் தொடர்பில் மாகாண. மாவட்ட பணிப்பாளர்களை தெளிவூட்டும் நிகழ்வு
35	2016.02.03	தேசிய உணவு மேம்படுத்தல் சபையுடனான கலந்துரையாடல்
36	2016.02.03	இலங்கை ராமான்ய மகா நிக்காயவின் 70 ஆவது துறவறம் பூணல் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
37	2016.02.08	"புனருதய" சுற்றாடல் பாதுகாப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் 2016-2018 செயற்பாட்டுத் திட்டக் கலந்துரையாடல்
38	2016.02.15	சர்வதேச சிறுநீரக தின நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
39	2016.02.15	சிறுநீரக நோய்த் தடுப்புத் தேசியத் திட்டம் (2016- 2018) தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்
40	2016.02.16	"நச்சுத்தன்மையற்ற நாடு" நிகழ்ச்சி தொடர்பான முன் கலந்துரையாடல்
41	2016.02.24	சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான 2016 வருடாந்த திட்டத்தை தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்
42	2016.02.26	சிறுநீரக நோய்த் தடுப்புச் தேசியத் திட்டம் (2016- 2018) தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்
43	2016.03.01	சனாதிபதி மாளிகையை மக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
44	2016.03.03	பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்
45	2016.03.03	"போதையிலிருந்து விடுபட்ட நாடு" ஐந்தாண்டு தேசிய செயற்திட்டம் தொடர்பான முன் கலந்துரையாடல்
46	2016.03.18	அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் அமுல்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பில் மாகாண, மாவட்ட பணிப்பாளர்களை தெளிவூட்டல்
47	2016.03.18	சிறுவர் பாதுகாப்பு சனாதிபதி தேசிய அலகு தொடர்பான கலந்துரையாடல்
48	2016.04.07	"சிறுநீரக நோய்த் தடுப்புத் தேசியத் திட்டம்" தயாரிப்புத் தொடர்பான கலந்துரையாடல்

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
49	2016.04.07	சிறுவர் பாதுகாப்பு சனாதிபதி தேசிய அலகின் தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் மாகாண சபை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்
50	2016.04.11	"ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால அவர்களது பிறந்த நாள் நினைவுகூரல்" தொடர்பான முன் கலந்துரையாடல்
51	2016.04.19	"ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால அவர்களது பிறந்த நாள் நினைவுகூரல்" தொடர்பான முன் கலந்துரையாடல்
52	2016.04.20	இலங்கைத் தேசிய மரபுரிமைகள் தொடர்பான ஆவண நிகழ்ச்சி காட்சிப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல்
53	2016.04.26	கண்டி, அனுராதபுர மருத்துவமனைகளில் நிர்மாணிக்கப்படவுள்ள சிறுநீரக நோயாளர் அலகு தொடர்பான கலந்துரையாடல்
54	2016.04.28	கொழும்பு கோட்டை சனாதிபதி மாளிகையை மக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
55	2016.04.29	ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால அவர்களது 83 ஆவது நினைவுதினம்
56	2016.05.02	இரத்தினபுரி மாவட்ட சுற்றாடல் மாநாடு தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
57	2016.05.02	தேசிய விவசாய வர்த்தக அபிவிருத்திச் செயற்றிட்டக் கலந்துரையாடல்
58	2016.05.03	நைகல விகாரையில் நடைபெற்ற அரச வெசாக் விழாவை ஏற்பாடு செய்தல் தொடர்பான முன் கலந்துரையாடல்
59	2016.05.04	கருத்திட்டப் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடல் (பௌதீக, நிதி முன்னேற்றங்களை பெறுதல்)
60	2016.05.05	சிறுநீரக நோய்த் தடுப்புத் தேசியத் திட்டம் பதுளை மாவட்ட ஆரம்பக் கலந்துரையாடல்
61	2016.05.05	பௌத்தாலோக்க வெசாக் வலய ஏற்பாடு தொடர்பான முன் கலந்துரையாடல்
62	2016.05.06	மாத்தளை மாவட்ட சுற்றாடல் மாநாடு தொடர்பான முன் கலந்துரையாடல்
63	2016.05.06	அஸ்கிரி பீட புதிய தேரர்களுக்கான நியமனப் பத்திரம் வழங்கும் வைபவம்
64	2016.05.09	போதைப்பொருள் தடுப்பு ஆறாவது தேசிய நிகழ்வு தொடர்பான முன் கலந்துரையாடல் 02
65	2016.05.09	தேசிய விவசாய வர்த்தக அபிவிருத்திச் செயற்றிட்டம் - தேசிய செயற் பாட்டுக் குழுக் கூட்டம்
66	2016.05.10	நைகல விகாரையில் நடைபெற்ற அரச வெசாக் விழா தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம்
67	2016.05.11	கொழும்புக் கோட்டை சனாதிபதி மாளிகையை மக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
68	2016.05.11	பௌத்தாலோக்க வெசாக் வலய ஏற்பாடு தொடர்பாக முன் கலந்துரை யாடல்

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
69	2016.05.18	உலகச் சுற்றாடல் தினத்துக்கு இணைவாக அமுல்படுத்தப்படும் நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல்
70	2016.05.18	சுற்றாடல் பாதுகாப்புக்காக நாற்று பண்ணைகளை உருவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல்
71	2016.05.18	சிறிய நீர் மின்னுற்பத்தி நிலையங்கள் தொடர்பான கலந்துரையாடல்
72	2016.05.18	இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கல் அகழப்பட்ட சுரங்கங்களை புனரமைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
73	2016.05.22	அதிமேதகு சனாதிபதி அவர்கள் தலைமையிலான அரச வெசாக் நிகழ்வு
74	2016.05.26	மிகச் சிறந்த விவசாயிகளைத் தெரிவுசெய்தல் தொடர்பான கலந்துரையாடல்
75	2016.05.27	சுற்றாடல் வாரத்தை பிரகடனப்படுத்தும் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
76	2016.05.30	உலக சுற்றாடல் தினத்துக்கு இணைவாக அமுல்படுத்தப்படும் "சுற்றாடல் வாரம்" பிரகடன ஆரம்ப நிகழ்வு
77	2016.05.31	திஸ்ஸமகாராமய, சித்துல்பவ்வ, ஹாதாகல மற்றும் ரன்கிரி ஆகிய விகாரைகளை மையப்படுத்தி நடத்தப்படவுள்ள பொசன் நிகழ்வை ஏற்பாடு செய்தல் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.
78	2016.05.31	உலக சமுத்திர தின நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
79	2016.06.01	கொழும்பு கோட்டை அதிமேதகு சனாதிபதி மாளிகையை மக்கள் பார்வைக்காகத் திறந்து வைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
80	2016.06.07	பொஸன் நிகழ்வு ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல்
81	2016.06.07	"போதையிலிருந்து விடுபட்ட நாடு" ஏழாவது மாவட்ட நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
82	2016.06.10	மல்லிகை மலர் பூஜை ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல்
83	2016.06.14	பொஸன் நிகழ்வு ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல்
84	2016.06.20	"புனருதய" சுற்றாடல் பாதுகாப்புத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் 2016-2018 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
85	2016.06.22	தேசியச் செயற்றிட்டங்களில் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
86	2016.06.22	ராமான்ய மகா நிக்காயவின் துறவறம் பூணல் நிகழ்வை ஏற்பாடு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்
87	2016.06.27	உள்ளூராட்சி நிறுவனங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான கலந்துரையாடல்
88	2016.06.30	நீர் ஊடுகலப்பு உபகரணங்களின் பராமரிப்புச் செயற்பாடுகளைக் கடற்படையினரிடம் ஒப்படைத்தல்
89	2016.07.01	"போதையிலிருந்து விடுபட்ட நாடு" ஏழாவது மாவட்ட நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
90	2016.07.05	கருத்திட்டப் பணிப்பாளர்களைத் தெளிவூட்டும் நிகழ்வு

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
91	2016.07.22	கோட்டை சனாதிபதி மாளிகையை மடுக்கந்த தேசிய பாடசாலை மாணவர்கள் பார்வையிடல் மற்றும் சனாதிபதி அவர்களுடனான கலந்துரையாடல்
92	2016.07.28	நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காகச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்
93	2016.07.28	ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால அவர்களது நினைவுகூரல் தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல்
94	2016.11.02	அபிவிருத்தி, விசேட கருத்திட்டப் பிரிவின்கீழ் அமுல்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2017 தேசியத் திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்
பிரிவுத் தலைவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டங்கள், கலந்துரையாடல்கள்		
95	2016.01.06	புகையிலைப் பயிர்ச்செய்கையின் தற்போதைய நிலை தொடர்பாக புகையிலை விவசாயிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்
96	2016.01.13	"போதைப்பொருளிலிருந்து விடுபட்ட நாடு" நான்காவது தேசிய நிகழ்வு தொடர்பான ஊடகக் கலந்துரையாடல்
97	2016.03.02	பொலிஸ் திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்புச் செயற்பாட்டு அலகை நிறுவுதல்
98	2016.03.09	மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல்
99	2016.03.11	"இலங்கையின் உணவு உற்பத்தி மற்றும் பாதுகாப்பு" தொடர்பான பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் குழுக் கூட்டம்
100	2016.04.04	நெதர்லாந்து ஆராய்ச்சிக் குழுவினருடனான கலந்துரையாடல்
101	2016.04.05	ஹெல சுவய அமைப்பு அறிமுகப்படுத்தியுள்ள நச்சுத்தன்மையற்ற உணவுகளைப் பிரபலப்படுத்தும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல்
102	2016.04.25	போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்களைத் தெளிவுபடுத்துதல்
103	2016.04.26	நச்சுத்தன்மையற்ற உணவுகளைப் பிரபலப்படுத்தும் செயற்றிட்டத்தின் நிறுவனங்களுக்கு இடையிலான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் கருத்தரங்கு
104	2016.04.26	உதவிப் பணிப்பாளர்களுடனான (விவசாயம்) கலந்துரையாடல்
105	2016.05.02	போதைப்பொருள் தடுப்பு மாதத்தை பிரகடனப்படுத்துதல்
106	2016.05.06	வெசாக் மாதம் "சதஹம் யாத்ரா' தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்
107	2016.05.06	நச்சுத்தன்மையற்ற நாடு – ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்
108	2016.05.06	போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல்
109	2016.05.09	நுவரெலியா மாவட்ட சுகாதார அலுவலர்களைத் தெளிவூட்டுதல்

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
110	2016.05.09	போதைப்பொருள் ஒழிப்பு ஆறாவது தேசியச் செயற்றிட்டம் தொடர்பான வர்த்தக சமூகத்தினருடனான கலந்துரையாடல்
111	2016.05.16	இலங்கையில் சோயா பயிர்ச்செய்கையை விரிவாக்குதல் தொடர்பான கலந்துரையாடல்
112	2016.05.24	விவசாய உதவிப் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடல்
113	2016.06.21	சனாதிபதி செயலகத்தில் கழிவகற்றலை முறைமைப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல்
114	2016.06.24	மகாவலி சீ வலய மணல் வியாபாரிகள் நலன்புரிச் சங்கத்தினருடனான கலந்துரையாடல்
115	2016.06.27	சனாதிபதி செயலகத்தில் கழிவகற்றலை முறைமைப்படுத்துதல் தொடர்பான விசேட விரிவுரை
116	2016.07.07	நீரேந்து பிரதேச பாதுகாப்பின்போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பான கலந்துரையாடல்
117	2016.07.07	போகஸ்வெவ நீர்சுத்திகரிப்பு கட்டமைப்பைத் திறந்து வைத்தல் - தொடராய்வு
118	2016.07.07	மண்சரிவு அச்சுறுத்தலுடைய நிலப்பரப்புகளில் அந்த அச்சுறுத்தலை குறைத்தல் தொடர்பான கலந்துரையாடல்
119	2016.07.08	நாமல் உயன பூங்காவின் அனைத்து வருமானங்களையும் சிறுநீரக நிதியத்துக்கு வழங்குதல்
120	2016.07.18	நியமன பத்திரம் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல்
121	2016.07.25	போதைப்பொருள் ஒழிப்புத் தொடர் நடவடிக்கையைத் திட்டமிடுதல்
122	2016.07.25	கொழும்பு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிகளைத் தெளிவூட்டுதல்
123	2016.07.26	நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காகச் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்
124	2016.07.26	சமயங்களுக்கிடையிலான ஆலோசனைப் பேரவை
125	2016.08.02	இலங்கைத் துறைமுக அதிகார சபையின் 37 ஆவது ஆண்டு நிறைவுடன் இணைந்ததாக சிறுநீரக நோய்த் தடுப்புத் தொடர்பான தெளிவுபடுத்தல் மற்றும் தேசிய சிறுநீரக நிதியத்துக்கு நிதி திரட்டும் நடைபவனி
126	2016.08.04	மேல் மாகாண சுகாதார நிறுவனங்களில் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்
127	2016.08.05	குருணாகல் - ஹிரியால போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்வு தொடர்பான முன் கலந்துரையாடல்
128	2016.08.09	2016.05.30 ஆம் திகதி நடைபெற்ற சிறுநீரக நோய்த் தடுப்புச் சனாதிபதி செயலணியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் தொடராய்வு (அது தொடர்பாக ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலும், குறித்த கூட்டத்தின் முன்னேற்ற பரிசீலனை கூட்டம்.)
129	2016.08.09	பயிற்சி புத்தகங்களை அச்சிடுவோருடன் சிறுநீரக நோய்த் தடுப்புத் தொடர்பிலான கலந்துரையாடல்
130	2016.08.10	கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
131	2016.08.11	புனருதயம் சுற்றாடல் பாதுகாப்புத் தேசியச் செயற்றிட்டத்துக்குரிய தரவுகள், தகவல்களை பெறுதல்
132	2016.08.18	உப உணவுப் பொருட்களின் இறக்குமதியை வரையறுத்தல் தொடர்பான தனியார் தொழில் முயற்சியாளர்களுடனான கலந்துரையாடல்
133	2016.08.18	"போதைப்பொருளிலிருந்து விடுபட்ட நாடு" நடைபவனி மற்றும் தேசிய பட்டம் விடும் நிகழ்வு – ஊடகக் கலந்துரையாடல்
134	2016.08.19	அம்பாறை மாவட்ட விவசாயிகள் மாநாட்டை ஏற்பாடு செய்தல்
135	2016.08.19	புனருதயம் சுற்றாடல் பாதுகாப்புத் தேசியச் செயற்றிட்டத்துக்குரிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம். (148 மி.ரூ)
136	2016.08.24	கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியைச் சூழல் நேயமாக நடத்துதல்
137	2016.08.24	பொலநறுவையில் நடைபெறவுள்ள இளைஞர் மாநாடு தொடர்பான கலந்துரையாடல்
138	2016.08.30	திருகோணமலை மாவட்டத்தில் சிப்பிகளை அகழ்தல் மற்றும் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல்
139	2016.08.31	கழிவு முகாமைத்துவம் தொடர்பில் மேல் மாகாண மருத்துவ நிறுவனங்களில் அமுல்படுத்தப்படும் செயற்றிட்டங்களை ஏனைய நிறுவனங்களுக்கு விரிவுபடுத்துதல் தொடர்பான கலந்துரையாடல்
140	2016.08.04	அனகாரிக்க தர்மபால அவர்களது நினைவு நிகழ்வு தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்
141	2016.08.30	அனகாரிக்க தர்மபால அவர்களது நினைவு நிகழ்வு தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்
142	2016.10.03	5ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய காலநிலை மாற்றத்துக்கு ஒத்திசைவாதல் மாநாடு தொடர்பான ஊடகத் தெளிவுபடுத்தல் கூட்டம்
143	2016.10.03	சிறுநீரக நோயாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்காகக் கண்டி பொது மருத்துவமனைக்கு அருகில் நிர்மாணிக்கப்படவுள்ள தங்குமிட தொகுதி நிர்மாணம் தொடர்பான கலந்துரையாடல்
144	2016.10.10	முன்னேற்ற மீளாய்வு கூட்டம்
145	2016.10.10	கருத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளைச் செலவு செய்தல் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
146	2016.10.25	உப உணவு பொருட்களின் இறக்குமதியை வரையறுத்தல் தொடர்பாக தனியார் தொழில் முயற்சியாளர்களுடனான இரண்டாவது கலந்துரையாடல்
147	2016.10.31	முன்னேற்ற மீளாய்வு கூட்டம்
148	2016.10.31	அமைச்சுக்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்
149	2016.11.02	சனாதிபதி செயலகத்தில் கழிவகற்றலை முறைமைப்படுத்துதல்

தொ. இலக்கம்	திகதி	கூட்டம்/கலந்துரையாடல்
150	2016.11.04	மகாவலி கங்கைக்குக் குறுக்காக இருக்கும் மினிப்பே அணைக்கட்டை உயர்த்துவதன்மூலம் திருகோணமலை மாவட்டத்துக்கு ஏற்படுமெனக் குறிப்பிடப்படும் பாதகமான தாக்கங்கள் தொடர்பான கலந்துரையாடல்
151	2016.11.15	நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல்
152	2016.11.15	சனாதிபதி பதவியேற்பு நிறைவு நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல்
153	2016.11.16	சனாதிபதி செயலகத்தில் கழிவகற்றலை முறைமைப்படுத்துதல்
154	2016.11.17	சனாதிபதி பதவியேற்பு நிறைவு நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடல்
155	2016.11.17	சனாதிபதி பதவியேற்பு நிறைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல்
156	2016.11.17	பசுமை கட்டிட வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்
157	2016.11.21	"புனருதய" முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
158	2016.11.29	பதவியேற்புக்கு இயைவாக செயற்படுத்தவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்
159	2016.12.06	சூழல் நேய சிவனொளிபாத பயணம் தொடர்பான கலந்துரையாடல்
160	2016.12.06	மேல் மாகாணத்தில் போதைப்பொருள் சுற்றிவளைப்பு தொடர்பான கலந்துரையாடல்
161	2016.12.07	உணவு உற்பத்தித் தேசியச் செயற்றிட்டத்துக்கு போர் வீரர் அதிகார சபையின் ஒத்துழைப்பைப் பெறுதல் தொடர்பான கலந்துரையாடல்
162	2016.12.09	வறுமை ஒழிப்புக்காகப் போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டத்தைத் தயாரித்தல் (பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் இடம்பெற்ற செயலமர்வு)
163	2016.12.15	நிலைபேறான பாடசாலைச் செயற்றிட்டக் கலந்துரையாடல்
164	2016.12.16	நிலைபேறான பாடசாலை செயற்றிட்டக் கலந்துரையாடல்
165	2016.12.21	பல்கலைக்கழக மாணவர்களுக்காக நடத்தப்பட்ட போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டம் - கேகாலை மாவட்டம்
166	2016.12.21	மெத்சிறி செவன முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
167	2016.12.22	நிலைபேறான பாடசாலைச் செயற்றிட்டம்
168	2016.12.27	சிறுநீரக நோய்த் தடுப்புச் செயற்றிட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

பொதுமக்கள் தொடர்புப் பிரிவு

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்படும் பொதுமக்கள் மற்றும் அரச நிறுவன ஊழியர்களின் அனைத்து பிரச்சினைகள், கோரிக்கைகளைத் தொடர்புடைய அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் அரசநிறுவனங்களுக்கு அனுப்பி துரித நிவாரணம் வழங்குவதற்காகச் செயற்படுதல்

முதன்மைப் பணிகள் / நோக்கங்கள்

- மின்னஞ்சல், தபால், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் தொலைநகல் ஊடாகக் கிடைக்கும் கடிதங்கள் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் நானாவித பொதுமக்கள் கோரிக்கைகளுக்காகத் துரிதமாகப் பதில் வழங்கி "சனாதிபதியிடம் தெரிவிக்க" செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல்.
- பொதுமக்கள் தொடர்பு பிரிவுக்கு நேரடியாக வருகைதரும் பொதுமக்களுக்கு துரிதமாகப் பதிலளித்து பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல்.
- பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்கள் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்படும் மனுக்களுக்கான தீர்வுகளை வழங்குவதற்காக அரச நிறுவனங்களுக்கு அனுப்பித் துரித நடவடிக்கை எடுக்கத் தலையீடு செய்தல்.
- ஊழியர் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்வதற்காக அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்களை ஒருங்கிணைத்து விசேட செயற்றிட்டங்களை அமுல்படுத்துதல்.
- சனாதிபதி நடமாடும் சேவை மூலம் கிடைக்கும் பொதுமக்கள் மனக் குறைகளுக்காகத் துரிதமாக நடவடிக்கை எடுத்தல்

2016 ஆண்டில் அடையப்பட்டவை

❖ **"சனாதிபதியிடம் தெரிவிக்க" செயற்றிட்டம்**

முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்ட முறை





❖ **பொதுமக்கள் தொடர்புப் பிரிவுக்கு நேரடியாக வருகைதரும் பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்**

பொதுமக்கள் தொடர்புப் பிரிவுக்கு நேரடியாக வருகைதரும் 4000க்கும் கூடுதலான பொதுமக்களின் பிரச்சினைகளுக்குச் சாதகமாக நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது.

❖ **பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்கள் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்படும் மனுக்களுக்காகத் தீர்வுகளை வழங்குதல்**

2016ஆம் ஆண்டில் சம்பள அதிகரிப்பு, ஆட்சேர்ப்புக்கள், சேவையில் நிரந்தரமாக்குதல், பண வைப்புத் தொடர்பான பிரச்சினைகள், ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகள், படைவீரர்கள் பிரச்சினைகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் எழுந்த பொதுமக்களின் 28 ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புக்களுக்கு நல்ல முறையில் தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

❖ **ஊழியர் பிரச்சினைகளின் முகாமைத்துவத்துக்காக அனைத்து அமைச்சுக்கள் / மாகாண சபைகளை ஒருங்கிணைத்து அமுல்படுத்தும் விசேட செயற்றிட்டம்**

அனைத்து அரச நிறுவனங்களிலுமுள்ள ஊழியர்களுக்கான தமது கடமை ரீதியான பிரச்சினைகள் மற்றும் மனக்குறைகள் தொடர்பில் தீர்க்கப்படாதிருந்த கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும் அந்த கோரிக்கைகள் தொடர்பில் செயற்பாட்டுத் திட்டத்தின்மூலம் தீர்வுகளை வழங்குவதற்கோ தெளிவுபடுத்துவதற்கோ வாய்ப்பு வழங்கும் நோக்குடன் இந்தச் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதன் முதலாவது நடவடிக்கையாக 2016.11.21ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களது தலைமையில் இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர் பிரச்சினைகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் ஊழியர் தினம் நடத்தப்பட்டது. அதன்போது பெருமளவு ஊழியர் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. அனுபவமுடைய அலுவலர்களைக் கொண்ட 06 குழுக்கள் ஊடாக இந்த பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

❖ **சனாதிபதி நடமாடும் சேவைமூலம் கிடைக்கும் பொதுமக்கள் மனக்குறைகளுக்காகத் துரித நடவடிக்கை எடுத்தல்**

சனாதிபதி செயலகத்தினால் நடத்தப்படும் நடமாடும் சேவைகளின்போது அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கும் பொதுமக்கள் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்குப் பொதுமக்கள் தொடர்புப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஊடகப் பிரிவு

அறிமுகம்

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில்/சனாதிபதி செயலகத்தில் நடைபெறும் விசேட கூட்டங்கள்/கலந்துரையாடல்கள்/வைபவங்கள் பற்றிய செம்மையான தகவல்களை ஏனைய ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்

2016 ஆம் ஆண்டின் அடைவு மட்டங்கள்

பிரிவு / அலகின் பெயர் : ஆசிரியர் பிரிவு	
செயற்பாடு/விடயம்	**நிறைவேற்றப்படும் பணிகள் பற்றிய விபரம்**
1. தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்	• தேசிய செய்தித்தாள்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகப் பிரதானிகளுடன் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தல். • மாகாண மட்டத்தில் பிரதேச ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடலொன்றை ஏற்படுத்திச் செயற்படல்.
2. விசேட கருத்திட்டங்கள்	• 2017 ஆம் ஆண்டில் 06 தொகுப்புக்களைத் தயாரித்து வெளியிடல்.
3. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல் மற்றும் ஊடக அறிக்கைகளை வெளியிடல்.	• சகல வெளிநாட்டு ஊடகங்களுக்கும் அதிமேதகு சனாதிபதி அவர்களின் செய்தி அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை வழங்குதலும் வெளி நாட்டு ஊடகங்களினால் விடுக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாகச் சனாதிபதி அவர்களை அறிவுறுத்தலும்.
4. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிமையை மேம்படுத்தும் வகையில் கௌரவ சனாதிபதி அவர்கள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலான விசேட கடிதங்கள்/ வெளியீடுகளை வெளியிடல்.	• மொரகஹகந்த போன்ற விசேட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தல் மற்றும் ஊடகவியலாளர்களைக் குறித்த இடங்களுக்கு அவதானிப்பு விஜயங்களுக்காக அழைத்துச் செல்லலும், கடிதங்கள் தயாரித்தலும்.
5. நாளாந்த அறிக்கையிடுதல்கள்	• சகல தொலைக்காட்சி/ வானொலி மற்றும் பத்திரிகைகளுக்கு சனாதிபதி அவர்களால் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாகத் தெரிவித்தல், தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் அறிவித்தல்களை வெளியிடுதல்.
6. செயலமர்வுகள்/பயிற்சி பட்டறைகள் (இயலளவு வளர்ச்சி)	• ஆசிரியர் பிரிவின் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை மற்றும் தொழில்தகைமை வளர்ச்சிக்காக விசேட நிபுணர்களின் பங்குபற்றலுடன் மாநாடுகளை ஒழுங்கு செய்தல்.

பிரிவு / அலகின் பெயர் : ஆசிரியர் பிரிவு	
செயற்பாடு/விடயம்	**நிறைவேற்றப்படும் பணிகள் பற்றிய விபரம்**
7. நாளாந்தம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திகளை சனாதிபதி அவர்களுக்கு தெரிவித்தல்.	• இதன் பொருட்டு வாராந்தம் விசேட அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் தேவையான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சனாதிபதி அவர்களுக்கு தெரிவித்தல்.
8. கௌரவ சனாதிபதி அவர்களின் உரைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்குத் தேவையான தரவுகளை ஒன்று திரட்டல்.	• சனாதிபதி அவர்கள் பங்குபற்றும் அனைத்து வைபவங்கள் தொடர்பான தகவல்களையும், அதன் பின்னணி விபரங்களையும் அறிக்கையிட்டு சனாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்தல்.

பிரிவுகள் / அலகின் பெயர் : இணையத்தள நிர்வாக அலகு	
செயற்பாடு / விடயம்	**நிறைவேற்றப்படும் பணிகள் பற்றிய விபரம்**
1. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிமையை மேம்படுத்தும் வகையில் அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலான விசேட கடிதங்கள் / வெளியீடுகளை வெளியிடல்.	சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் இணையத் தளங்களில் கடிதங்கள் மற்றும் செய்திகளை வெளியிடல். அதிமேதகு சனாதிபதி அவர்கள் கலந்து கொள்ளும் விசேட வைபவங்களை இணையத்தினூடாக நேரடியாக ஒளிபரப்புதல்.
2. விசேட மாநாடுகள் மற்றும் கலந்துரையாடல்களை நடத்துதல்.	இணைய வசதிகளை உபயோகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டன.
3. வேறு	கௌரவ சனாதிபதி அவர்களுடனான நட்புறவை பேணுவதன் பொருட்டு ஊடக நிறுவனங்கள் மற்றும் செய்தி ஆசிரியர்களுடன் சந்திப்புக்களை நடத்துதலும் மற்றும் அரசின் நிறைகுறைகள் தொடர்பாக ஊடகங்களுடன் கலந்துரையாடலும்.

பிரிவின் / அலகின் புகைப்படப் பிடிப்புப் பிரிவு	
செயற்பாடு / விடயம்	**நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள்**
1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல் மற்றும் செய்திகளை வெளியிடல்.	அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் நாட்டின் அபிவிருத்தி தொடர்பான செய்திகளுடன் அது தொடர்பான புகைப்படங்களை அனுப்பி வைத்தல்.
2. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிமை மேம்படக்கூடியவாறு அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பான விசேட கருத்திட்டங்களை வெளியிடுதல்.	அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிமை மேம்படும் வகையில் சத்தியப் பிரமாணம் மேற்கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து இதுவரையிலான புகைப்படங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு முடிவடைந்துள்ள அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான விசேட புகைப்படங்களை பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் வெளியிடுதலும் இணையதளங்களுக்கு வழங்குதலும்.

பிரிவின் / அலகின் புகைப்படப் பிடிப்புப் பிரிவு	
செயற்பாடு / விடயம்	**நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள்**
3. கண்காட்சிகள்	அதிமேதகு சனாதிபதி அவர்கள் சத்தியப் பிரமாணம் மேற்கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து 2016 சனவரி 8 வரையிலான அனைத்துப் புகைப்படங்கள் மற்றும் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக தயாரிக்கப்பட்ட புகைப்படங்களை ஒன்றுசேர்த்துக் கண்காட்சி ஒன்றை நடாத்துதல்.
4. செயலமர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (இயலளவு அபிவிருத்தி)	புகைப்படப் பிடிப்பாளர்கள், தொகுப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் சார்பில் விசேட பயிற்சி செயற்றிட்ட மொன்றை நடாத்துதல்.

பிரிவின்/அலகின் பெயர்: சர்வதேச ஊடக மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு	
செயற்பாடு/விடயம்	**நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள்**
1. தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.	• பெப்ருவரி 4 ஆம் திகதி சுதந்திர தினமன்று அனைத்து ஏற்பாட்டு பணிகளையும் நேரடி ஒளிபரப்பு உள்ளிட்ட ஊடகப் பணிகளையும் நெறிப்படுத்தல். • சர்வதேச ஊடகங்கள் மற்றும் தூதுவ உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்தல். • BMICH இல் இடம்பெற்ற நிலைபேறான யுகத்தின் மூன்றாண்டு ஆரம்பம் எனும் வைபவத்தின் சிறப்பு அதிதி உட்பட உரையாடல்கள் மற்றும் கலாசார அம்சங்களை ஒருங்கிணைத்தல்.
2. விசேட கருத்திட்டங்கள்	• நாடு முழுவதிலும் கிராமசக்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும், நெறிப்படுத்தலும். • நிலைபேறான அபிவிருத்திப் பாடசாலைச் சமூகங்களை அமைத்தல்.
3. உள்நாட்டு வெளிநாட்டு ஊடக நிறுவனங்களை ஒருங்கிணைத்தலும் செய்திகளை வெளியிடுதலும்.	• அனைத்து அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணுதல். • நாளாந்தம் செய்திகள் மற்றும் வீடியோ நாடாக்களைத் தயாரித்தலும் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்தலும். • செய்தி அறிவித்தல்களை தயாரித்தலும் பகிர்தலும். • சனாதிபதி அவர்களின் செய்திகளை ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்.

பிரிவின்/அலகின் பெயர்: சர்வதேச ஊடக மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு	
செயற்பாடு/விடயம்	**நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள்**
4. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பிரதிமை மேம்படக் கூடியவாறு அதிமேதகு சனாதிபதி அவர்கள் மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான விசேட கட்டுரைகள் மற்றும் வெளியீடுகளை பிரசுரித்தல்.	• சனாதிபதி அவர்களின் கொள்கைகள் மற்றும் அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பது பற்றி பத்திரிகைகளுக்கு விசேட செய்திகளை தயாரித்தல். • அவை ஊடகங்களுக்கு வழங்கப்படுவதையும் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுவதையும் சான்றுப்படுத்தலும், ஒருங்கிணைத்தலும்.
5. விசேட கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்	• சனாதிபதி அவர்களின் கொள்கைகளுக்கமைவாக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப தொனிப்பொருள்களை தெரிந்தெடுத்து மாதாத்திற்கொரு முறை விசேட கருத்தரங்குகளையும் வட்டமேசைக் கலந்துரையாடல்களையும் நடாத்துதல்.
6. கண்காட்சிகள்	• சனாதிபதி பதவியேற்பு வைபவத்திற்காக புகைப்படக் கண்காட்சி, கேலிச்சித்திரக் கண்காட்சியினை ஏற்பாடு செய்தல். • இத்தகைய கண்காட்சிகளை பிரதேச ரீதியிலும் ஏற்பாடு செய்தல்.
7. நாளாந்த அறிக்கையிடல்	• சனாதிபதி அவர்கள் கலந்து கொள்ளும் அனைத்து விழாக்கள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கி அது தொடர்பான அறிக்கைகளை தயாரித்தலும் அவற்றை ஊடகங்களுக்கு வழங்குதலும்.
8. செயலமர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (இயலளவு அபிவிருத்தி)	• ஊடகப் பிரிவின் இயலுமைகளை விருத்தி செய்வதற்காக அரசாங்க செய்தித் திணைக்களம் மற்றும் தூதுவர் அலுவலகங்களின் ஒத்துழைப்பின் ஊடாக செயலமர்வுகளையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஏற்பாடு செய்தல்.
9. நாளாந்தம் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களின் மூலம் இலங்கை தொடர்பாக பிரசாரம் செய்துள்ள செய்திகள் தொடர்பில் சனாதிபதி அவர்களை அறிவுறுத்தல்.	• நாளாந்தம் அச்சீட்டு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை புலனாய்வு செய்து இலங்கை தொடர்பான செய்திகளை பகுத்தாய்ந்து சனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்தல். • வாரஇறுதி செய்திப் பத்திரிகைகளை பகுப்பாய்வு செய்து பகுப்பாய்வு ரீதியாக தயாரிக்கப்பட்ட முழுமையானதொரு அறிக்கையை ஒவ்வொரு திங்கட்கிழமை தினமும் அனுப்பி வைத்தல்.
10. அதிமேதகு சனாதிபதி அவர்களின் பேச்சுக்கள் மற்றும் உரைகளுக்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தல்.	• சனாதிபதி அவர்களின் பேச்சுகளுக்குத் தேவையான தகவல்கள் தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்தி ஒவ்வொரு பேச்சுக்கும் உரிய சுருக்கத் தகவல்களுடன் கூடிய அறிக்கையொன்றை நாளாந்தம் வழங்குதல்.
11. ஏனையவை	• சனாதிபதி அவர்களின் பிரதிபிம்பத்திற்கு அமைவான உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பேச்சாளர்களைத் தெரிவு செய்து கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

பிரிவின்/அலகின் பெயர்: வீடியோ அலகு	
செயற்பாடு/விடயம்	**நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்கள்**
1. விசேட கருத்திட்டங்கள்	• அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றும் அனைத்தும் விழாக்களின் ஊடகப் பணிகளை மேற்கொண்டு அதன் காட்சிகளை அனைத்து அலைவரிசைகளுக்கு (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) FTP அல்லது கசெட்டுக்கள் மூலம் வழங்குதல். • அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றிய விழாக்களின் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிக்கை நிகழ்ச்சித்திட்டங்களாக தயாரித்து அனைத்து அலைவரிசைகளின் மூலம் பரப்புதல். • அதிமேதகு சனாதிபதி மேற்கொள்ளும் வெளி நாட்டு விஜயங்களுக்குரிய அறிக்கை நிகழ்ச் சித்திட்டங்களைத் தயாரித்து அலைவரிசை களுக்கு வழங்குதல். • அதிமேதகு சனாதிபதி அவர்களின் கீழுள்ள அமைச்சுக்கள் தொடர்பாக அறிக்கை நிகழ்ச் சித் திட்டங்களைத் தயாரித்து அலைவரிசை களின் மூலம் பரப்புதல். • சத்தின மத்தக்கய அறிக்கை நிகழ்ச்சித் திட்டத்தை தயாரித்தல். • அதிமேதகு சனாதிபதி அவர்களின் படங்களை களஞ்சியப்படுத்துதலும் தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்திற்கு அனுப்புதலும். • அதிமேதகு சனாதிபதி அவர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளில் O/P பஸ் பொருத்துவதாயின் அந்நிகழ்வின் அனைத்துக் காட்சிகளையும் Face Book, You Tube மற்றும் New Media விற்கு வழங்குதல். • அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளைப் படம் பிடித்து மக்களின் கருத்துக்களுடன் அறிக்கை நிகழ்ச்சித்திட்டங்களாகத் தயாரித்து அதிமேதகு சனாதிபதி அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருதல். • நாளாந்தம் படப்பிடிப்புக்கு உட்படும் அதிமேதகு சனாதிபதி அவர்களதும் ஏனைய பிரமுகர்களதும் படங்களை வெவ்வேறாகக் களஞ்சியப்படுத்தல். • அதிமேதகு சனாதிபதி அவர்கள் தொடர்பில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை ஊடகப் பிரிவில் பொருத்தப்பட்டுள்ள விருந்தினர்கள் வருகை தரும் இடத்தில் உள்ள தொலைக் காட்சியில் காண்பித்தல்.
2. செயலமர்வுகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (இயலளவு அபிவிருத்தி)	• ஊடகத்துறையில் அனுபவம் வாய்ந்த புகைப் படக்கலைஞர்கள் மூலம் ஊடகப் பிரிவின் வீடியோ கமெரா படப்பிடிப்பாளர்கள், தொகுப் பாளர்கள் மற்றும் உதவி கலைஞர்களை தொழில்நுட்பம் தொடர்பாக அறிவுறுத்தல்.
3. ஏனையவை	• ட்ரோனர் படகுகள் மூலம் படம்பிடித்து மொர காகந்த நீர்த்தேக்கம் தொடர்பான காட்சிகளைப் பெற்றுக் கொள்ளலும் தேவையான சந்தர்ப் பங்களில் பயன்படுத்துவதற்காக அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்தலும்.

நல்லிணக்கப் பிரிவு

அறிமுகம்

2015 யூன் மாதம் முதல் நடைமுறைக்குவரும் வகையில் நல்லிணக்கப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அனைத்து பிரசைகளுக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்கும், பல்வகைமை மற்றும் தேசிய தனித்துவத்திற்கு மதிப்பளிக்கின்ற ஒற்றுமையுடன் வாழக்கூடிய நிலையானதொரு நாட்டினைக் கட்டியெழுப்புதலும், அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்து தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய செயன்முறைகளுக்கமைவாக செயற்படுவதற்கான அடிப்படை பங்களிப்பினை வழங்குதலும் இப்பிரிவின் பிரதான பணிப்பொறுப்பாகும். இப்பிரிவானது சனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலுக்கமைய முன்னாள் சனாதிபதி மேன்மைதங்கிய சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

முக்கிய இலக்குகள்

- தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல்லினங்கள் மற்றும் சமயத் தலைவர்கள், சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் மற்றும் தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்ட அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மேற்குறித்த பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.

2016 ஆம் ஆண்டின் அடைவுகள்

- அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் சபைகளின் உறுப்பினர்கள், சிவில் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள், சமயத் தலைவர்கள், சமூக மைய அமைப்புக்கள், வெளிநாட்டு தூதுவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதிகள், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கியின் பிரதிநிதிகள், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பலசுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

- இலங்கை வாழ் பொதுமக்கள், பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்களை உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அனுப்புதலும், அதே போன்று தொலைபேசியினூடாக கிடைக்கும் தகவல்களுக்கு ஏற்ப அந்நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி பதில்களைப் பெற்றுக்கொடுத்தலும்.

- 2016 சனவரி மாதத்திலிருந்து டிசம்பர் வரை 4000 இற்கும் அதிகமான கடிதங்கள் இப்பிரிவிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அக்கடிதங்களுக்கு தாமதிக்காது பதில் வழங்குதல்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு

அறிமுகம்

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவானது உள்ளக நிர்வாகப் பிரிவின் கீழ் செயற்படுவதுடன்,சனாதிபதி செயலகம் மற்றும் அதனுடன் இணைந்த சகல அலுவலகங்களினதும் கணனி, தொலைபேசி மற்றும் ஏனைய தொழில்நுட்ப உபகரணங்களின் பராமரிப்பு, இணையத்தளங்கள் மற்றும் மென்பொருள் நிர்மாணங்கள், வலையமைப்புச் சேவைகள் என்பன இப்பிரிவினால் ஆற்றப்படும் சேவைகளாகும்.

சனாதிபதி செயலகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிகளும், அவற்றின் முன்னேற்றமும் கீழே தரப்பட்டுள்ளன

1. சனாதிபதி செயலகத்தின் வலைக் கட்டமைப்பினை முறைமைப்படுத்தல்.

   2016 ஆம் ஆண்டின் இறுதியில் 90% சதவீதமான பணிகள் இவ்வலுவலகத்தினால் நிறைவடைந் துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இதனை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.



02. சனாதிபதி செயலகத்தின் வலைக் கட்டமைப்பு தொடர்பான பூரண அறிக்கையொன்றினைத் தயாரித்தல்.

2016 ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "upgrading the infrastructure at the Presidential Secretariat" செயற்றிட்டத்தின் ஊடாக இப்பணியை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், 95% சதவீத பணிகள் 2016 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இதன் இறுதிக்கட்டப் பணிகள் 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படும்.



03. மென்பொருள் கட்டமைப்புக்கள் மற்றும் வெப் சேர்வர் (Web Server) இயந்திரங்களுக்கான காப்புத் தொகுதியொன்றை நிறுவுதல்.

2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

04. ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக் கட்டிடத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவில் Cloud Based சேர்வர் ஒன்றினை நிறுவுதல்.

2016 ஆம் ஆண்டில் இப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினால் தற்போது இவ்வசதி உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

அதேபோல் கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வு பிரிவிற்கும் இவ்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

05. அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவில் Proxy சேர்வர் இயந்திரம் ஒன்றினை நிறுவுதல்.

2016 ஆம் ஆண்டில் இப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன்,அப்பிரிவினால் தனது நாளாந்த தேவைகளுக்காக இவ்வியந்திரம் தற்போது உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

6. சனாதிபதி செயலகத்துடன் இணைந்த சகல அலுவலகங்களினதும் வலையமைப்பு பற்றிய பூரண அறிக்கை தயாரித்தல்.

சனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் "upgrading the infrastructure at the Presidential Secretariat" செயற்றிட்டத்தின் ஊடாக இதன் 60% சதவீதமான பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளன.



07. Cloud Based File சேர்வர் ஒன்றினை சனாதிபதி செயலகத்தில் தாபித்தல்.

அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்ட பிரிவு, கொள்கை ஒருங்கிணைப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வுப்பிரிவு என்பவற்றில் இந்த வகையான சேர்வர்கள் இயந்திரங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பிரிவுகளால் இவை உபயோகிக்கப்படுகின்றன.

8. சனாதிபதி செயலகத்தின் மனித வள முகாமைத்துவ கட்டமைப்பை முறைப் படுத்தி இற்றைப்படுத்தல்.

இதன்மூலம் 95 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்த மென்பொருள் கட்டமைப்பின் தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டு வருவதுடன் 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.



9. **சனாதிபதி செயலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை நவீனமயப்படுத்தி அதன் தரவுகளை இற்றைப்படுத்தல்.**

இதன் பொருட்டு புதிய இணையத்தள உருவாக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் 80 சதவீத பணிகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.



10. மக்கள் தொடர்பாடல் பிரிவிலுள்ள கடித முகாமைத்துவ கட்டமைப்பை இற்றைப்படுத்தல்.

சனாதிபதியிடம் தெரிவிக்க செயற்றிட்டத்தின் கீழ் மக்கள் தொடர்பாடல் பிரிவுக்கு புதிய கடித முகாமைத்துவ கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன் முன்னர் காணப்பட்ட கடித முகாமைத்துவ கட்டமைப்புடன் இப்புதிய கட்டமைப்பை இணைத்து கடமைகள் மிக வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் சனாதிபதியிடம் தெரிவிக்க செயற்றிட்டத்திற்கு தனியான தொலைபேசி பரிமாற்றல் நிலையமொன்றினை தாபித்து அதனூடாக கிடைக்கும் தொலைபேசி அழைப்புகளுக்காக சிறந்த சேவையை வழங்க நடவடிக்கையை மேற்கொள்ளல்.

11. சனாதிபதி செயலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அலுவலகங்களில் கடமை புரியும் அலுவலர்களுக்கு கணனிப்பயிற்சி செயற்றிட்டத்தை ஆரம்பித்தல்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவினூடாக சனாதிபதி செயலகம் மற்றும் அதனுடன் இணைந்த அலுவலகங்களின் கடமை புரியும் அலுவலர்களுக்கு கணனிச் செயற்பாடு தொடர்பான ஆரம்ப பயிற்சி ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் இதற்குத் தேவையான கற்பித்தல் மாதிரிகளை Microsoft நிறுவனத்திடமிருந்து பெற்று 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சனாதிபதி செயலகம் உள்ளிட்ட அனைத்து அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு கணனிப்பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

12. நிர்வாக செயற்பாடுகளுக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தில் (ஒம்புஸ்ட்மன்) கணனிக் கட்டமைப்பு மற்றும் இணையத்தளத்தை உருவாக்குதல்.

ஒம்புஸ்ட்மன் அலுவலகத்திற்கான இணையத்தளத்தின் நிர்மாணப்பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் இதற்காக மனு முகாமைத்துவ கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டு அதற்கு தரவுகளை உள்ளீடு செய்வதற்காக அவ்வலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

13. போக்குவரத்துப் பிரிவிற்கான மென்பொருள் கட்டமைப்பை உருவாக்கல்.

சனாதிபதி செயலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் சகல தகவல்களையும் உள்ளீடு செய்வதற்காக புதிய கணனிக்கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கான ஆரம்பக்கட்டச் செயற்பாடுகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இதனைப் பூரணமாக நிறைவு செய்வதற்கு எதிபார்க்கப்படுகிறது.

போக்குவரத்துப் பிரிவு

அறிமுகம்

சனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவின் பணிகளை உச்சமட்ட வினைத்திறமையுடன் மேற்கொள்ளல்

பொதுச் செயற்பாடுகள் / நோக்கங்கள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வாகனங்களுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- நாளாந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்
- சனாதிபதி செயலகத்திற்குரித்தான அனைத்து வாகனங்களையும் பராமரித்தல்
- சனாதிபதி செயலகத்திற்குரித்தான வாகனங்களுக்குரிய காப்புறுதி, அரசிறை உத்தரவுச்சீட்டு மற்றும் புகைப் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்
- வாகன விபத்துக்களுக்காக காப்புறுதி நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்
- எரிபொருள் கேள்விக்கட்டளைகளை வழங்குதல், கொடுப்பனவுக்காக எரிபொருள் கேள்விக் கட்டளைகளைச் சரிபார்த்து கொடுப்பனவுச் சீட்டுக்களைத் தயாரித்து கணக்குப் பிரிவுக்கு சமர்ப்பித்தல்
- வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளுக்கான பற்றுச் சீட்டுக்களைப் பரீட்சித்து கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக சமர்ப்பித்தல்
- எரிபொருள் வழங்குவதற்கமைவாக பயண ஓட்டப் பதிவுகளை பரீட்சித்தல் மற்றும் எரிபொருளுக்காக செலவு செய்யப்படுகின்ற ஆகுசெலவுகளை சரியான முகாமைத்துவத்தின் மூலமாக கொண்டு நடாத்துதல்
- வாகனப் பொருட் பதிவேட்டை பராமரித்தல், கையேற்றல், கையளித்தல், பதிவேடுகளிலிருந்து அகற்றுதல்
- சனாதிபதி செயலகத்திற்கு புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற புதிய சாரதிகளை வெற்றிடங்கள் நிலவுகின்ற உரிய பிரிவுகளுக்கு இணைப்புச் செய்தல்
- சாரதிகள் மற்றும் பணித்தொகுதியினரின் திறமைகளை மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை மனித வள அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து ஒழுங்குசெய்தல்.

01. பணித்தொகுதி

- பணித்தொகுதியானது, அரச சேவையில் இணைந்து கொண்ட புதிய அலுவலர்கள் மற்றும் வேறு அரச அலுவலகங்களிலிருந்து சனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம்பெற்று வருகை தந்துள்ள அலுவலர்களை கொண்டதாகும். அதற்கமைவாக தற்போது அலுவலகப் பணியாட்தொகுதியில் இரு வெற்றிடங்கள் தவிர ஏனையவை பூரணப்படுத்தப்பட்டுள்ளமை யினால் அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் மனித வள அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும். சாரதிகள் சேவையில் சில வெற்றிடங்கள் காணப்படுவதனால் புதிய ஆட்சேர்ப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அவ்வாறே தற்போது சாரதிகள் சேவையும் புதிய சாரதிகள் மற்றும் அரச சேவையிலுள்ள வேறு அலுவலகங்களிலிருந்து சனாதிபதி செயலகத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த

சாரதிகளையும் கொண்டுள்ளது. அனைத்து சாரதிகளுக்கும் இலங்கை ஜோர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் மற்றும் தொழில்பயிற்சி அதிகாரசபை என்பவற்றின் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. தொழில்நுட்பம் மற்றும் வீதி ஒழுங்குவிதிகள் பற்றிய தற்போதுள்ள அறிவிற்கு மேலதிகமாக நேர்மறை சிந்தனைகள் மற்றும் மன அழுத்தத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான செயலமர்வுகள் இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப் பட்டன. இவ்வனைத்து பயிற்சி செயலமர்வுகளின் இறுதியிலும் பயிற்சிகளில் பங்குபற்றிய வர்களிடமிருந்து பெற்ற பதில்கள் மிகச் சிறப்பாக அமைந்தன.

- திடீர் வாகன விபத்துக்களின்போது நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய செயன்முறைகள் தொடர்பாக சாரதிகள் மற்றும் மேற்பார்வை செய்யும் அலுவலர்களை தெளிவூட்டுவதற்கான இரு செயலமர்வுகள் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் ஒத்துழைப்புடன் 2016 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக வாகன விபத்துக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக பாதுகாப்பு செயலாளரின் ஆலோசனைகளுக் கேற்ப இராணுவ அதிகாரிகளைக் கொண்ட விசாரணைச் சபையொன்றினை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இரவு சேவையை நிறைவு செய்யும் சாரதிகள் ஓய்வெடுப்பதற்கு போதிய இடவசதிகள் காணப்படாததுடன், பகல் வேளைகளில் சாரதிகள் தரித்திருப்பதற்குப் பொருத்தமான இடம் காணப்படவில்லை. எனவே இதன்பொருட்டு பொருத்தமானவாறு தயார்படுத்தப்பட்ட இரு கொள்கலன்கள் (Containers) ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

- தொழினுட்ப உத்தியோகத்தர்கள் இருவருக்கு கடமைகளின் பொருட்டு கொள்கலன் ஒன்றில் இடவசதி வழங்கப்பட்டுள்ளது.

02. சேவை வழங்கல்

தற்போது போக்குவரத்துப் பிரிவில் காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்களைக் கொண்டு திருப்திகரமான சேவை வழங்கப்படுவதுடன், 2016 மே மாதம் 86 சாரதிகள் இடமாற்றம் செய்யப்பட்ட தினத்தில் மாத்திரம் சேவை வழங்குதல் தடைப்பட்டபோதிலும், ஒரு நாளில் வழங்கக்கூடிய உயரிய சேவை எமது பிரிவினரால் வழங்கப்பட்டது. தற்போது ஆளனியினரில் 30 சாரதிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனால் தற்போது இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள சாரதிகளின் விடுமுறை விண்ணப்பங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

03. அலுவலக நவீனமயப்படுத்தல்

அலுவலக கட்டமைப்பினை முறைப்படுத்தல் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளதுடன், அச்செயற் பாடுகள் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் உருவாக்கப் பட்ட கணனி மென்பொருள் சனாதிபதி செயலகத்தின் தகவல் தொடர்பாடல் பிரிவின் உதவி யுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. குறித்த கணனி மென்பொருளுக்கு தரவுகளை உள்ளீடு செய்தல் மற்றும் பரீட்சார்த்த ரீதியில் செயற்படுத்தல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கணனிக் கட்டமைப்பை உரியவாறு செயற்படுத்துவதன் மூலம் முகாமைத்துவத் தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல், கடதாசிப் பாவனையைக் குறைத்தல் மற்றும் நாளாந்த செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்ளல் என்பன எதிர்பார்க்கப்படுகிறது.

04. வாகனங்களைப் பழுதுபார்த்தல்

வாகனங்களைப் பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தும் போது வாகனத் தொழில்நுட்ப அலுவலர்களின் பூர்வாங்க மேற்பார்வையின் பின்னர் ஈடுபடுத்தப்படுவதனால் அனாவசிய பழுதுபார்த்தல்களுக்கான கோரிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பழுதுபார்த்தலகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் வாகனங்களை சோதனைக்குட்படுத்தி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்களை மீளப்பொறுப்பேற்று களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

05. எரிபொருள் பயன்பாடு

ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும்போது எரிபொருள் பயன்பாட்டினைத் திருப்திகரமான அளவுக்குக் குறைக்க முடிந்துள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

வருடம்	எரிபொருள் செலவு (ரூபா)
2014	350,000,000.00
2015	120,000,000.00
2016	140,000,000.00

(மேற்படி கொடுப்பனவுகள் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காகக் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வவுச்சர்களுக்கு அமைவாக கிட்டிய அளவில் கணக்கிடப்பட் டுள்ளது.)

- 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் சனாதிபதி செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 16.5 இலட்சம் பெறுமதியுடைய கூப்பன்கள் உபயோகிக்கப்படாது மீதமாகக் காணப்பட்டன. அக்கூப்பன்கள் 2016 ஆம் ஆண்டில் வாகன குழாமத்திலுள்ள வாகனங்களுக்காக உபயோகிக்கப்பட்டன.

06. வாகன விபத்துக்கள் மற்றும் அதற்கான நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்ளல்.

- விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதனால், குறித்த விபத்துக்கள் தொடர்பாக உரியவாறு விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூறவேண்டிய சாரதிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஊடாக இரு இலவச கருத்தரங்குகளை துரிதமாக நடத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

  காப்புறுதி நட்டஈடுகள் பின்வருமாறு பெறப்பட்டுள்ளன. (உத்தேசமாக கணக்கிடப்பட்டுள்ளன.)

வருடம்	கிடைத்த தொகை (ரூ.)
2016 ஆம் வருடத்திற்கு முன்னர் இடம்பெற்ற வாகன விபத்துக்களுக்காக 2016 ஆம் ஆண்டில் பெற்ற நட்டஈடு	16,000,000.00
2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களுக்காக 2016 ஆம் ஆண்டில் பெற்ற நட்டஈடு	15,000,000,.00

- கடந்த வருடங்களில் (2014 மற்றும் அதன் முன்னர்) பெற்றுக்கொள்ளப்படாத காப்புறுதி நட்டஈடுகள் மற்றும் சனாதிபதியின் செயலாளரின் பெயருக்கு காசோலைகள் பெறப்பட்டு உரிய கராஜ்களுக்கு செலுத்தி தீர்க்கப்படாத காப்புறுதி நட்டஈடுகள் அதிகளவு காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது. அவற்றுள் சில பிரச்சினைகள் காணப்படும் காப்புறுதிகள் தவிர ஏனையவை தீர்க்கப்பட்டுள்ளன.
- செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் சம்பள ஏற்றம் வழங்கும்போது கவனயீனமான வாகனம் செலுத்துதலையும் ஒரு அளவுகோலாக கருதுமாறு சனாதிபதியின் செயலாளர் ஆலோ சனை வழங்கியுள்ளார்.

07. அதிபாதுகாப்பு வாகனங்கள்

- அதிபாதுகாப்பு வாகனங்களை நவீனமயப்படுத்தி சாதாரண பயன்பாட்டிற்கு உட்படுத்த முடியாதென்பதால், விற்பனை செய்யவோ அல்லது தனியார் பயன்பாட்டிற்கு வழங்கவோ முடியாது. எனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைக்கமைவாக சமுத்திரச் சூழலுக்கு குறைவான பாதிப்பே ஏற்படும் வகையில் ஆழ்கடலில் மூழ்கச் செய்தலே இதுவரை அவ்வாறான வாகனங்களை அழிப்பதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறையாகும். இதற்கு மேலதிகமாக இவ்வாகனங்களை மீண்டும் வழங்குநர்களே கொள்வனவு செய்வதற் கான இயலுமை தொடர்பிலும் கேட்டறியப்பட்டது. ஏற்றுமதி செய்வதற்கான கப்பல் கட்டணம் மற்றும் மீள் சுழற்சிசெய்வதற்கான செலவுகள் அரசினால் ஏற்கப்படுமானால் இவ்வாகனங்களைப் பொறுப்பேற்க முடியுமென பென்ஸ் மோட்டர் வாகன உற்பத்தி நிறுவனம் அறிவித்துள்ளது.
- எனவே பாவனைக்குட்படுத்த முடியாத நிலையிலுள்ள அல்லது பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட குண்டு துளைக்காத 69 வாகனங்களை இலங்கை தரைப்படைக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
  தொழிநுட்ப பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஒருகொடவத்த தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கு ஒரு வாகனமும் பிரமுகர் பாதுகாப்பு பயிற்சி நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப் படையினருக்கும் தலா ஒரு வாகனமும் வழங்கப்பட்டுள்ளன.

08. வாகனங்களைக் கையளித்தல்.

- சிவில் பாதுகாப்புத் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், சுகாதார திணைக்களம் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் உள்ளிட்ட 16 அரச நிறுவனங்களுக்கு 95 வாகனங்கள் வீதம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- காலந்தாழ்த்தப்பட்ட குத்தகையடிப்படையில் LOLC நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட 76 வாகனங்களின் ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டு மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளன.
- கடற்படையின் யாழ்ப்பாண செயற்தளத்திற்கு ஒரு வாகனம் வழங்கப்பட்டுள்ளது.
- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் 7 வாகனங்களும், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 14 வாகனங்களும், சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 13 வாகனங்களும், உள்ளூராட்சி அமைச்சின் 3 வாகனங்களும், அரச கருமமொழிகள் திணைக்களத்தின் 3 வாகனங்களும் என்ற வகையில் அந்நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு மொத்தமாக 40 வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

09. சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றப் பொறுப்பிலுள்ள வாகனங்களை மீளப்பெற்றுக் கொள்ளுதல்

- காணாமல் போதல், திடீர் விபத்து, முறையற்ற பாவனை மற்றும் ஏனைய காரணங்களினால் நீதிமன்றங்களினால் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் சட்டரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

10. புதிய கொள்வனவுகள்

- அதிபாதுகாப்பு வாகனங்கள் மற்றும் விபத்துக்குள்ளாகின்ற வாகனங்களைக் கொண்டு செல்ல மாதாந்தம் அதிக செலவு ஏற்படுவதனால்,சனாதிபதி அலுவலகத்திற்கு இரு வாகனமேற்றும் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன. அதற்கமைய தனியார் துறைகளுக்கு செய்த கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன.
- திறைசேரியிலிருந்து காலந்தாழ்த்தப்பட்ட குத்தகை அடிப்படையில் 05 டபல் கெப் வாகனங்களும், 01 வானும், 04 மோட்டார் கார்களும் புதிதாகக் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதுடன், அவ்வாகனங்கள் சனாதிபதி அலுவலகத்தினதும், விசேட கருத்திட்ட பிரிவுகளினதும் பயன்பாட்டிற்காக உபயோகிக்கப்படுகின்றன.
- எழுச்சிபெறும் பொலன்னறுவை செயற்திட்டத்திற்கு 18 வாகனங்களும், 10 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளன.

11. புதிய செயற்திட்டங்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல்.

- புதிய செயற்றிட்டங்களாக சனாதிபதி செயலகத்தின் கீழுள்ள எழுச்சிபெறும் பொலன்னறுவை, அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டம், தேசிய விவசாய அபிவிருத்தி செயற்றிட்டம் (NADEP) என்பவற்றிற்கு தேவைக்கேற்ப கடமை நிமித்தம் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- போதைப்பொருள் ஒழிப்பு செயற்றிட்டம், தகவலறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு மற்றும் திறைசேரி பிணைமுறி பற்றிய சனாதிபதி விசாரணை ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுக்கும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- தேசிய வரவு செலவு திணைக்களத்தின் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப செயற்படுத்தப்படும் காலந்தாழ்த்தப்பட்ட குத்தகை அடிப்படையில் சனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களுக்கு வாகனங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

12. கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் அறிக்கைகளுக்கேற்ப தேவையான நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களின்போது போக்குவரத்து பிரிவின் செயற்பாடுகளை மிக வினைத்திறனாகவும், முறையாகவும் செயற்படுத்தல் தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படும். அத்தகைய கூட்டங்களின்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கேற்ப செயற்பட்டு அவற்றின் முன்னேற்றங்கள் அறிக்கையிடப்படும்.

சட்டத்துறைப் பிரிவு

அறிமுகம்

2015 மார்ச் 18 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இப்பிரிவானது, சனாதிபதி செயலகத்துடன் தொடர்புடைய அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தி ஆலோசனைகளை வழங்குகின்றது.

பொது இலக்குகள்/ பணிகள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களைப் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்படுகின்ற அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் மற்றும் சனாதிபதி செயலாளர் அல்லது அவரது ஆளணியினர் தொடர்பில் நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குகளின் ஒருங்கிணைப்பு மற்றும் பிரதிநிதித் துவப்படுத்தல்.

- இந்நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளினதும் சட்ட சிக்கல்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளுக்கமைவாக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- சனாதிபதி செயலகத்தினால் வேறு தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகளை ஆராய்ந்து அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

- அமைச்சரவை உபகுழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற சட்டவரைபுகள் தொடர்பில் அவதானிப்புக்களை வழங்குதல்

- சனாதிபதி அவர்களினால் குறிப்பிடப்படும் கோவைகள் தொடர்பாக உரிய அறிக்கைகளைப் பெற்று அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல்

- அமைச்சரவையினால் சனாதிபதியின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படும் புதிய சட்ட ஒழுங்கு விதிகள் தொடர்பில் தேவையான சந்தர்ப்பங்களின்போது அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல்.

2016 இல் அடையப்பெற்றவைகள்

- 2015 ஆண்டின் முன்கொண்டுவரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை - 35
- 2016 ஆண்டில் கிடைத்த வழக்குக் கோவைகளின் எண்ணிக்கை - 24
- மொத்த வழக்குக்கோவைகளின் எண்ணிக்கை - 59

மொத்த வழக்குக் கோவைகளின் எண்ணிக்கை	2015 மற்றும 2016 ஆம் ஆண்டுகளில் முடிவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை	மேலும் விசாரணை இடம்பெறும் வழக்குகளின் எண்ணிக்கை
59	24	35



➢ **சனாதிபதி செயலகத்தினால் வேறு தரப்பினருடன் கைச்சாத்திடப்பட்ட மற்றும் ஆய்வு செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டுக்குரிய உடன்படிக்கைகள் பற்றிய சுருக்கக் குறிப்புக்கள்**

- சீன தொழில்நுட்பக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டுள்ள பேலியகொட களஞ்சிய தொகுதிக்கான புதிய உடன்படிக்கை.
- சனாதிபதி பாதுகாப்பு பிரிவின் தங்குமிட வசதிக்காக இல.1 முதலிகே மாவத்தையில் அமைந்துள்ள 7 ஆம் இலக்க கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- கொழும்பு 01 சனாதிபதி மாவத்தை இல.17 கொண்ட கட்டிடத்திற்கான பாதுகாப்புச்சேவை உடன்படிக்கை.
- கொழும்பு 1, செத்தம் வீதி, இல.21 இல் அமைந்துள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- கொழும்பு 1,சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, இல.6 இல் அமைந்துள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- கொழும்பு 1, செத்தம் வீதி, இல.93 இல் அமைந்துள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- கொழும்பு 3, ஆர்.ஏ.டீ.மெல் மாவத்தையில்,சோலைவரி இல.10/C உடைய கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- கொழும்பு 1, சனாதிபதி மாவத்தை, இல.41 இல் அமைந்துள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- பெஜட் வீதியில் அமைந்துள்ள சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகில் துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம்.
- கொழும்பு 7, லோண்டன் பிரதேசம், இல.30/75A இல் அமைந்துள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- கொழும்பு 1, செத்தம் வீதி, இல.61 இல் அமைந்துள்ள கட்டிடத்திற்கான குத்தகை ஒப்பந்தம்.
- பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் 5 ஆவது பிரிவின் முதல் மாடிக்கான குத்தகை ஒப்பந்தம்.
- சனாதிபதியின் செயலாளருக்கும் Hayleys Agriculture Holdings Ltd நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம்.
- தேசிய விவசாய உற்பத்திகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள்.
    - நெல்னா பாம் தனியார் நிறுவனத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சோள உற்பத்திக்கான கருத்திட்டம்.

- ஹேலீஸ் எக்வ எக்ரீ தனியார் நிறுவனத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்கு மிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள கடற் தாவர உற்பத்திக்கான கருத்திட்டம்.
- Sunfrost தனியார் நிறுவனத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள தேனீ வளர்ப்பு கருத்திட்டம்.
- Fonterra Brands Srilanka மற்றும் Chello Dairy Products தனியார் நிறுவனத் திற்கும் சனாதிபதி செயலகத்திற்குமிடையில் கைச்சாத்திடப்படவுள்ள திரவப் பால் உற்பத்தி கருத்திட்டம்.
- Hayleys Agro farm தனியார் நிறுவனத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்குமிடையே கைச்சாத்திடப்படவுள்ள பெரிய வெங்காய உற்பத்திக்கான கருத்திட்டம்.
- CIC Grains தனியார் நிறுவனத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்குமிடையே கைச்சாத்திடப்படவுள்ள சோள உற்பத்திக்கான கருத்திட்டம்.
- CIC Agri Products Export (pvt) ltd மற்றும் சனாதிபதி செயலகத்திற்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள சுகாதார பாதுகாப்பான அரிசி உற்பத்திக்கான கருத்திட்டம்.
- HJS Condiments (pvt) ltd மற்றும் சனாதிபதி செயலகத்திற்கிடையில் கைச்சாத் திடப்படவுள்ள கொடித்தோடை உற்பத்திக்கான கருத்திட்டம்.
- Lanka Eco Products நிறுவனத்திற்கும் சனாதிபதி செயலகத்திற்குமிடையே கைச்சாத்திடப்படவுள்ள கித்துள் பாணி மற்றும் கித்துள் கருப்பட்டி உற்பத்திக்கான கருத்திட்டம்.
- வரையறுக்கப்பட்ட லங்கா போல்ட்ரி டிவலொப்மென்ட் நிறுவனத்தின் கோழி வளர்ப்பு அபிவிருத்தி கருத்திட்டம்.

➢ சுங்க திணைக்களத்தினால் விசேட சுங்க வரி விதிக்கப்பட்டு 212 டொயோட்டோ பிராடோ (Toyota Prado) வகை வாகனங்கள் விடுவிக்கப்பட்டமையினால் அரசிற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாவென கண்டறிவதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களின் தீர்மானத்திற்கேற்ப குழுவொன்று நியமிக்கப்பட்டது. சனாதிபதியின் மேலதிக செயலாளர் (நீதி) திருமதி. லக்ஷ்மி ஜயவிக்ரம அக்குழுவின் தலைமைப்பதவியை வகித்ததுடன், ஏனைய உறுப்பினர்களாக சனாதிபதியின் சிரேட்ட உதவிச் செயலாளர் திரு. நாலக்க கலுவெவ, அரசிறைக் கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி. அனுலா ஹரஸ்கம மற்றும் முன்னாள் பிரதி கணக்காய்வாளர் அதிபதி கே.ஏ.பீ.எஸ். நாணயக்கார ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அக்குழுவினால் சகல சாட்சியாளர்களும் வரவழைக்கப்பட்டு விசேட விசாரணையொன்று நடத்தப்பட்டு குறித்த விசாரணை யின் இறுதி அறிக்கை 2016.12.09 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் கையளிக்கப் பட்டது.



➢ நீதிமன்ற சேவையிலுள்ள நீதிபதிகளின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில் கூட்டமொன்று நிகழ்த்தப்பட்டது. அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

➢ அரசியலமைப்பு திருத்தம் பற்றிய அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல்.

மருத்துவச் சேவைகள் பிரிவு

அறிமுகம்

சனாதிபதி செயலகத்தில் இயங்கும் வைத்திய சேவைப் பிரிவானது, சனாதிபதியின் செயலாளரின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருவதோடு கௌரவ சனாதிபதி அவர்களினதும், அவரது நெருங்கிய உறவினர்களினதும், சனாதிபதி செயலக உத்தியோகத்தர்களினதும் சுகாதாரத்தை சிறந்த நிலையில் பேணிவருவதற்குத் தேவையான ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் வழங்குகின்றது

மேலும்,

அதற்கு மேலதிகமாக பொருளாதார நெருக்கடியுள்ள பிரசைகளின் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நிவாரண நடவடிக்கைகளைத் திட்டமிடுதலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது

பொதுப் பணிகள்/நோக்கங்கள்

- அதிமேதகு சனாதிபதி அவர்களின் வாகனத் தொடரணியுடன் பயணிக்கும் அம்பியுலன்ஸ் வண்டியை தயார்நிலையில் வைத்திருப்பதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதுடன், அதனை தயார் நிலையில் வைத்திருத்தல்.
- குறித்த அம்பியுலன்ஸ் வண்டியின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானித்து தேவையான சந்தர்ப்பங்களில் அதற்காகத் தலையிட்டு செயற்படல்.
- அதிமேதகு சனாதிபதி அவர்களின் சுகாதார தேவைகளை இந்நாட்டிலும், வெளிநாட்டிலும் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவருடனே பயணித்தல்.
- அலுவலக உத்தியோகத்தர்களின் சிறந்த சுகாதார நிலையினை பேணிச்செல்வதற்குத் தேவையான அறிவூட்டல்களை வழங்குவதற்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- அலுவலக உத்தியோகத்தர்களின் வைத்திய சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கு வதற்கும், சிகிச்சையினை மேற்கொள்வதற்கும் மருத்துவ நிலையமொன்றைப் பேணிச் செல்லல்
- அலுவலக உத்தியோகத்தர் விசேட நிபுணர்களின் வைத்திய சிகிச்சைகளைப் பெறவேண்டிய சந்தர்ப்பங்களில் ஏனைய விசேட சுகாதார நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
- அலுவலகத்தினால் பொதுமக்களின் நலனுக்காக காலத்திற்குக் காலம் திட்டமிட்டு கஷ்டப் பிரதேசங் களில் நடத்தப்படும் சுகாதார செயற்றிட்டங்களின் தரத்தினைப் பேணுவதற்காக தேவையான ஆலோசனைகளையும், செயற் பங்களிப்பையும் தேவையான அனைத்து சந்தர்ப்பங்களிலும் வழங்குதல்.
- நாட்டில் நிலவும் தேவைக்கேற்ப அவ்வவ்சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய எந்தவொரு சுகாதார நடவடிக்கைக்கும் தேவையான செயற்றிட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்தல்.

2016 ஆம் ஆண்டின் அடைவுகள்

குறைந்த வயது விவாகங்கள், போதைப்பொருள் பாவனை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் குடும்ப ஆலோசனை நிகழ்ச்சித்திட்டமொன்று கொடவெஹேரமங்கட மகா வித்தியாலயம் மற்றும் ஹம்பேகமுவ மகாவித்தியாலயத்தில் 2016.04.30 ஆம் திகதி இடம்பெற்றது (பலாங்கொட வெலிஓய பிரதேசத்தில்)





பலாங்கொடை வெலிஓய பிரதேச மக்களது சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக 2016.05.07 ஆந் திகதி வைத்திய கிளினிக் ஒன்று நடாத்தப்பட்டதுடன் அதற்கு இணையாக அப்பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் கருத்திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டது.







கண்களில் தோன்றும் வெண்புள்ளி நோயினால் அவதியுறும் பொருளாதார நெருக்கடியுடைய மக்களுக்கு நடளாவிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 19 மருத்துவமனைகளில் கண்களில் வெண்புள்ளியை நீக்கும் 1000 சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளல். – 2016.09.02





தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணியகம்

அறிமுகம்

தேசிய ஒருமைப்பாட்டிற்கான அலுவலகம் 2015 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் கௌரவ பிரதமரினால் முன்வைக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் அடிப்படையில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் 2015.12.18 ஆம் திகதி 1945/41 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவிப்பின் பிரகாரம் தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம் தொடர்பான அமைச்சின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நோக்கங்கள்

அமைப்பாண்மை குறிக்கோள்கள் :-

01. பல்வேறு இனங்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் செய்தலும் நெறிப்படுத்தலும்.
02. விழிப்புணர்வு ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமை, தெளிவு என்பவற்றை அனைத்து மக்கள் மத்தியில் கட்டியெழுப்பும் நல்லிணக்கத்திற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக அரசாங்கத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தலும் பரிந்துரை செய்தலும் அதனைத் தொடர்ந்து நெறிப்படுத்தலும்.

பதவி	பணிக்குழாம்	நிலை	வெற்றிடம்
பணிப்பாளர் நாயகம்	01	01	
பணிப்பாளர் /ஆலோசகர்	03	03	
பிரதிப் பணிப்பாளர்	03	03	
உதவிப் பணிப்பாளர்	08	08	
நிருவாக உத்தியோகத்தர்	01	01	
கணக்கீட்டு உத்தியோகத்தர்	01	01	
முகாமைத்துவ உதவியாளர்	06	06	
அலுவலக உதவியாளர்	03	03	
சாரதிகள்	05	03	02
மொத்தம்	**31**	**29**	**02**

அபிவிருத்தி கருத்திட்டங்களின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள்

தொடர் இலக்கம்	நிதி மூலங்கள்	பெறுமதி (ரூபா மில்லியன்)
01	பொதுத்திறைசேரி	249.00
02	ஞானம் மன்றம்	20.78
03	ஐக்கிய நாடுகள் சபையில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	19.88
04	சிறைச்சாலைகள் புனரமைப்பு, புனர்வாழ்வு மீள்குடியேற்ற, இந்து சமய அலுவல்கள் அமைச்சு	10.00
மொத்தம்		**289.66**

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

01. கருத்திட்டம் கொள்கை மற்றும் ஆராய்வு

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு : நல்லிணக்கம் தொடர்பான தேசிய கெள்கை

செயலாற்றுகை சுட்டி : தேசிய நல்லிணக்கம் தொடர்பான கொள்கை

பௌதீக முன்னேற்றம் :

- விசாரணை அறிக்கை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, 2011 - 2016 தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டம், சமூக ஒருங்கி ணைப்பு தொடர்பான தேசிய கொள்கை, சமாதானத்திற்கான பல்கலாசார நோக்கு, சிவில் சமூக அறிக்கைகள் மற்றும் இலங்கை நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளின் நிலைமை குறித்த சர்வதேச பிரகடனம் போன்ற ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட நல்லிணக்கத்துடன் தொடர்புடைய அம்சங்கள் குறித்த மீளாய்வும் ஆராய்ச்சியும்

- அரசாங்கத்தின் நிறுவனங்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட பிரதான அத்துடன் விரிவான தரப்புகள் மற்றும் பிரிவுகள், நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறையை ஒருங்கிணைப்புச் செய்வதற்கான செயலகம், நல்லிணக்கம் தொடர்பான பொறிமுறைகளை ஒருங்கிணைப்பு செய்யும், சட்டவாக்க மறுசீரமைப்பு மக்கள் பிரதிநிதித்துவ ஆணைக்குழு, நல்லிணக்கம் தொடர்பான ஆலோசனை செயலாற்றுகை செயலணி, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, தேசிய உரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு, அறிஞர்கள், ஆய்வாளர்கள் சிவில் சமூக உறுப்பினர்கள் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள், கொள்கை செயலமர்வுகள் ஊடாக ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அமைப்புகளில் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், இலக்குக் குழுக் கூட்டங்கள் மற்றும் பிரதான நபர்களின் நேர்முக கலந்துரையாடல்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகள்.

- 2017 – 2021 காலத்திற்கான தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தில் அரசாங்க முன்னோடிக் குழுவுக்கும் அரசாங்க ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் செய்யப்பட்ட பிரதிநிதித்துவங்கள்.

- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நல்லிணக்கம் தொடர்பான தேசிய கொள்கைக்கான அமைச்சரவைக் குறிப்பு அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டதுடன், மேலதிக கலந்துரையாடலை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் : ரூபா 0.28 மில்லியன்

நிதி முன்னேற்றம் : ரூபா 0.28 மில்லியன்





தேசிய கொள்கையைத் தயாரிப்பதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு

கருத்திட்டத்தின் பெயர்: சமூக ஒருமைப்பாட்டுக்கான கல்வி

எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்:

சாதாரண கல்வி முறைமையினூடாக நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருமைப்பாட்டை ஒன்றிணைப்பதற்கான தேசிய மற்றும் மாகாண மட்ட இணைந்த கொள்கை

செயலாற்றுகை சுட்டி:

அ. அடிப்படை ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆ. கொள்கைச் சட்டகம் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

இ. முழுமைப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை

ஈ. தொடர்புபட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம்

- சாதாரண கல்வியினூடாக சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை ஒன்றிணைப்பதற்கு அமைச்சுக்களிடையேயான ஒரு முன்னோடி குழு அமைக்கப்பட்டுள்ளது.
- சமூக ஒருமைப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாட்டுத்திட்டம் முழுமைப்படுத்தப் பட்டுள்ளது.
- வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்திய, மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள 160 கல்வி அதிகாரிகளுக்கான சமூக ஒருமைப்பாடு தொடர்பான மூன்று நாள் கருத்தரங்கு நடைபெற்றது.
- பாடசாலைகளில் சமூக ஒருமைப்பாடு தொடர்பான நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது குறித்து மாகாண முதலமைச்சர்களுடன் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.
- இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் பாடசாலைகளில் சமூக ஒருமைப்பாடு தொடர்பாகச் செயற்படும் சிவில் சமூக அமைப்புகளுக்காக உணர்வுபூர்வமான செயலமர்வு நடாத்தப்பட்டது.
- சிவில் சமூக அமைப்புகளுக்காக பழக்கப்படுத்தும் ஒரு செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது.
- 80 ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் 400 மாணவர்களின் பங்குபற்றுதலுடன் மத்திய, தெற்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களில் சகோதர பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடு : ரூபா 11.75 மில்லியன்

நிதி முன்னேற்றம் : ரூபா 11.71 மில்லியன்





கல்வி அதிகாரிகளுக்காக நடத்தப்பட்ட உணர்வுபூர்வமான செயலமர்வு

03. கருத்திட்டத்தின் பெயர்: முரண்பாட்டு மாற்றுத் திட்டம் (நம்பிக்கையூட்டும் கலந்துரையாடல்)

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு : முரண்பாட்டு மாற்றத்திட்டத்தின் ஊடாக தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக நம்பிக்கையூட்டும் கலந்துரையாடல்கள் இனங்களுக்கிடையில், புத்திக்கூர்மைமிக்க மட்டத்திலான கலந்துரையாடல்களை மேம்படுத்தல்.

செயலாற்றுகை சுட்டி:

அ. நடாத்தப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை

ஆ. பயிற்றப்பட்டுள்ள பயிற்றுவிப்பாளர்களின் எண்ணிக்கை

இ. பயிற்றப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை

ஈ. நடாத்தப்பட்டுள்ள கலாசாரங்களுக்கிடையிலான உரையாடல்களின் எண்ணிக்கை

உ. கீழ்மட்டங்களில் நடாத்தப்பட்டுள்ள செயலமர்வுகளின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம் :

- 33 பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் ஐந்து நாள் (ToT) நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணம், இரத்தினபுரி மற்றும் அநுராதபுரத்தில் மூன்று முன்னோடி (Orientation) நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- பயிற்றுவிப்புக்கான உபாய முறை திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான இரண்டு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது.
- பல் சமயத்தவர்கள் 8,000 பேருக்கு யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் ஒரு நாள் செயலமர்வுகள் 220 முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.
- 28 பயிற்றுவிப்பாளர்களுக்கு இரண்டு நாள் மீளாய்வு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- உயர்கல்விக்காக நல்லிணக்கம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடு : 18.55 மில்லியன் ரூபா
நிதி முன்னேற்றம் : 18.55 மில்லியன் ரூபா





பல்சமய பிரதிநிதிகளுக்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் (ToT) செயலமர்வு

04. கருத்திட்டத்தின் பெயர் : பல்சமய விழாக்கள்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு: பல்சமய, பல்கலாசார மாணவர்களின் பங்குபற்றுதலுடன் அனைத்து சமயங்களினதும் முக்கிய விழாக்களை கொண்டாடுதல்.

செயலாற்றுகைச் சுட்டி:

அ. முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை

ஆ. பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை

இ. பங்குபற்றிய பாடசாலைகளின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம் :

- நாட்டில் 21 மாவட்டங்களில் உள்ள 1009 பாடசாலைகளில் 47,514 மாணவர்களின் பங்குபற்று தலுடன் தைப்பொங்கல், சிங்கள தமிழ் புத்தாண்டு, பொசன், ரமழான் பண்டிகை மற்றும் நத்தார் பண்டிகை ஆகிய 133 பல்கலாசார நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் : 14.94 மில்லியன் ரூபா

நிதி முன்னேற்றம் : 14.94 மில்லியன் ரூபா






ரமழான், சிங்கள தமிழ் புத்தாண்டு மற்றும் பொசன் விழாவைக் கொண்டாடுவதற்கான பல்சமய நிகழ்ச்சித்திட்டம்

05. கருத்திட்டத்தின் பெயர்: உளச் சமூகரீதியான உதவி

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு :

அ. உடனடி உளச் சமூக உதவி வழங்குவதை ஒருங்கிணைப்பதற்கான செயலணியொன்றைத் தாபிப்பதனூடாக பிரச்சினையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உளச்சமூக சேவையை வழங்குவதற்கான வசதிகளைத் திட்டமிடுதல்

ஆ. உளச் சமூக தேவைப்பாடுகள் தொடர்பில் செயற்படுவதற்கு நீண்டகால மூலோபாய அபிவிருத்தி முறைகளை விருத்தி செய்தல்.

செயலாற்றுகை சுட்டி :

அ. செயலணியொன்று அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டுவருகிறது.

ஆ. உளச் சமூக ஆலோசனைக்காக நீண்டகால மூலோபாய முறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

பௌதீக முன்னேற்றம்:

- உளச் சமூக உதவிக்கான செயலணி முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.
- உளச்சுகாதாரம், உளச்சமூக உதவிக்கான தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்புப் பொறிமுறை தாபிக்கப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலோசகர்கள் மற்றும் வைத்தியர்கள் 65 பேருக்கு (உளச்சிகிக்சை) Trauma&Psycotherapy தொடர்பான செயலமர்வு நடத்தப்பட்டது.
- முல்லைத்தீவு மாவட்டத்தில் உளச்சுகாதாரம் மற்றும் உளச் சமூக செயற்பாட்டாளர்கள் 543 பேரின் பங்குபற்றுதலுடன் ஆரம்ப ஈடுபடல் மற்றும் தொடர்பாடல் திறன் தொடர்பான அறிமுக செயலமர்வொன்று நடத்தப்பட்டது. (தாதியர்கள், சுகாதாரச்சேவை உதவியாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் பிரதேச செயலாளர் அலுவலக ஆலோசனை உதவியாளர்கள் மற்றும் சமுதாய உதவி ஏற்பாட்டாளர்கள்)

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் : ரூபா 1.10 மில்லியன்

நிதி முன்னேற்றம் : ரூபா 1.10 மில்லியன்





06. திட்டத்தின் பெயர்: நல்லிணக்கம் தொடர்பான கலை மற்றும் கலாசாரம்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு :

முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க செயற்பாடுகளுக்கான கருவிகளாக கலை மற்றும் கலாசாரத்தைப் பயன்படுத்தல்.

செயலாற்றுகைச் சுட்டி:

அ. மேற்கொள்ளப்பட்டுள்ள தயாரிப்புகளின் எண்ணிக்கை (திரைப்படம், நாடகம், நடனம், ஓவியம் மற்றும் கலையுடன் தொடர்புடைய ஆக்கங்கள்)

பௌதீக முன்னேற்றம்:

- அசோக்க ஹந்தகம, விமுக்தி ஜயசுந்தர மற்றும் பிரசன்ன விதானகே ஆகியோர்களால் திரைப் படங்களைத் தயாரித்தல்.
- கார்ட்டூன் கேலிச்சித்திரப் போட்டியொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் தெரிவு செய்யப் பட்ட சிறந்த ஆக்கங்களை காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- பல்சமய மற்றும் கலாசார நிகழ்வுகள் தொடர்பான கையேடு ஆரம்ப செயலமர்வு நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் நிறைவுபெற்றுள்ளது.
- வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாகாணங்களுக்கான WINGS பிராந்திய நிகழ்வுகள் நிறுவன மாநாடுகள், உணவு விழா மற்றும் நடனக்கலை அம்சங்களுடன் நடைபெற்றது.
- "அன்பான பிள்ளைகள்" மேடை நாடகக் காட்சி முன்காட்சி நடாத்தப்பட்டது.
- நல்லிணக்கம் தொடர்பான வானொலி ஒலிபரப்பு நாடகத் தொடருக்கான உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள்: ரூபா 18.73 மில்லியன்
நிதி முன்னேற்றம்: ரூபா 18.73 மில்லியன்





WINGS விழாவுக்காக கலைஞர்களுடனான கலந்துரையாடலும் ஊடகச் சந்திப்பும்

07. கருத்திட்டத்தின் பெயர்: மக்கள் தெளிவூட்டலும் தாக்கமும்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு:

பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் உபாயமுறைகள் மற்றும் மக்கள் ஈடுபாடு

செயலாற்றுகை சுட்டி:

அ. புரிந்துணர்வுமிக்க உபாய முறை தொடர்பாடல் திட்டத்தை அபிவிருத்தி செய்தல்
ஆ. உபாய முறைகளுடன் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களின் எண்ணிக்கை
இ. இணையத்தளங்களுக்கிடையிலான செயற்பாடுகள் மற்றும் சமூக ஊடகத்தளங்களைத் தாபித்தல்
ஈ. தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம்:

- தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்திற்கான (ONUR) உத்தியோக பூர்வ இணையத்தளம் www.onur.gov.lk ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- டுவிட்டர் மற்றும் பேஸ்புக் சமூக ஊடக வலையமைப்புகள்/கணக்குகள் முறைப்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமாக 'சிக்கா டீம்' என்ற (ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட) சிங்கள மொழிமூலமான தொலைக்காட்சி நாடகத்தொடரை ஆரம்பித்தல்.
- நல்லிணக்கம் தொடர்பான ஊடக ஒன்றியம் தாபிக்கப்பட்டுள்ளது.
- தொடர்பாடல் தொடர்பான அமைச்சுக்களுக்கிடையிலான முன்னோடிக்குழு ஆரம்பிக்கப்பட்டது.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினூடாக விசேட தொலைக் காட்சி ஆக்கமான தைப்பொங்கல் தொடர்பான நிகழ்ச்சி (சியத்த தொலைக்காட்சி) தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்துடன் தொடர்புடைய சிங்கள, தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சி (சுயாதீன தொலைக் காட்சி) காட்சிப்படுத்தல் மற்றும் வட மாகாணத்தில் குடிநீர் நோக்கத்திற்காக மழைநீரைச் சேகரித்தலும் மாவட்ட அபிவிருத்தித் திட்டமிடலும் (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்) தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்
- 'சகோதர பாடசாலை' நிகழ்ச்சித்திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய விவரணமும் நல்லிணக்கம் தொடர்பான விவரணமும் News.lk ஊடாக அரசாங்க தகவல் திணைக்களத்துடன் தொடர்புபடுத்தல்.
- இலங்கை விழுமியங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டும் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தல், உளப்பாங்கு மாற்ற எண்ணக்கருவாக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் (ONUR) மூலம் வசதியளிக்கப்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஆலோசனைத் தொடர் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்துடன் தொடர்புடைய ஊடக வெளியீடுகள் அறிவித்தல்கள் உள்ளடங்கிய 23 நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பிரதான பத்திரிகை மாநாடு மூன்று மற்றும் வேறு ஆறு ஊடக மாநாடுகள் நடாத்தப்பட்டன.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் 'சன்ஹிந்த' உத்தியோக பூர்வ செய்தி வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது.
- 'சன்ஹிந்த' பேஸ்புக் உரையாடல் குழுவொன்று அமைக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. (தற்போது அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,300)

'சன்ஹிந்த' செய்தி வெளியீட்டை இற்றைப்படுத்தி பராமரித்து தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்துடன் தொடர்புடைய செய்திகளை வெளியிட திட்டமிடுதல், உறுப்பினர்களை ஒன்று சேர்த்தல், முகநூல் பக்கத்தை அனைத்து தேசிய சர்வதேச உத்தியோகபூர்வ முகநூல் பக்கங்களுடனும் இணைத்தல் (அரச, அரசசார்பற்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிபுணத்துவ துாதுக்குழுக்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள்) (தற்போது உறுப்பினர்களின் எண்ணிக்கை 400)

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடு: ரூபா 1.18 மில்லியன்

நிதி முன்னேற்றம்: ரூபா 1.18 மில்லியன்





தொலைக்காட்சி உபகரணங்கள்



சிக்கா' தொலைக்காட்சி நாடகத்தை ஆரம்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.



நல்லிணக்கம் தொடர்பான ஊடக ஒன்றியம்



www.news.lkஅரச தகவல் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு



தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் (ONUR)% மூலம் வசதியளிக்கப்பட்ட செயலமர்வுகளும் ஆலோசனை அமர்வுகளும்

08. கருத்திட்டத்தின் பெயர்: நல்லிணக்கத்திற்கான பெண்கள்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு:

பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

செயலாற்றுகை சுட்டி :

அ. நல்லிணக்கத்திற்கான பெண்கள் என்ற தலைப்பில் ஒரு வேலைச்சட்டகம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.
ஆ. இடைவெளி பகுப்பாய்வு (Gap Analysis) அறிக்கை
இ. நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை
ஈ. ஆட்கள் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பில் செவிமடுத்த பிரச்சினைகளின் எண்ணிக்கை
உ. இனங்காணப்பட்ட ஆட்கள் மற்றும் சமூக பாதுகாப்புடன் தொடர்புடைய தேவைகளின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம் :

- நல்லிணக்கத்திற்கான பெண்கள் என்ற தலைப்பிலான வேலைச்சட்டகத்தைத் தயாரிப்பதற்கான செயலமர்வு நடத்தப்பட்டது.
- மகளிர் விவகாரங்களில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களான அபிவிருத்தி பங்காளர்களுடன் ஒரு கூட்டம் நடத்துதல்
- இடைவெளி பகுப்பாய்வு முழுமைப்படுத்தப்பட்டு மகளிர் விவகார, சிறுவர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல்.
- கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நான்கு (நடமாடும் சேவை) நடத்தப்பட்டதுடன், நபர்கள் 2594 பேருக்கு அவர்களது அடிப்படை ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வசதியளித்தல் (1101 பிறப்புச்சான்றிதழ்கள், 178 பொலிஸ் அறிக்கைகள், 15 குடிவரவு நடவடிக்கைகள், 975 தேசிய அடையாள அட்டைகள்) மற்றும் ஏனைய பொது சேவைகள் (ஓய்வூதியத்துடன் தொடர்புடையவை 51 வாழ்வாதார உதவித்தொகைகள் 618) தொடர்பாக ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது.
- நடமாடும் சேவைகளினூடாக விண்ணப்பித்த வாழ்வாதார உதவித்தேவைகள் தேவையான நபர்கள் 99 பேருக்கு கைத்தொழில் அபிவிருத்திச்சபையினூடாக வியாபாரத்திட்டங்களை தயாரிப்பதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில் 92 பயனாளிகளினால் தமது வியாபாரத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு முன்வைக்கப்பட்டது.





கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற நடமாடும் சேவை





பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் பங்குபற்றியவர்கள்





வியாபார அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான நிகழ்ச்சி

09. கருத்திட்டத்தின் பெயர்: மொழிதொடர்பான நிகழ்ச்சித்திட்டம்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு :

இருமொழி அல்லது மும்மொழி திறமைகொண்ட வளவாளர்களின் மாவட்ட மட்டத்திலான ஒரு தரவுதளத்தை தாபித்தல்

செயலாற்றுகை சுட்டி :

அ. இருமொழி மற்றும் மும்மொழி திறன்கொண்ட வளவாளர்களின் மாவட்ட மட்ட தரவுத்தளமொன்றைத் தாபித்தல்

பௌதீக முன்னேற்றம் :

- தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க பணியகத்தினூடாக மாவட்ட மட்டத்திலான இருமொழி, மும்மொழி திறமையுள்ள வளவாளர்களின் தரவுத்தளமொன்றைத் தாபித்தல் என்ற தலைப்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக் குறிப்பொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிதி அமைச்சு மற்றும் நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் அவதானிப்புகளுடன் அது 2016 மார்ச் மாதம் 30 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

- நாட்டில் 25 மாவட்டங்களில் 1426 விண்ணப்பங்கள் கிடைத்ததுடன் அவற்றில் 301 பேர் இருமொழி, மும்மொழி திறன்கொண்டவர்களாக அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட வாய்மூல மற்றும் எழுத்துமூல பரீட்சையினூடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
- தகைமையுடைய மொழிபெயர்ப்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்காக பயன்படுத்தக்கூடியவகையில் www.bashawa.lk என்ற இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- 2016/26 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளதுடன் அதில் இணையத்தள வசதிகளை வழங்குவது தொடர்பாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள்: ரூபா 3.62 மில்லியன்
நிதி முன்னேற்றம்: ரூபா 3.62 மில்லியன்



நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சைக்காக பதிவு செய்தல்



எழுத்துமூல மொழி நிகழ்ச்சித்திட்டம்



அரசகருமமொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வாய்மொழிமூல பரீட்சை



இருமொழி/மும்மொழி வசதியளிக்கும் வளவாளர்களின் குழாமொன்றை ஆரம்பித்தல்



அரகக்ருமமொழி ஆணையாளர் மற்றும் ONUR க்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்



www.bashawa.lk இணையதளம்

10. கருத்திட்டத்தின் பெயர்: மழைநீர் சேகரிக்கும் திட்டம் (Rain Water Harvesting)

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு :

அ. வடபகுதியில் நிலவும் கடும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு இடைக்கால தீர்வாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் மழை நீர் சேகரிக்கும் 500 அலகுகளை முழுமைப்படுத்தல்

செயலாற்றுகைச் சுட்டி :

அ. முழுமைப்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிக்கும் அலகுகளின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம் :

491 மழைநீர் சேகரிக்கும் அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள்: ரூபா 9.61 மில்லியன்
நிதி முன்னேற்றம்: ரூபா 9.61 மில்லியன்





யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் மழை நீர் சேகரிக்கும் அலகுகளை அமைப்பதற்கு முன்பும் அமைக்கப்பட்ட பின்னரும்

11. கருத்திட்டத்தின் பெயர்: வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரத்தில் ஈடுபடும் நிகழ்ச்சித் திட்டங்கள்

எதிர்பார்க்கப்படும் பெறுபேறு :

அ. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எட்டு மாவட்டங்களுக்காக ஒருங்கிணைந்த மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்

ஆ. வாழ்வாதார மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனூடாக மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்

செயலாற்றுகை சுட்டி :

அ. முழுமைப்படுத்தப்பட்டுள்ள மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களிள் (DDPs) எண்ணிக்கை

ஆ. நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தித்திட்டங்களின் எண்ணிக்கை

இ. முழுமைப்படுத்தப்பட்டுள்ள வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்களின் எண்ணிக்கை

ஈ. பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை

பௌதீக முன்னேற்றம்:

- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் (08) முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.
- வடமாகாணத்தின் 34 பிரதேச செயலாளர் அலுவலகங்களின் 34 கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு வியாபார அபிவிருத்தித் திட்டம் (VBEDP) முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரத்துடன் தொடர்புடைய 34 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடன் வசதிகளுக்காக 600 தனிப்பட்ட வியாபாரத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இரண்டிலும் எட்டு மாவட்டங்களில் 42 வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களும் 101 சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களும் 18 உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தித் திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடுகள் : ரூபா 199.00 மில்லியன்
நிதி முன்னேற்றம் : ரூபா 199.00 மில்லியன்





யாழ்ப்பாண மாவட்டத்தில் அன்னாசிச் செய்கை முன்னோடிக்கருத்திட்டம் மற்றும் வடமாகாணத்தில் பொருளாதாரத்தில் ஈடுபடுவதை செயற்படுத்துவதற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

சனாதிபதி விசாரணை ஆணைக்குழு

அறிமுகம்

2015.03.06 ஆம் திகதி மற்றும் 1904/57 ஆம் இலக்கமிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பாரிய ஊழல் மோசடி, அரச வளங்கள், சிறப்புரிமைகள், அதிகாரம் மற்றும் அதிகாரப்பீட்தை துஷ்பிரயோகம் செய்தல் குறித்து புலனாய்வு செய்வதற்காக இவ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது.

2016 மார்ச் மாதம் 24 ஆம் திகதியாகும் போது 1599 மனுக்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்திருந்ததுடன் 2016 மார்ச் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் புதிதாக மனுக்கள் பொறுப்பேற்பதை நிறுத்துவதற்கு ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

2015.03.06 ஆம் திகதிய 1904/57 ஆம் இலக்கமிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கமைய இம் மனுக்கள் பகுத்தாயப்பட்டன.

- ஆணைக்குழுவின் நியதிகள் மற்றும் கட்டளைகளுக்கமைய அரச சொத்துக்கள் மற்றும் வருமானங் களுக்கு நஷ்டம் அல்லது பங்கம் ஏற்பட்டதாகத்தென்படாததால் 1180 மனுக்கள் தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டது.

- ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களிடம் புலனாய்வுக்காக சமர்ப்பிக்கும் பொருட்டு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 400 ஆகும்.

- ஆணைக்குழுவினால் கவனத்திற் கொள்வதற்காக மேலும் 11 முறைப்பாடுகள் உள்ளன.

- ஆணைக்குழுவினால் கவனத்திற் கொள்ளப்படாத மனுக்களின் எண்ணிக்கை 08 ஆகும்.